**வீட்டுத் திருத்தவேலைகள் சட்லைட் இணைப்பு**

வீட்டுத் திருத்தவேலைகள்,காஸ்-சோபாஸ் வேலைகள்,குழாய் இணைப்புக்கள்,மாபிள் பதிப்பு வேலைகள், மின்சாரஇணைப்புக்கள், தச்சு வேலை, BVC யன்னல் வேலைகள் மற்றும் தமிழ் ஒளி-ஒலி பார்ப்பதற்கான இணைப்புக்கள் போன்ற அனைத்து வேலைகளும் தரமான முறையில் குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

தொடர்பு:
-ராஜா- **06 66 90 52 89**

1.50 Euro

# ஈழமுரசு

ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 | 21 - 27 Octobre 2004 | 35

**சம்யுக்தா**

**Credits Immobiliers**

வீடு வாங்க கடன் உதவி

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

SAM-YUKTHA

Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)

# போவென்று சொல்லி அனுப்புமுன்னர், வாவென்று சொல்லி வரவேற்க ஒரு நாட்டை அமையுங்கள்

**– பிரான்ஸ், நினைவெழுச்சி நிகழ்வில் கா.வே. பாலகுமாரன் வேண்டுகோள்**

(18.10.2004)

நேற்று, பிரான்சில் நடைபெற்ற நினைவெழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் அவர்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களிற்கு இவ்விதம் வேண்டுகோள் விடுத்தார்.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் நெருக்கடிகளைச் சுட்டிக்காட்டிய அவர், தமிழீழத் தாயகம், உங்களை என்றும் அன்புடன் வரவேற்கும் என்றார்.

புலம்பெயர்ந்த மக்களை அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த நாடுகள் போ என்று சொல்லி அனுப்புவதற்கு, நாள் குறிப்பதற்கு முன், வா என்று சொல்லி வரவேற்க எங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்த பாலகுமாரன் அவர்கள், அதற்காக புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள், தமது பங்களிப்பை மனங் கோணாமல் வழங்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.



### பேச்சின் முடிவில் போர்

சமாதான காலம் என்பது உலகிலுள்ள எல்லா விடுதலை இயங்கங்களுக்கும் சோதனைக் காலமாக இருந்ததென்றும், அந்த சோதனைக் காலத்தைக்கூட சாதனைக்காலமாக மாற்றியவர்கள் விடுதலைப் புலிகளே என்றும் தெரிவித்தார்.

ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் முடிவிலும் போர் இடம்பெற்றதைத் தனது உரையில் சுட்டிக்காட்டிய அவர், சிறீலங்கா அரசு உண்மை

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

## விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருக்கும் காலத்திலேயே, மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து, அதனைச் செயற்படுத்தியவர் எமது தேசியத் தலைவர் மட்டுமே

*பிரான்ஸ் நினைவெழுச்சி நிகழ்வில் புலிகளின்குரல் பொறுப்பாளர் தமிழன்பன்*

(18.10.2004)

பிரான்சில் நடைபெற்ற நினைவெழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு, தேசியத் தலைவரின் ஆளுமையை, ஆளுமை வீச்சை, பன்முக ஆற்றலைச் வெளிப்படுத்தும் '*காலத்தை வென்றவன்*' என்னும் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய, புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் அவர்கள், தேசியத் தலைவரின் பன்முகப்பட்ட பாத்திரப் பண்புகளை, தனது அனுபவச் சாட்சியங்களுடன் விளக்கினார்.

மக்கள் மீது தேசியத் தலைவர் அவர்கள் கொண்டுள்ள அளவற்ற பாசத்தை வெளிப்படுத்திய தமிழன்பன் அவர்கள், போர் மிகக் கொடூரமாக நடத்துகொண்டிருக்கும் காலப்பகுதியிலேயே மக்களின் குறையறிந்து அவற்றை நிவர்த்திசெய்ய, திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்தியவர் நமது தேசியத் தலைவர் அவர்கள் எனத் தெரிவித்தார்.

விடுதலைப் போராட்டம் நடக்கும் காலத்திலேயே

(தொடர்ச்சி 02ம் பக்கம்)

## 'விடுதலையின் தரிசனம்'



தமிழீழத் தேசியத் தலைவரின் 50வது அகவையை முன்னிட்டு ஈழமுரசு 'விடுதலையின் தரிசனம்' (The Vision Of Liberation) என்ற நூலை வெளியிடவுள்ளது. உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து பல பிரமுகர்கள் தமிழீழத் தேசியத் தலைவர் குறித்து எழுதிய ஆக்கங்களை உள்ளடக்கி, தமிழீழத் தேசியத் தலைவரின் வரலாற்றை, அவரின் ஆளுமையை வெளிப்படுத்தும் பல்வேறு கட்டுரைகளுடன் 250ற்கும் மேற்பட்ட பக்கங்களில் முழு வர்ணத்தில் தேசியத் தலைவரின் 50வது அகவையன்று வெளிவருகின்றது என்பதையும், தொடரும் ஓரிரு வாரங்கள் ஈழமுரசு வழமைபோல் 32 பக்கங்களில் வெளிவராது என்பதையும் வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**Orient Textilien & Schmuck**

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.



உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

## போ என்று சொல்லி....

(01ம் பக்கத் தொடர்ச்சி)

யான பேச்சுவார்த்தையை நடத்த வில்லை எனக் குற்றஞ்சாட்டினார்.

பேச்சுவார்த்தைக் காலத்தை விடுதலைப் புலிகளைப் பலவீனமாக் குவதற்கும் தனது படையைப் பலப் படுத்துவதற்குமான கால அவகா சத்தை எடுப்பதற்கான தந்திரோ பாய நகர்வுக்கான காலமாக சிறீ லங்கா அரசு பாவித்து வந்துள்ள தைச் சுட்டிக்காட்டிய அவர், ஒவ் வொரு பேச்சுவார்த்தையின் இறுதி யிலும் சிறீலங்கா அரசு யுத்தத்தை தமிழ்மக்கள் மீது திணித்தபோதும், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப் பட்ட மோசமான யுத்தங்களை, விடுதலைப் புலிகள் வீரமாக நின்று வெற்றிகொண்ட வரலாறுகளையும் நினைவுபடுத்தினார்.

தற்போதைய சமாதான காலத் திலும் சிறீலங்கா அரசு, படை பலத்தை பெருக்கிவருவதாகக் குறிப் பிட்ட அவர், எதனையும் சந்திக்கும் வகையில் விடுதலைப் புலிகளும் தமது படை பலத்தை பெருக்கி வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

### இன்று போய் நாளை பேச்சுக்கு வா

தற்போது பேச்சுவார்த்தை மேசை யில் விடுதலைப்புலிகள் மாத்திரமே இருக்கின்றனர் எனத் தெரிவித்த அவர், சிறிலங்கா தரப்பை தற்போது காணவில்லை எனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைக் காலத்தில், விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் நகர்வுகளால் சிறிலங்கா அரசு கலங்கிப்போயிருக்கின்றது எனவும், அதனால் போரைத் தொடக் கவே அரசு ஆர்வமாக உள்ளதெ னவும் தெரிவித்தார்.

சிறீலங்கா அரசும், அதற்கு இராணுவ உதவிகளை வழங்கும் நாடுகளும் போரை திணித்துவிடவே திட்டமிட்டுவருகின்றன என அவர் தனதுரையில் குற்றஞ்சாட்டினார். விடுதலைப் புலிகளை வலிந்து போரைத் தொடங்கவைக்கும் சதி நடவடிக்கைகளை, அவர்கள் மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரி வித்த பாலகுமாரன் அவர்கள், அவர்களின் தந்திரம் விடுதலைப் புலிகளிடம் பலிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் ஒருபோதும் தாங்களாக போரை ஆரம்பிக்கப் போவதில்லை என உறுதிபடத் தெரிவித்த அவர், ஆனால், எம்மீது போர் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் தயாராகவே இருக்கின்றனர் என வும், அப்படி ஒரு போர் ஏற்பட் டால், சிறீலங்கா மிக மோசமாகப் பாதிப்பை எதிர்கொள்ளும் எனவும் எச்சரித்தார்.

நாங்கள் உண்மையான பேச்சு வார்த்தைக்காகவே காத்திருக்கின் றோம் எனத் தெரிவித்த அவர், போரின் முடிவிலேயே உண்மையான பேச்சுவார்த்தை ஏற்பட வாய்ப்புண்டு எனத் தெரிவித்த அவர், இன்று போய் நாளை பேச்சுக்கு வா என்று சிறீலங்காவை விளிக்கும் நிலையில் நாங்கள் உள்ளோம் எனத் தெரிவித்தார்.

### போரின்றி வெல்லவும், போரால் வெல்லவும், பேசி வெல்லவும் எம்மால் முடியும் என்பதை நிரூபித்துள்ளோம்

எமது தேசியத் தலைவரின் மதி நுட்பத்தை பார்த்து இன்று உல கமே வியந்து நிற்கின்றதென்று தனதுரையில் தெரிவித்த பாலகுமா ரன் அவர்கள், தேசியத் தலைவரின் நகர்வுகளால், என்ன செய்வதென்று தெரியாமல் எதிரிகள் கலங்கிப் போயுள்ளார்கள் என்றும் தெரிவித் தார்.

போர்க்களத்திலும் சமாதானக் களத்திலும், தேசியத் தலைவர் ஒரு வரும் எதிர்பாராத வகையில், எதிர்பாராத கோணத்தில் காய் களை நகர்த்தி, தமிழர்கள் இன்று தலைநிமிர்ந்துவாழும் காலத்தை ஏற்படுத்தித் தந்திருப்பதை விளக் கிய பாலகுமாரன் அவர்கள், போரின்றி வெல்லவும், போரால் வெல்லவும், பேசி வெல்லவும் எம்மால் முடியும் என்பதை விடுதலைப் புலிகள் நிரூபித்துள்ளனர் எனத் தெரிவித் தார். ■

## வாகனக் கடத்தலுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரியும், சிப்பாயும் பொலிசாரால் கைது இவர்களால் கொன்று புதைக்கப்பட்ட வாகனச் சாரதியின் மனித எச்சங்கள் மீட்பு.

(15.10.2004)

மன்னார் இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவ அதிகாரி யொருவரும் சிப்பாயொருவரும் பல்வேறு வாகனக் கடத்தல் சம் பவம் தொடர்பாக கண்டி வத்தே கம பொலிசாரினால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இராணுவ மேஜர் டபிள்யூ.எம்.ஜி. அனுருத்த சம்மிக்க மற்றும் கோப் ரல் எம்.ஜி.குமாரதிலக்க ஆகியோரே நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.

கடந்தப்பட்ட வாகனம் ஒன்றில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர். இவர்களிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணையின் போது 15 இற்கும் மேற்பட்ட வாக னக் கடத்தல் சம்பவங்களிலும், அனுராதபுரத்தில் வாகனச் சாரதி யொருவர் படுகொலை செய்யப் பட்டு வாகனம் கடத்தப்பட்ட சம் பவத்திற்கும் தொடர்புடையவர்கள் என தெரிய வந்துள்ளது.

இவரது வத்தேகம இல்லம் பொலி சாரால் சோதனையிடப்பட்ட போது இரண்டரை அடி நீளமான கத்திகள் - 2, கைக்குண்டுகள் - 28, வாகன இலக்கத்தகடு - 1 ஆகியன கைப் பற்றப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட இருவரும் தெல் தெனிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை, இவர்களால் கொன்று புதைக்கப்பட்ட வாகனச் சாரதியின் மனித எச்சங்கள் வவு னியா உயிலங்குளத்தில் கண்டெடுக் கப்பட்டுள்ளன.

மன்னார் மாதோட்டம் இராணுவ முகாமில் பணியாற்றும் மேஜர் அனுருத்த சம்மிக்கவின் உத்தி யோகபூர்வ அறையிலிருந்து இவற்றை விசேட பொலிஸ் குழுவினர் கண் டெடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இவரும் இராணுவ கோப்ரலான எம்.ஜே. குமாரதிலக்கவும் கடத்தப்பட்ட வாக னமொன்றுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் போது இவர் களிடமிருந்து பெறப்பட்ட தகவலை யடுத்து குறிப்பிட்ட உத்தியோக பூர்வ அறை சோதனையிடப்பட்டது. சோதனையின் போது பல வாகனங் களின் ஆவணங்கள் கண்டெடுக் கப்பட்டன.

மேலும், உயிலங்குளம் பகுதி யில் அனுராதபுரத்தில் இவரால் கடத்தப்பட்டு படுகொலை செய் யப்பட்டு புதைக்கப்பட்ட வாகன சாரதியொருவரின் மனித எச்சங் களும் பொலிசாரால் தோண்டி யெடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சாரதியை வெட்டி படுகொலை செய்து எரித்து பின் னர் புதைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. அந்நேரம் இவர் உயி லங்குளம் இராணுவ முகாமில் பணியாற்றினார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

## விடுதலைப்.....

(01ம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை செம்மையாகச் செய்ய தேசியத் தலைவரைத் தவிர வேறு யாராலும் முடியாது எனத் தெரி வித்தார்.

இந்த நிகழ்வில் உணர்வு பூர்வ மான உரையினை ஆற்றிய புலிக ளின் குரல் பொறுப்பாளர் தமிழன் பன் அவர்கள், ஊடகங்கள் வாயி லாக புலம்பெயர்ந்த மக்களின் உணர்வுகளை சிதைப்பதற்கு மேற் கொள்ளப்படும் சதி முயற்சி பற்றி யும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மட்டக்களப்பு புதுநகரில் கைக்குண்டுத் தாக்குதல் வீட்டில் படுத்திருந்த இளைஞர் பலி

(17.10.2004)

மட்டக்களப்பு புதுநகரில் இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் 27 வயதுடைய, சின்னவன் மகேஸ் வரன் என்ற இளைஞர் கொல்லப்பட் டுள்ளார்.

கொல்லப்பட்டவர், ஏற்கனவே விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்து விலகியிருந் தார் எனவும், பின்னர் சிறீலங்கா இராணுவ உளவாளியாகச் செயற் பட்டுவந்தார் எனவும் தகவல்கள் தெரி விக்கின்றன.

இவர், இராணுவ உளவாளியா கச் செயற்படுவதை நிறுத்திவிட்டு, மத்திய கிழக்கு நாடொன்றிற்கு வேலை வாய்ப்பிற்காக செல்லவிருந் தார் எனவும், அதற்கான ஏற்பாடுகளை அவர் செய்திருந்தார் எனவும் தக வல்கள் தெரிவிக்கின்றன.

இன்று அதிகாலை அவர் தனது வீட்டில் உறக்கத்திலிருந்த சமயம் 1.30 மணியளவில் இவரது அறைக் குள், கூரை வழியாக இனந் தெரியாத நபர்களினால் இந்தக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் ஒரு மணித் தியாலத்தில், அங்கு மரணமடைந் துள்ளார்.

புதுநகரைப் பொறுத்த வரை பாது காப்பு வலயம் என கருதப்படும் பிரதேசமாகும். விமானப்படைத் தளத்தை அண்மித்த பிரதேசம் என் பதால் சுற்றி வர பாதுகாப்பு உறு திப்படுத்தப்பட்ட இடமாகும்.

தேசிய துணைப்படை (ராசீக் குழு), ஈ.பி.டி.பி, புளொட் போன்ற அமைப்புக்களின் உறுப்பினர்கள் பலரும் குடும்பங்களுடன் இப் பகு தியிலேயே வசித்து வருகின்றார்கள்.

கொல்லப்பட்டவரின் சகோதரர் குமாரசூரியம் அழகேந்திரன் என் பவர் ராசிக் குழு எனப்படும் சிறி லங்கா இராணுவத்தின் தேசிய துணைப்படை சிப்பாயாக இருக் கின்றார்.

இச் சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. தெடர்புடைய நபர்களும் அடை யாளம் காணப்படவில்லை என மட்டக்களப்பு பொலிசார் தெரிவிக்கின் றார்கள்.

ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: **அன்பு**
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

Errances Travels



Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முடிவுகட்ட அரச ஊடகங்கள் முனைப்பு !

## ஜெயானந்தமூர்த்தி எம்.பி.குற்றச்சாட்டு

(13.10.2004)

சமாதான முயற்சிகளைக் குழப்பும் விதமாக பொறுப்பற்ற முறையில், வேண்டுமென்றே திட்டமிட்டுச் செயற் பட்டுவருவனபோல அரச ஊடகங்கள் செயற்பட்டு வருவதாக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயா னந்தமூர்த்தி குற்றம் சுமத்தியுள்ளார். செய்திகளைத் திரிபுபடுத்தியும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய்யான செய்திகளை திட்டமிட்ட முறையில் இட்டுக்கட்டியும் வெளி யிட்டு, சமாதான முயற்சிகளுக்கு அரசாங்க ஊடகங்கள் குந்தகம் விளைவிக்கின்றன என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி, தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலிலுள்ள தற்போதைய சூழ்நி லையில், இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் எப்போது பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பார் கள் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் இருக்கும்போது, அரசாங்க ஊட கங்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துகொள்வது தமிழ்மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத் தியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக, இத்தகைய செய்திகளை திரிபுபடுத்தி வெளியிட்டு அந்த அமைப்பை தூண்டி சமாதானப் பேச்சுவார்த் தைக்கு முடிவு கட்ட இந்த ஊட கங்கள் முனைவதுபோல் தெரிகின் றன என, பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தனது கடிதத் தில் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊடகங்களின் பொறுப்பற்ற போக்கினால் ஏற்படக்கூடிய நெருக் கடிகள், சமாதான முயற்சிக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்து, சிறீ லங்காவின் தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு எழுதியனுப் பியிருக்கும் அவசரக்கடிதத்தில், அரச ஊடகங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும் என்பதை யும் இது விடயத்தில் அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்க வேண் டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# விடுதலைப் புலிகள் விடுதலை



மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப் பட்டிருந்த பத்து விடுதலைப் புலி உறுப்பினர்களையும் பிணையில் விடுவிக்க கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு வழங்கியது.

08.072003 அன்று, வாழைச் சேனையில் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட பயஸ் இராஜேந்திரா (குலதீபராஜ்), வடிவேல் சந்திரகுமார் (பிரசாத்), மற்றும், 14.07.2003 அன்று, கல்லடி பாலத்தில் ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்ட நான்கு பெண்கள் உட்பட எட்டுப் பேரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விநாயகமூர்த்தி சியாமளா (சுடர்விழி), நவரத்தினம் மஞ்சுளா (திலகவாணி), நவரத்தினம் புனிதமலர் (தேர்கோதை), சிவஞானம் திருமஞ்சு (தமிழிசை), தியாகராஜா முரளீதரன் (கங்காளன்), கோபாலசிங்கம் தயா னந்தம் (நந்தன்), சிறீதரன் சுதாகரன் (கண்ணன்), கதிரேசப்பிள்ளை ரஜீவகுமார் (நதீசன்) ஆகியோரே குறிப்பிட்ட எட்டு விடுதலைப் புலி உறுப்பினர்களும் ஆவர்.

# யாழ்குடாவில் திருட்டுக்கள் கொள்ளைகள் அதிகரிப்பு

## இராணுவம், ஈ.பி.டி.பி.யினர் தங்கியிருக்கும் பகுதி மக்கள் பீதி

(15.10.2004)

யாழ் குடாநாட்டில், அதிகரித்து வரும் திருட்டுக்கள் கொள்ளைகள் வழிப்பறிகள் என்பன, இராணுவத் தினரின் பிரசன்னம் அதிகரித்திருக் கும் இடங்களிலும், ஈ.பி.டி.பி.குழுக் கள் தங்கியிருக்கும் பகுதிகளிலுமே அதிகளவில் இடம்பெறுகின்றன. இதனால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் மத்தியில் பீதி நிலவிவரு கின்றது.

இத்தகைய கொள்ளை திருட்டு வழிப்பறிகளில், மேற்படி இராணு வத்தினரும், இராணுவத்தின் துணைப் படையான ஈ.பி.டி.பியினருமே ஈடு பட்டுவருகின்றனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களிற்கு முன், மல்லாகம் சுன்னாகம் போன்ற பகுதிகளிலும் இத்தகைய கொள் ளைச் சம்பவங்கள் இரண்டு இடம் பெற்றுள்ளன.

இராணுவமும், ஈ.பி.டி.பி.யினரும் தங்கியிருக்கும் பகுதியில் அமைந் திருந்த தொலைபேசி நிலையமும், பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கடையும் உடைக்கப்பட்டு, கொள்ளையர்களால் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட் டுள்ளன. சுன்னாகம் ஜெற்மோட்டர்ஸ் வீதிக்கு அருகாமையில் அமைந்தி ருந்த தொலைபேசி நிலையத்தின் முன்கதவை உடைத்து நுழைந்த கொள்ளையர்கள், அங்கிருந்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான தொலை பேசிகள், கணினி உபகரணங்கள் என்பனவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இத்தொலைபேசி நிலையத் திற்கு அண்மித்த பகுதியிலேயே இராணுவமுகாமும், ஈ.பி.டி.பி.யி னரின் முகாமும் அமைந்துள்ளன. இதேபோன்று, மற்றுமொரு கொள் ளைச் சம்பவம் மல்லாகத்தில், ஈ.பி.டி.பி.யினரின் முகாமுக்கு அரு காமையில் இடம்பெற்றுள்ளது. மல் லாகம் பழம்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகில் உள்ள, அளவெட்டி -மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புடவைக் கடை உடைக் கப்பட்டு, அங்கிருந்து பெறுமதியான புடவைகள் கொள்ளையிடப்பட்டுள்ள.

ஈ.பி.டி.பி.யினரின் முகாமிற்கு காவல்வழங்கும், இராணுவத்தின ரும், பொலிஸாரும் காவலரண்கள் அமைத்து தங்கியிருக்கும் பகுதியில், சுதந்திரமான முறையில், இக்கொள் ளைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கதவுகளுக்கு போடப்பட்ட பூட்டு க்கள் உடைக்கப்பட்டு, பாதுகாப்பிற்கு குறுக்கே இடப்பட்ட இரும்புச்சட் டங்கள் வளைக்கப்பட்டு, ஒரே பாணியில் இவ்விரு கடைகளிலும் பொருட்கள் கொள்ளையிடப்பட் டுள்ளன.

## பேச்சுவார்த்தை தொடர்கிறது

# சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசில் இணையும் ?

(13.10.2004)

இலங்கைத் தொழிலாளர் காங் கிரசை ஒருவாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கூடாரத்தில் இருந்து, இழுத்தெடுத்து, தன்பக்கம் இணைத் துக்கொண்ட ஆளும் கட்சி, தற்போது சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசையும் தன்பக்கம் இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நேரடியாகவும் மறை முகமாகவும், இதற்கான பேச்சுக்கள், பேரம்பேசல்களில் ஆளும்கட்சி இறங்கியுள்ளது. சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசை தனது பக்கம் இழுப் பதற்கு முன்னதாக, ஆட்சியில் பங்குகொண்டிருக்கும், பேரியல் அஸ்ரப்பின் தேசிய ஐக்கிய முன் னணியின் ஆதரவை இதுவிடயத் தில் பெறும் நடவடிக்கையிலும் அரசு ஈடுபட்டுள்ளது.

ராவூப் காக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசுக்கும், அதனில் இருந்து பிரிந்து சென்று அரசியல் நடத்தும் அதன் எதிரிக் கட்சியான தேசிய ஐக்கிய முன்ன ணிக்கும் இடையில் இணக்கப் போக்கை ஏற்படுத்தும் நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இம்முயற்சிகளின் விளைவாக அமைச்சர் பேரியல் அஸ்ரப் தலை மையிலான தேசிய ஐக்கிய முன்ன ணியும், முந்நாள் அமைச்சர் ரவூப் கக்கீம் தலைமையிலான சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசும் மீண்டும் இணைந்து கொள்ள வாய்ப் புக்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகின்றது. இதன்படி சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசின் தலைமை, ரவூப் கக்கீம் - அமான் அஸ்ரப் (மறைந்த எம்.எச்.எம். அஸ்ரப்பின் மகன்) கூட்டுத்தலைமையாக அமைய விருக்கின்றது என்றும், தேசிய அமைப்பாளர் பதவிக்கு பேரியல் அஸ்ரப் நியமிக்கப்படுவார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசில் இணையும் பட்சத்தில் ரவூப் கக்கீம் அமைச்சர் பதவிகள் எதனையும் ஏற்கமாட்டார் எனவும், பாராளுமன்ற உறுப்பினர் சேகு தாவூத் பசீருக்கு அமைச்சர் பதவியும், கட்சியைச் சேர்ந்த மேலும் இருவருக்கு துணையமைச்சர் பதவிகளும் வழங்கப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, வியாங்கொடையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்று கையில், பாராளுமன்றத்தில் ஆளும் கூட்டணி வைத்துள்ள பெரும்பான்மை 116இல் இருந்து கூடியவிரைவில் 124 ஆக அதிகரிக்கும் எனத் தெரிவித்திருந்தமை, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசின் எட்டு ஆசனங்களின் ஆதரவு தமக்கு உறுதியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே எனக் கருதப்படுகின்றது.

சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY



சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004

தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜிஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்கநகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

Neuengass - Passage 3, 3011 Bern Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02

# இலங்கைத் தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான விசமப் பிரசாரத்தில் `இந்து'

அநேக வருடங்களாக சென்னை `இந்து' ஆங்கில நாளேடு தமிழர்களுக்கெதிராகவும், சிங்களவர்களுக்கு சாதகமாகவும் அதனுடைய செய்திகளிலும், ஆசிரியத் தலையங்கங்களிலும் தனது நச்சுத்தன்மையை மிகவும் மோசமான முறையில் வெளிப்படுத்துகிறது என்பது சகலருக்கும் தெரிந்த உண்மை. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அடிக்கடி கம்போடியாவில் இலட்சக்கணக்கான உயிர்களை உறிஞ்சிய பொல்பொட்டுக்கு ஒப்பிட்டு அநேக தலையங்கங்கள் எழுதப்பட்டிருந்தன. பிரபாகரன் உலகம் பூராவும் வாழும் தமிழர்களால் நேசிக்கப்படும் ஒருவராக விளங்குகின்றார் என்று அநேக தமிழ்நாட்டு அரசியல் பிரமுகர்கள் கோலாகலம் செய்வதை, இந்தப் பத்திரிகையால் ஜீரணிக்க முடியவில்லை.

சென்ற மாதம் 29ம் திகதி `இந்து'ப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தை ஒவ்வொரு விடயத்தையும் அலசி கண்டனம் செய்யும் முதல், இந்தப் பத்திரிகை ஆசிரியருடைய நிலைப்பாட்டையும், பத்திரிகையினுடைய நிலைப்பாட்டையும் சற்று அலசுவது அவசியமாகின்றது.

இனப்பிரச்சினை உச்சக் கட்டத்தில் இருந்தபொழுது இந்தப் பத்திரிகை ஆசிரியர், தமிழர்களுடைய அபிலாசைகளைப் பற்றி ஒரு சொல்லாவது எழுதவில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜயவர்த்தனா காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி 1977 பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பின்பு, ஜனாதிபதி ஜயவர்த்தனாவுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் சில சமரசங்களைச் செய்வதற்கு முனைந்து தோல்வியைத் தழுவினார்.

அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இந்தப் பத்திரிகை ஆசிரியரான ராம் மீது அதிகபாசம் வைத்திருந்தனர். இதன் விளைவாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் நிலைப்பாடு மக்கள் மத்தியில் மிகவும் மங்கிவிட்டது. இதன் பலனாக யாழ். குடா நாட்டின் தமிழ் இளைஞர்களால், அமிர்தலிங்கம் அரசியல் கூட்டங்கள் நடத்த முடியாமல் அநேக இடைஞ்சல்களை எதிர்கொண்டார்.

விடுதலைப் புலிகளுடைய வளர்ச்சியை இந்தப் பத்திரிகை ஜீரணிக்க முடியாமல் போய், விடுதலைப் புலிகளுக்கு எதிராக மட்டுமல்ல, தமிழ் மக்களுடைய நலன்களைப் பற்றி அல்லது அபிலாசைகளைப் பற்றி ஒரு வசனம் கூட எழுதவில்லை.

1995 ஆம் ஆண்டு மார்கழி யாழ். குடாநாட்டில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காரணமாக 5 இலட்சம் தமிழ் மக்கள் தங்கள் வீடு வாசல்களை விட்டு அகதிகளாக, கால்நடையாக வன்னிக் காட்டில், மரங்களுக்குக் கீழ் தங்கள் அகதி வாழ்க்கையை நடத்தியது உலக மனச்சாட்சியையும், உலக மனித நேயத்தையும், உலக மனிதாபிமானத்தையும் நன்கு உலுப்பி விட்டது.

இந்தத் துயரத்தை அறிந்த அன்றைய ஐ.நா. செயலாளர் நாயகமாகிய பூட்றோ பூட்றோஸ் காலி, சர்வதேச சமுதாயத்தை மனிதாபிமான அடிப்படையில் இந்த 5 இலட்சம் தமிழ் அகதிகளுக்கு உதவுமாறு மிகவும் உருக்கமான வேண்டுகோளை விடுத்ததன் பயனாக அநேக நாட்டின், அரசாங்கங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் நிவாரணப் பணிகளுக்கு, உதவ முன்வந்தன.

ஆனால், ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டிய வெளிவிவகார மந்திரியான கதிர்காமர் இந்த உதவி தேவையில்லையென்று கூறியது, தமிழ் மக்களை அழிக்கும் செயல் எனக் கருதுகின்றோம்.

தமிழ்நாட்டில் மக்கள் உணர்ச்சி வசப்பட்டு உதவிகளைச் செய்ய முன்வந்த பொழுது இலங்கை அரசாங்கம் அந்த மனிதாபிமான உதவியைக் கூட தடை செய்து விட்டது.

அரசியலில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், மனித நேயம், மனிதாபிமானத்தில் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது. ஏனெனில், இவை அரசியலுக்கு அப்பாற்பட்ட விடயங்கள்.

இந்த வகையில் `இந்து'ப் பத்திரிகை மனிதநேய அடிப்படையில் தமிழ் அகதிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று ஒரு சொல்லைக் கூட எழுதவில்லை. இதிலிருந்து இந்தப் பத்திரிகையின் மனிதாபிமானக் கொள்கையை தமிழ் மக்களும், தமிழ்நாட்டு மக்களும் உணர்ந்திருப்பார்கள் என்பதே எமது நம்பிக்கை.

1997 ஆம் ஆண்டு நீலன் திருச்செல்வத்தினுடைய, இனவிவகார தாபனத்தில் `இந்து'ப் பத்திரிகை ஆசிரியரான ராம் 50 வருட இந்திய சமஷ்டி முறை பற்றி ஓர் உரையை நிகழ்த்தினார். இந்தக் கூட்டத்தில் தலைமை வகித்தவர் கலாநிதி ராதிகா குமாரசாமி. அவர் நிகழ்த்திய உரைக்கு சம்பந்தமில்லாத, உண்மைக்குப் புறம்பான, கூற்றை வெளிப்படுத்தினார். கேள்வி நேரத்தில் இந்தக் கூற்று வெளிப்படுத்தப்படவில்லை. அரைவாசி உரை நிகழ்த்தும் பொழுது திட்டமிட்டு ஒரு கூற்றை உட்புகுத்தி விட்டார். அதாவது விடுதலைப் புலிகள், கேட்கின்ற `தமிழீழம்' ஒரு பகற்கனவாகத்தான் அமையும் என்றார். இந்த விடயம் இவருடைய கூற்று, உண்மைக்கு முரண்பட்டது மட்டுமல்லாமல், மிகவும் மோசமான பொய்யான கூற்று என்பதே எமது வாதம். ஏனெனில், 1956ம் ஆண்டு உளரீதியாக தமிழர்கள் பிரிந்து விட்டார்கள் என்பதும் 1976ம் ஆண்டு இந்த சுதந்திர தாகத்தைத் தீர்ப்பதற்கு வட்டுக்கோட்டையில் ஓர் அரசியல் வடிவத்தை உலகத்துக்கு அறிவித்ததும் 1996 ஆம் ஆண்டு இந்த சுதந்திர தாகத்தை வடக்கு, கிழக்கில் கணிசமான பிராந்தியத்தை பிரபாகரன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் ராமுடைய கூற்றை தவிடுபொடியாக்கி விட்டது.

> இந்த 22 பாராளுமன்ற அங்கத்தவர்களும் விடுதலைப் புலிகளுடைய ஆதரவைப் பெற்றவர்கள். இதிலிருந்து நாம் அறியக் கூடியது யாதெனில், விடுதலைப் புலிகள் வடகீழ் தமிழ்ப் பிராந்தியத்தில் 99 வீத மக்கள் ஆதரவைப் பெற்று விட்டார்கள் என்பது.

இவருடைய கூற்றைக் கேட்ட ஒரு தமிழர், கேள்வி நேரம் வரை பொறுத்திருக்காமல் உணர்ச்சி வசப்பட்ட காரணத்தினால் எழுந்து நின்று ராமைப் பார்த்து, 'ஐயா! தமிழீழம் பிறந்து மிகவும் திறமையாக 1996 ஆம் ஆண்டிலிருந்து முழுச் சுதந்திரத்துடன் இயங்குகின்ற யதார்த்தம், உங்களுக்கு இன்னும் தெரியாதா' என்று கேள்வியைக் கேட்டவுடன் கலாநிதி ராதிகா குமாரசுவாமி அவர்கள் பீதியடைந்து கூட்டத்தை உடனடியாக முடித்துக் கொண்டார். இதிலிருந்து ராம் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை மதிக்கவில்லை என்பது வெள்ளிடைமலை.

> கருணாவினுடைய சதி மிக மோசமான புஷ்வாணமாக மாறியபடியால் விடுதலைப் புலிகளை, அழிக்க வேண்டுமென்ற கொள்கையுடைய வெளிநாட்டுப் புலனாய்வுத் துறையினரும் விடுதலைப் புலிகளை எதிரியாகக் கருதும் சக்திகளும் கருணாவின் தோல்வி மிகவும் எதிர்பாராத சம்பவமென்று அதனை ஜீரணிக்க முடியாமல், தத்தளிக்கின்றனர்.

சென்ற வருடம் லண்டனில் நடந்த அமிர்தலிங்கத்தினுடைய பிறந்தநாள் நிகழ்வில் ராம் பிரதம அதிதியாகக் கலந்து அமிர்தலிங்கத்தைப் பற்றி புகழாரம் செய்து இன்னொரு பாரிய குண்டையும் வீசிவிட்டார். அதாவது தமிழ்நாட்டு அரசோ, அல்லது இந்திய மத்திய அரசோ, தமிழர்களுக்கு ஒரு சதம் கூட நிதியுதவி செய்ய மாட்டாதென ஆணித்தரமாகச் சொன்னார். இவருடைய மனோநிலையை நன்கு வெளிப்படுத்தி விட்டார். இப்படி தமிழர்களுக்கெதிரான கொள்கையுடைய `இந்து'ப் பத்திரிகையின் ஆசிரியரை கூட்டத்துக்கு அழைத்தது தமிழினத்தின் முதுகில் குத்துவதற்கு ஒப்பானதாகும். `இந்து'ப் பத்திரிகையின் பின்னணியைப் பற்றி நாம் கூறினபடியால் இந்தப் பின்னணிக்கும், சென்ற மாதம் 29ம் திகதி எழுதிய ஆசிரிய தலையங்கத்துக்கும் உள்ள தொடர்புகளை அலசுவது அவசியமாகின்றது. தமிழ் மக்களுடைய ஏகப் பிரதிநிதியாக பிரபாகரன் வர்ணிக்கப்படுவதை இவர் கேலி செய்கின்றார்.

விடுதலைப் புலிகள் தான் மாசி மாதம் 2002ம் ஆண்டு யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர். அதைப் பற்றி ஒரு சொல்லுக் கூறாமல் இந்தப் பத்திரிகை இந்த யுத்த நிறுத்த காலத்தை விடுதலைப் புலிகள் தமது அரசியல் தமிழ் எதிரிகளை அழிப்பதற்கு பயன்படுத்துகின்றதென்று குற்றம் சாட்டுகின்றது. இது உண்மைக்குப் புறம்பான கூற்று. ஏனெனில், 2002 மாசி மாதம் தொடக்கம் 2004ம் ஆண்டு பங்குனி மாதம் வரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் கொலைகள் நடைபெறவில்லை. ஆனால், பங்குனி மாதம் தொடக்கம் கருணா, வெளிநாட்டுச் சக்திகள் காரணமாகவோ, உள்நாட்டுச் சக்திகளுடைய உதவி காரணமாகவோ பிரபாகரன் அணிக்கு எதிராக இராணுவ ரீதியில் செயற்படத் தொடங்கினார். கருணாவினுடைய சதி, மிக மோசமான புஸ்வாணமாக மாறியபடியால், விடுதலைப் புலிகளை, அழிக்க வேண்டுமென்ற கொள்கையுடைய வெளிநாட்டுப் புலனாய்வுத் துறையினரும் விடுதலைப் புலிகளை எதிரியாகக் கருதும் சக்திகளும் "கருணாவின் தோல்வி மிகவும் எதிர்பாராத சம்பவமென்று" அதனை ஜீரணிக்க முடியாமல், தத்தளிக்கின்றனர்.

கருணாவினுடைய தமையன் கொலை செய்யப்பட்டதை `இந்து'ப் பத்திரிகை மிகவும் கடுமையாகக் கண்டனம் செய்தது. காஷ்மீரில் முஸ்லிம் தீவிரவாத உறுப்பினர்கள் இந்தியப் படையினருக்கு எதிராக இராணுவ ரீதியில் செயற்படும்பொழுது இந்திய இராணுவம் காஷ்மீர் தீவிரவாதிகளைக் கொல்லலாகாதென்று `இந்து'ப் பத்திரிகை, கீதா உபதேசம் செய்ய முன்வருமா என்ற கேள்வியை நாம் ராமிடம் கேட்க விரும்புகின்றோம். இந்த விடயத்தில் இந்தப் பத்திரிகை நோர்வே அரசாங்கத்தையும் வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவையும் இலங்கை அரசாங்கத்தையும் கண்டனம் செய்வது, இராஜதந்திர மரபுகளை மீறிய செயற்பாடு என்பதே எமது கருத்து.

இந்தப் பத்திரிகை பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமைக் குழு யாழ்ப்பாணப் பிரிவை புகழாரம் செய்கின்றது. இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கவில்லை என்பது பற்றி ராமுக்கு கூற விரும்புகின்றோம். முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் தொந்தரவு செய்கின்றார்கள் என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது. ஆனால், குஜராத் மாநிலத்தில் ஆயிரக்கணக்கில் முஸ்லிம் மக்களை இந்துக்கள் கொன்று குவித்தது பற்றி ஒரு வசனமாவது இந்தப் பத்திரிகை கண்டனம் செய்யவில்லை என்பதை வாசகர்களுக்குக் கூற விரும்புகின்றோம்.

இப்படியான தலையங்கங்கள் நிரந்தர சமாதானம் இலங்கையில் ஏற்படுவதற்கு ஒரு பொழுதும் உதவாது. தமிழர்களுக்கு விரோதமான கொள்கையை ராம் மட்டுமல்லாமல் சோ.ராமசாமி, முன்னாள் சென்னைப் பல்கலைக்கழக அரசியல்துறை பேராசிரியர் சூரியநாராயணன் போன்றோரும் இதே கருத்துக்களைத் தான் வெளிப்படுத்துகின்றனர்.

எம்மைப் பொறுத்த வரை இவர்களுடைய நச்சுத் தன்மையை அடிக்கடி கக்கினால் அதனுடைய எதிர்விளைவுகள் தமிழ் மக்களுடைய தியாகத்துக்கும், திடசங்கற்பத்துக்கும் ஒரு பாரிய உந்து சக்தியாக நிச்சயமாக அமையும். உதாரணமாக வடகீழ் பிராந்தியத்தில் 2000ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் 15 தமிழர் கூட்டணி அங்கத்தவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளுடைய ஆதரவைப் பெற்றார்கள். 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ்ப் பிரதேசத்தைச் சார்ந்த 22 நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். இந்தத் தேர்தலில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போட்டியிட்ட, ஒருவர் மட்டுமே யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்டார். இந்த 22 பாராளுமன்ற அங்கத்தவர்களும் விடுதலைப் புலிகளுடைய ஆதரவைப் பெற்றவர்கள். இதிலிருந்து நாம் அறியக் கூடியது யாதெனில், விடுதலைப் புலிகள் வடகீழ் தமிழ்ப் பிராந்தியத்தில் 99 வீத மக்கள் ஆதரவைப் பெற்று விட்டார்கள் என்பது. புள்ளி விபர அடிப்படை. அடுத்த பொதுத் தேர்தலில் வடகீழ் தமிழ்ப் பிராந்தியத்தில் மேலும் அதிகமான வீதம் புலிகளுடைய ஆதரவாளர்களுக்குக் கிடைக்குமென்பதும் மலையகத்திலும், மேல் மாகாணத்திலும் புலிகளுக்கு ஆதரவாக அநேக தமிழ் மக்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதும் எமது கணிப்பு.

**நன்றி – தினக்குரல்**

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# சமாதான எதிரிகளாகும் இனவாத ஊடகங்கள்

அண்மைக் காலமாக சிறீலங்கா அரச கட்டுப்பாட்டு ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை அதிகளவில் வெளியிடுகின்றன. பொய் பிரச்சாரங்களில் மூலம் போர்க்காலங்களில் சிங்கள மக்களை குழப்பியடித்த சிறீலங்காவின் ஊடகத்துறை, சமாதான காலத்தில் தமிழ் மக்களை குழப்பியடிக்க தீவிரமாக முனைந்துள்ளமையை இவைகள் நிரூபிக்கின்றன. போர்க் காலங்களில் சொல்லப்படும் இராணுவத்தினரின் இழப்புத் தொகையினைக் குறைத்தும், புலிகள் பலர் கொல்லப்பட்டுவிட்டார்கள், இராணுவம் முன்னேறுகின்றது என்றவாறான, சிங்கள மக்களை ஏமாற்றக் கூடிய அல்லது அவர்களை உற்சாகப்படுத்தக் கூடிய பிரச்சாரங்களை தனது ஊடகங்களின் மூலமாக மேற்கொண்டுவந்த சிறீலங்காவின் 'கோயபல்ஸ்' ஊடகங்கள், இப்போது ஒன்றுபடும் தமிழினத்தை குழப்புவதற்காக பல்வேறு புதிய புதிய கதைகளை உருவாக்கி மக்களை குழப்பியடித்து வருகின்றன.

சிங்கள இனவாதம் இவ்வளவு தூரம் வளர்வதற்கும், தமிழ் மக்கள் மீது இந்தளவிற்கு இனவிரோத மனப்பான்மை வளர்வதற்கும் கடந்தகாலங்களில் சிறீலங்கா ஊடகங்கள் இனவாதத்துடன் வெளியிட்ட தவாறான, பொய்யான செய்திகளே காரணம் என்பது மறுக்கமுடியாதது. இப்போது, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவையும், கருணாவின் குழுக்களையும் முன்னிலைப்படுத்தி செய்திகளை வெளியிட்டு தென்னிலங்கை மக்களிடையே ஒரு மகிழ்வூட்டும் நடவடிக்கையை இந்த ஊடகங்கள் மேற்கொள்வது சமாதான சூழலுக்கு ஆரோக்கியமான செயலாகத் தெரியவில்லை.

கருணாவைப் பயன்படுத்தி இராணுவ ரீதியாகப் புலிகளைப் பலவீனப்படுத்த எடுத்த முயற்சிகள் தோற்றுப்போய்விட்டதனை நன்கு உணர்ந்துள்ள வெளிநாட்டுச் சக்திகள் சில, தமிழ்த் தேசத்திற்கு எதிரான விரோத சக்திகளை கருணாவின் பெயருக்குப் பின்னால் ஒன்றிணைய வைப்பதன் மூலம் தமிழர் தரப்பையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பலவீனப்படுத்தும் திரைமறைவு சதிவேலையில் இறங்கியிருக்கின்றன என்று அரச சார்பற்ற, நடுநிலைமையான ஊடகங்கள் நேரடியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள நிலையில், சிறீலங்கா அரச ஊடகங்கள் மற்றும் அதற்கு ஒத்து ஊதும் ஊடகங்கள் எல்லாம் பொய்யான பிரச்சாரங்களை தீவிரமாக கட்ட விழ்த்துவிட்டுள்ளன.

இவ்வாறான செய்திகள் தென்னிலங்கை மக்களுக்கு மக்கிழ்ச்சியைக் கொடுத்து, தமிழ் மக்களை குழப்பும் நோக்கத்துடன் மேற்கொள்ளப் பட்டாலும், சமாதான சூழலில் இவ்வாறான பொய்யான பிரச்சாரங்களை செய்து தென்னிலங்கை மக்களிடையே தவறான ஒரு கருத்தை திணிப்பதாகவே கருத இடமுண்டு.

சமாதானத்திற்கான எதிர்பார்ப்புடன் தமிழ்மக்கள் காத்திருக்கும் நிலையில் சிறீலங்கா அரசோ அதற்கு எதிர்மாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையே அதனது ஊடகங்கள் வாயிலாக இவ்வாறான செயற்பாடுகள் நிரூபிக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால் தமிழின விரோத சக்திகளை பயன்படுத்தி பேசவும் எழுதவும் வைக்கின்றது. கடந்த வாரம் அனாதரவாகப்போயுள்ள ஆனந்தசங்கரியை, தமிழீழத் தேசியத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுத வைத்து வேடிக்கைபார்த்துள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியோ, தமிழ் மக்கள் உணர்வுகளைப் பற்றியோ, தமிழ் மக்களால் நேசிக்கப்படுகின்ற தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் பற்றியோ எள்ளவும் புரிந்து கொள்ளாதவர் ஆனந்தசங்கரி. ஐம்பது வருடங்களாக தமிழ் மக்களை ஏமாற்றியே அரசியல் பிழைப்பை நடத்தியவர் இப்போது தன் தலையிலேயே மண்ணையல்ல சேற்றையள்ளி வாரியிறைத்துக் கொண்டிருக்கின்றார்.

சிறீலங்கா அரசும் ஒருபுறம் சமாதானம் பேசுவதாக உலக நாடுகளுக்கு ஒப்புக்கு கூறிக்கொண்டு மறுபுறம் அதற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. சிறீலங்காவின் அரச ஊடகங்களே இவ்வாறான செய்திகளை வெளியிடுவதில் இருந்து, சமாதானத்தில் சிறீலங்கா அரசு எவ்வளவு உறுதியோடு இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வதற்கு போதுமானது.

# அரசின் இடைக்கால வரைபு போலி நாடகம்

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆளும்தரப்பு ஆரம்பிக்கப் போவது எனக் கூறுவதும் விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி வரைபுக்கு பதில் வரைவைத் தயாரித்திருப்பதாகக் கூறுவதும் அரசின் போலி நாடகம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மெய்யாகப் பேச வேண்டும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற நோக்கமிருந்தால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்து இற்றைவரை எதுவித முன்னேற்றமுமில்லை. இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் தமிழர் தாயகத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

கடந்த இருபது வருட போரினால் சிதைவடைந்த தமிழர் தாயகத்தின் பொருளாதாரத்தை மீளக் கட்டி எழுப்பி இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டிய அரசு அதற்கான ஆக்கபூர்வமான எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. வெறுமனே இழுத்தடித்துக் கொண்டுவரும் நிலையில் தற்போது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைபை தயாரித்துள்ளதாக கூறுகிறது.

விடுதலைப்புலிகள் தயாரித்துள்ள வரைபுக்கு மாற்று வரைபு இது விரைவில் நோர்வேயூடாக விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை விடுதலைப் புலிகளுக்கு அரசு வரைபு தயாரித்துள்ளதாகவோ அல்லது இவ்வரைவு விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றோ உத்தியோகபூர்வமாகத் தகவல் எதுவுமில்லை.

தற்போதுள்ள நிலையில் விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட வரைபுக்கு பதில் வரைவைத் தயாரித்து புலிகளிடம் சமர்ப்பித்தால் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை. இருதரப்பும் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இரு தரப்புக்குமிடையில் ஒரு புரிந்துணர்வை கட்டி வளர்க்க முடிந்ததுடன் தமிழ் மக்களும் சமாதானத்தில் ஒரு நம்பிக்கை கொள்ளக் கூடிய சூழல் உருவானது. ஆனால் இன்றைய ஆளும் தரப்பின் நகர்வுகள் தமிழ் மக்களை அவநம்பிக்கை கொள்ள வேண்டிய நிலையையே உருவாக்கியுள்ளது.

இதுவரை பேச்சுவார்த்தை மேசைக்கு வராது தயக்கம் காட்டிவரும் ஆளும் தரப்பு வெறுமனே மாற்று யோசனைகளை காகிதத்தில் எழுதி அனுப்பினால் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.


எனவே பேச்சுவார்த்தை மேசைக்கு உடனடியாக வரவேண்டிய கடமை அரசுக்குரியது. ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவினர் இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

சர்வதேச சமூகமும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் சிறிலங்கா அரசு உடனடியாகப் பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்ப வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் ஆயுதக் கொள்வனவிலும் தேசவிரோத சக்திகளுக்குப் புகலிடமளிக்கும் நடவடிக்கைகளிலும் ஆளும் தரப்பு நாட்டம் காட்டாது. சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க முன்வரவேண்டும்.

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மெய்யாகப் பேச வேண்டும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற நோக்கமிருந்தால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்து இற்றைவரை எதுவித முன்னேற்றமுமில்லை. இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் தமிழர் தாயகத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

நன்றி
**ஈழநாதம்**
மட்டக்களப்பு



# நினைவு வணக்கம்

## மேஜர் சுரேந்தி (நமசிவாயம் சுரேந்திரகுமார)

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.




தமிழீழ விடுதலைக்கு, வெளிநாட்டில் நீண்டகாலம்
செயற்பட்டுப் பெரும்பங்காற்றி விபத்தொன்றில் (18.10.1991)
வீரச்சாவடைந்த ஜேர்மனிக்கிளைப் பொறுப்பாளர்.
மேஜர் சுரேந்தி ((நமசிவாயம் சுரேந்திரகுமார்),
யேர்மனிக்கிளையின் கலைபண்பாட்டுக்கழகப்
பொறுப்பாளர். கிருஸ்ணமூர்த்தி (குஞ்சன்),
யேர்மனிக் கிளையின் மாநிலப் பொறுப்பாளர்.
சௌந்தரராஜன் (சௌந்தி),
அவரது மனைவி விஜயகுமாரி,
மகள் சபீலா ஆகியோருக்கு
எமது வீரவணக்கங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு
07-08-1956

இறப்பு
18-10-1991

தமிழீழ விடுதலைப்புலிகள் - ஜேர்மனிக்கிளை.



மலர்வு :
29.03.1957

உதிர்வு :
04.11.2003

திதி :
24.10.2004

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் சோமசுந்தரம் சுந்தரலிங்கம்

-5ம் வட்டாரம் நயினாதீவு

காற்றோடு வந்த செய்தி கனவாகிப்போகாதோ?
கலங்கிவாடுகிறோம், கண்ணீரில் தேடுகிறோம்.
நம்பமுடியவில்லை! எமதப்பா எமைப்பிரிந்து சென்றுவிட்ட
காலம்தான் ஓராண்டு முடிந்த கதை நம்பமுடியவில்லை.
கள்ளம் கபடமற்ற உங்களைக் கவர்ந்தானோ காலன் அவன்
நாங்கள் காலத்தை இருளாக்கி கண்ணீரை ஆறாக்கி
வாழ்வைப் போராக்கி வாழாமல் வாடுகிறோம்.
எமையெல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு மின்னலென
மறைந்தீரோ?
ஆண்டாண்டு சென்றாலும் எமைவிட்டு அகலாது உம்பிரிவு.
உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி !!!

-மனைவி, பிள்ளைகள், அம்மா, ஐயா, மாமா, மாமி, சகோதர
சகோதரிகள், மைத்துனர் மைத்துனியர், பெறாமக்கள்,
மருமக்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

தகவல்: நா. சோமசுந்தரம் (பிரான்ஸ்)
தொலைபேசி: 01 30 98 40 96

# தமிழ் – முஸ்லிம் பிரச்சனைகளைத் தூண்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் சதித்திட்டம்!



கருணாவைப் பயன்படுத்தி அரசாங்கமும் இராணுவப் புலானாய்வுத் துறையும் நடத்திய நிழல் யுத்தம் வெற்றி பெறாத நிலையில் – புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு மாற்று வழிகளை நாட வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

கருணாவின் அணியைச் சேர்ந்த குறிப்பிட்டளவானோரை இராணுவப் புலனாய்வுத்துறை தமது வலைப்பின்னலுக்குள் வைத்துக் கொண்டு கிழக்கில் புலிகளுக்கும், தமிழ் தேசியத்திற்கும் எதிரான நடவடிக்கைகளுக்கு அவர்களைப் பயன்படுத்தி வந்தது.

இதனை அடுத்துப் புலிகள் கிழக்கிலும் நாட்டின் தலைநகரப்பகுதியிலும் ஆரம்பித்த நடவடிக்கைகளில் கருணா அணியினர் பெரிதும் நசுக்கப்பட்டு விட்டனர். முக்கியஸ்தர்கள் பலரையும் இழந்துவிட்ட நிலையில் கருணா அணியினரைக் கொண்டு இனிமேல் புலிகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முடியாதெனப் படைத்தரப்பு கருதுகின்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்து விட்டது.

அத்துடன் புலிகள் மீதான நிழல் யுத்தத்திற்கு படைத்தரப்பு மட்டக்களப்பில் எல்லையோரமாக இருக்கும் பொலநறுவை மாவட்ட காட்டுப்பகுதிகளையே தளமாகப் பயன்படுத்தியது. (வெலிகந்த, மன்னம்பிட்டி, முத்துகல, மாதுறுஓயா, போன்ற பகுதிகளில் படைத்தரப்பு கருணா அணியினரைப் பாதுகாத்து காட்டுப் பகுதி ஊடாக வாகரை மற்றும் தொப்பிகல காடுகளுக்குள் ஊடுருவச் செய்து தாக்குதல்களை நடத்தி வந்தது.

தம் மீதான நிழல் யுத்தத்தை முறியடிக்கத் திட்டமிட்ட புலிகள், தமது புலனாய்வு மற்றும் நடவடிக்கை விஸ்தரிப்பினுள் பொலநறுவ மாவட்டத்தையும் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

இது படைத்தரப்பு எதிர்பாராத ஒரு விளைவாகும். அண்மைக்காலத்தில் பொலநறுவ மாவட்டத்தில் கருணா அணியினர் மற்றும் உதவுவோர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். அது போன்றே சகல பகுதிகளிலும் கருணா குழுவினரைக் களையெடுக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்ட நிலையில் படைத்தரப்பின் நிழல் யுத்தம் பெரிதும் தோற்கடிக்கப்பட்டு விட்டதென்றே கூற வேண்டும்.

புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தம் ஓய்ந்து வரும் நிலையில் தொடர்ந்து தமிழர் தாயகப்பகுதிகளில் பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதாகவே கருதப்படுகின்றது.

புலிகளை நிம்மதியாக இருக்கவிடாமல் அவர்களைத் தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் துரத்திக் கொண்டிருப்பதும், புலிகள் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி அவர்களை அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்துவதும் தான் இத்தகைய திட்டங்களின் மூலோபாயமாகும்.

இந்த வகையில் அண்மையில் புதிதாக கிளப்பப்பட்ட பிரச்சினை தான் முஸ்லிம்கள் பிரச்சினையாகும். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் முஸ்லிம்களைப் புலிகளுக்கு எதிராகத்தூண்டி விடப் பலமுறை முயற்சிகள் எடுக்கப்பட்டன.

மூதூர், கிண்ணியா, வாழைச்சேனை, அம்பாறை, ஓட்டமாவடி என்று பல்வேறு இடங்களிலும் முஸ்லிம்களுக்கும், புலிகளுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டன. பலவன்முறைச் சம்பவங்களும் உயிரிழப்புக்களும் கூட கடந்த காலத்தில் இடம் பெற்று வந்தன. ஆயினும் இத்தகைய பிரச்சினைகளை புலிகள் சுமூகமாகத் தீர்த்து வைத்திருந்தனர்.

ஆனால் மீண்டும் வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல்களைத் தூண்டி விடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இது புலிகளைச் சிக்கலில் மாட்டி விடுவதுடன் தமிழ்–முஸ்லிம் இனப்பிரச்சினையை ஏற்படுத்தி அதில் குளிர்காய எடுக்கப்படும் முயற்சியும் தான்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் முதலில் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்ற கருத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி சந்திரிகா கூட்டிய தேசிய ஆலோசனைச் சபைத் திட்டத்தைப் புறக்கணித்த பின் தான், இந்தக் கலவர முயற்சி தோற்றம் பெற்றிருக்கிறது.

தமிழ்–முஸ்லிம் மக்களும் அரசியல் தலைமைகளும் இணைந்து கொண்டால் தாம் பலவீனமடைவதுடன் தமிழ் தரப்பு பலமடைந்து விடும் என்று அச்சம் காரணமாகவே பிளவுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மன்னார்– கரிசல் பகுதியில் முஸ்லிம் ஒருவர் சுடப்பட்ட சம்பவத்தை அடுத்து புலிகளின் அலுவலகங்கள் மற்றும் தமிழரின் வர்த்தக நிலையங்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறை ஒன்றின் கீழேயே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இதுபோன்றே அம்பாறை வட்டமடுவில் மேய்ச்சல் நிலத்தில் விவசாயம் செய்து வந்த முஸ்லிம்களுக்கு வேறு இடங்களில் விவசாயிக்கான ஒதுக்க ஏற்கனவே இணக்கம் காணப்பட்டபோதும், மீளவும் அந்தப்பிரச்சனை தூண்டிவிடப் பட்டிருக்கிறது.

பொலநறுவை மாவட்டம் கரலகல்வில பகுதியில் இரண்டு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப் பட்டதுடன் இந்தக் கொலை களுக்குப் புலிகளே காரணம் என படைத்தரப்பு குற்றம் சுமத்தியிருக்கிறது.

வவுனியா நகரிலும் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் தனிப்பட்ட ஒழுக்கவீன நடவடிக்கையைப் பயன்படுத்தி இன மோதல்களை தூண்டிவிட முயற்சிகள் எடுக்கப்பட்டு அது தோல்வியில் முடிந்திருக்கிறது.

கிட்டத்தட்ட ஒரே களத்தில் வடக்கு கிழக்கில் பல்வேறு பகுதிகளிலும் தமிழ் – முஸ்லிம் வன்முறைகளைத் தூண்டும் வகையில் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதுடன் இந்தச் சம்பவங்கள் மீதான பழியும் புலிகள் மீதே சுமத்தப்பட்டிருக்கிறது.

சர்வதேச ரீதியில் புலிகளை நெருக்கடிக்குள் சிக்க வைத்தல், தமிழ் முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைத்தல் ஆகிய நோக்கங்களுக்காகவே இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சம்பவங்களின் பின்னால் இராணுவப் புலனாய்வுத் துறையினர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தொடர்ந்தும் புலிகளை நோக்கி நிழல் யுத்தத்தை நடத்துவதில் இராணுவ புலனாய்வுத் துறையினர் ஈடுபட்டே வருகின்றர். புலிகளை ஒரு யுத்தத்திற்கு இழுத்தல் , அவர்களைப் பலவீனப்படுத்தல் போன்ற நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளை புலிகளும் மிகத்திறமையாகவே எதிர் கொண்டு வருகின்றனர்.

புலிகளின் புலனாய்வுத்துறை வளர்ச்சி பெறுவதற்கு அரச படைகளின் இது போன்ற கடந்த கால சம்பவங்கள் தான் பெரிதும் உதவியிருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவங்கள், அவர்களை இன்னமும் பட்டை தீட்டுமே தவிர, பலவீனப்படுத்தப் போவதில்லை.

– சுபத்திரா

**இதனை அடுத்துப் புலிகள் கிழக்கிலும் நாட்டின் தலைநகரப்பகுதியிலும் ஆரம்பித்த நடவடிக்கைகளில் கருணா அணியினர் பெரிதும் நசுக்கப்பட்டு விட்டனர். முக்கியஸ்தர்கள் பலரையும் இழந்துவிட்ட நிலையில் கருணா அணியினரைக் கொண்டு இனிமேல் புலிகளுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முடியாதெனப் படைத்தரப்பு கருதுகின்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்து விட்டது.**

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா ? B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

# எங்குமில்லை = இப்பொழுது+இங்கே

## Nowhere = Now + Here

உலகத்திற்கு தொடக்கமில்லை. ஆனால் அது முடிவுக்கு வரும். ஞானம் தொடங்கும், ஆனால் முடிவுக்கு வரும். அறியாமைக்கு தொடக்கமில்லை. ஆனால் முடிவுண்டு. விழிப்புணர்வுக்கு தொடக்கமுண்டு. ஆனால் அதற்கு தொடக்கமோ தரிப்பிடமோ கிடையாது. இவ்வுலகில் ஒவ்வொன் றுக்கும் வரையறையுண்டு. ஆனால் ஆன்மீகத்துக்கும் அதனால் நிகழும் அனுபவத்துக்கும் வரையறை கிடையாது. அது சமுத்திரம் போல் எல்லையற்று விரிந்தது.. அதில் எப்பொழுதுமே ஏதாவதொன்றை அடைந்த வண்ணம் இருப்போமேயன்றி எதையும் முடிவாக அடைய மாட்டோம். அதன் முடிவு இறப்பேயாகும். இறப்புடன் மேற்கொண்டு கதவுகள் திறக்கவோ மலர்கள் மலரவோ சாத்தியம் இல்லை. அந்த இறப்பு நிலையில் அனைத்தும் எதிர்காலமில்லா இறந்தகாலமாகும். 'முடிவு'என்றால் எதிர்காலமில்லாது இறந்தகாலம்தானே. விழிப்பு நிலை தெரிவற்றதாகவும் முயற்சியற்றதாகவும் இருக்கவேண்டும். தெரிவும் முயற்சியும் தெரிபவனையும் முயல்பவனையும் பொறுத்தது. தெரிபவனும் முயல்பவனும் 'நான்' சம்மந்தப்பட்ட எதுவும் காலத்திற் குட்பட்டது. தொடக்கமில்லா அறியாமை முடிவுறும் போது விழிப்புணர்வு தொடங்கும். தொடங்கிய விழிப்புணர்வு முடிவுறாது.

எங்களது இறந்தகாலம் எவ்வளவுக்கெவ்வளவு சுமையற்றதாய் உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு எங்களது எதிர்காலம் பெரிதாய் இருக்கும். இறந்த கால மிச்சங்கள் இல்லாவிட்டால் - உளவியல் மிச்சங்கள் இல்லாவிட்டால் காலத்தைக் கடந்த நிலையை நாம் எதிர்கொள்வோம். இது ஓர் அரிய தரிசனம்.

இலக்கொன்றை தேடுபவரே நாட்டின் ஜனாதிபதியாகவும், சர்வதிகாரியாகவும், பணக்காரராகவும், அரசியல் வாதியாகவும் மாறுவர். இவர்கள் எல்லோரும் நிழல்களைப் பின் தொடர்ந்து ஓடுபவர்கள். ஆவர். சனாதிபதியாகவும், சர்வாதிகாரியாகவும் ஆன பின் அவரது அடுத்த நிலை என்ன? அதே ஆள் தான் இன்னொன்றாக மாறியுள்ளார். முன்பிருந்த மனிதன் என்ற நிலையை விட மோசமான அடைந்தது தான் கண்ட பயன். அவர்கள் இன்றைய இப் பதவிகளை - அந்தஸ்துகளை அடைவதற்கான பணத்தின் முடிவில் அவர்கள்



வன்முறைகளையும், ஊழல்களையும் தந்திரங்களையும் கொண்ட மகாபுருஷர்களாக மாறியிருக்கின்றனர். அவர்கள் எதையும் செய்யலாம். செய்து சனாதிபதி ஆகலாம். சனாதிபதியான பிற்பாடும் அவர்கள், எதையும் செய்யலாம். அரியாசனம் ஏறுகிறவர் மலிந்த காலமிது.

கௌதமர் தனது தந்தையிடம் அமைதியையும், அன்பையும், கருணையும் தவிர மற்ற அனைத்தையும் கண்டார். இயற்கையை அதன் அழகை - கவிதையை -இசையை இரசித்து இன்புற அவருக்கு நேரமில்லை, அப்படி நேரங்கிடைத்திருந்தாலும் அவற்றைப் பார்க்கவும் கேட்கவும் அவருக்குக் கண்களுமில்லை. காதுகளுமில்லை. தொடர்ச்சியாக நாடுகளுடன் போரிடவே அவருக்கு நேரம் போதவில்லை. தனது தந்தைக்கு ஒரே மகனாய்ப் பிறந்த கௌதமர் தனது தந்தையிடம் உயிர்பற்ற, பேராசை கொண்ட வெறுமையான வரண்ட வாழ்க்கையைக் கண்டு தானும் அந்த போலிவாழ்க்கைச் சக்கரத்திற்குள் சிக்கிவிட விரும்பாமல் முடி சூடப்படுவதற்கு முன்னரே நாட்டை விட்டு வெளியேறினார். வெளிநாட்டிலுள்ள ஒரு காட்டுக் குகைக்குள் இருந்த கௌதமரை அந்நாட்டு மன்னன் ஓடோடிச் சென்று சந்தித்து தன்னுடன் அரண்மனைக்கு வரும்படி கோருகிறார். அதற்கு கௌதமர் "நான் இன்னொரு சாம்ராச்சியத்தை பெறுவதற்காக ஒரு சாம்ராச்சியத்தை விட்டு நீங்கி வரவில்லை. உங்களது பெரிய சாம்ராச்சியத்திலும் அரண்மனையிலும் அதை விட பெரிய வெறுமையும் போலியும் பகட்டுப் பயனின்மையுமே உள்ளன. ஆனால் என்னிடமிருந்து பிரித்து விட முடியாததையே நான் தேடுகிறேன். எனது இதயத்தின் சாம்ராச்சியத்தைக் கொண்டுவரக்கூடிய ஒன்றையே நான் தேடுகின்றேன். எனக்கு நான் வெளியேயுள்ள எதனையும் நான் நாடவில்லை. என்னுள் இருக்கும் சாம்ராச்சியத்தில் அன்பும், அமைதியும், கருணையும், அழகும், சமாதானமுமே இருக்கவேண்டும். பெறுமதியும் புனிதத்துவம் மிக்க ஒவ்வொன்றும் நமது அகத்திலே உள்ளது. எனவே நான் என்னுள் என்னையே தேடுகின்றேன். என்னைக் குழப்பாதீர்கள். அப்படி நீங்கள் செய்ய முனைந்தால் நான் உங்கள் நாட்டை விட்டு வேறு நாட்டுக்கு போகவேண்டி வரும்". என்று கூறிமுடித்தார்.

என்னோடு நான்



கந்தையா நவரேந்திரன்

கௌதமர் மேற்கொண்ட பயணம் இலக்கில்லாப் பயணம். அது எங்கும் இட்டுச் செல்லாது. இதனை நாம் அழகான ஆங்கில வார்த்தையால் விளக்கிக் கூறலாம்- 'எங்குமில்லை' என்பதை ஆங்கிலத்தில் Nowhere= Now Here.

'இப்பொழுது' 'இங்கே'என்பது தான் 'எங்குமில்லை' என்ற தத்துவச் சொல்லாக உருப்பெறுவது எவ்வளவு வசதியான தெளிவொன்றையளித்து நிற்கின்றது!

நாங்கள் எங்களது தேடலை - அகப்பயணத்தை இப்பொழுதே இங்கேயே தொடங்க வேண்டும். ஏனெனில், உலக இருப்பில், இப்பொழுதே இங்கேயே உண்மையில் உள்ளது. இதில் தான் எமது இருப்பும் இருந்து கொண்டிருக்கின்றது. இதில் நாளை என்றும் நேற்று என்றும் இல்லை. 'அங்கே' 'அப்பொழுது' என்ற சொற்பதங்கள் மொழியின் சேய்மையைக் குறிப்பனவாய் உள்ளன. ஆனால் இருப்பில் (Existence)) அனைத்தும் இங்கேயே இப்பொழுதே உள்ளன. 'இப்பொழுது' 'இங்கே' என்பவை வெவ்வேறானவையல்ல. ஒரே உண்மையின் இரண்டு அம்சங்கள் அவை. நவீன பௌதீகவியல் வெளியும் (space), நேரமும் (Time) இரண்டல்ல. 'வெளி' 'நேரம்' ஆகியவற்றை கிட்டத்தட்டத் தனது வாழ்நாள் முழுவதும் ஆய்வு நடாத்திய ஐன்ஸ்டீன் தனது ஆய்வியல் கோட்பாட்டில் (Theory of relativity) அளவைகள் யாவும் ஒன்றையொன்று சார்ந்தனவேயன்றி தனி நிலை இயல்புகள் உடையனவல்ல என்று ஆதாரத்துடன் வெளியிட்டார். அவர் கடைசியாக இந்த 'வெளி' 'நேரம்' என்ற இரண்டு சொற்பதங்களையும் நீக்கி விட்டு அவற்றுக்கு பதிலாக 'வெளிநேரம்' (Spaciotime) என்ற ஒரு சொற்பதத்தையே உபயோகிக்கின்றார். 'இப்பொழுதை' 'இங்கே'யிருந்து பிரிக்க முடியாது என்பதை அவர் புரிந்திருந்த படியால் தான் அப்படி ஒரு சொல்லை உபயோகித்தார்.

காலத்தைக் கடந்த அகப்பயணத்தை மேற்கொள்ளும் போது, அப்பயணம் ஓர் இப்பொழுதிலிருந்து இன்னொர் இப்பொழுதிற்கும், ஓர் இங்கேயிலிருந்து இன்னொர் இங்கே வரைக்கும் மேற்கொள்ளப்படும் பயணம் ஆகும். எனவே இந்த அகப்பயணத்தில் காலமில்லாத படியால் நாம் காணவிழையும் உண்மை எம்மகத்தில் இப்பொழுதே இங்கேயேயுள்ள தேயன்றி வேறெங்குமில்லை. நாங்களும் காலங்கடந்ததின் ஒரு பகுதியே என்பதை உணர்ந்து கொண்டால், வாழ்க்கையானது காலங்கடந்தது என்று களிமகிழ்வெய்துவோம். 'இங்கு' 'மரணம் நிகழாது'. காரணம் 'இங்கு' என்பது எக்கணமும் இருந்துகொண்டே இருப்பதனால், அதற்கு முடிவு இல்லை.

## மருவியது எப்படி ?

பழமொழிகள் திருக்குறளைப் போல, ஒற்றைவரியில் வாழ்வைச் சொல்பவை. வாய்மொழியாக வந்த பழமொழிகள் பல வழக்கொழிந்துபோய்விட்டன. எஞ்சியுள்ளவையும் காலத்துக்கு காலம் மருவி புதிய புதிய அர்த்தங்களை கொண்டுவருகின்றன. அவ்வாறு கால மாற்றத்தில் மருவி புதிய கருத்துக்களை உருவாக்கிவிட்ட விடயங்களை இப்பகுதியூடாக தொடர்ந்து பார்ப்போம். நீங்கள் அறிந்ததையும் இந்தப்பகுதிக்கு எழுதி அனுப்பிவைக்கலாம்.

### உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு

வயிறு தொப்பையாக இல்லாமல், சுருங்கி.. அதாவது ஒட்டி இருத்தல் பெண்களுக்கு அழகு என்பதாகத்தான், இதன் பொருளை எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்டி என்பது சாப்பாடு. சாப்பாடு செய்வதற்கான நேரம் அதிகமாகும் பட்சத்தில், பெண்கள் சமையலறையிலேயே முடங்கி விடுகிறார்கள். இதனால் இவர்கள் மற்றைய விடயங்களிலிருந்து பின்னுக்குப் போய் விடுகிறார்கள். இந்த நிலை மாறுவதற்கு அவர்கள் சுவையான சமையலை குறுகிய நேரத்துக்குள் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே பெண்களுக்கு அழகு.

- சந்திரவதனா

(இது குறித்த மாற்றுக் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.)

சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04



# காலம் ஆகி வந்த கதை 22

இரவி அருணாசலம்

## என் கண்ணல்லவா நீ – 7

கலா தேவனைத்தான் காதலிப்பதாக உதயன் ஒப்புக் கொண்டான். `இந்தப் பரதேசியை நான்தான் மாலா வீட்டிலை கொண்டுபோய் இன்ரடியூஸ் பண்ணி விட்டனான். இந்த நாய் இப்ப எனக்குத் துரோகமிழைக்குது' என்றான் உதயன்.

உதயன்தான் தேவனை ஏற்றிக்கொண்டு அல்லது தேவன்தான் உதயனை ஏற்றிக் கொண்டு மாலாவீட்டை போவது. இந்த இடத்தில் நான் படுபிழையான வசனம் ஒன்றைப் பயன்படுத்திவிட்டேன். நான் அறிய ஒரேயொருமுறை உதயன் தனியே சைக்கிளில் வந்தான். எதிர்த்தாற்போல, ஏபோர்ட்டி கார் ஒன்று வலு சிலோவாக வந்தது. உதயனது கை பதறத் தொடங்கியது. ஹான்டில் ஆடத் தொடங்கியது. கருக்குமட்டை கீற வேலிக்குள் பொத்தெண்டு செருகுப்பட்டுக்கிடந்தான். கார் அங்கால் போய்விட்டது. எழும்பி காயத்தை தடவிவிட்டு சைக்கிளை உருட்டிக்கொண்டே அறைக்கு வந்தான். இனி ஒரு கார் வராது என்று என்ன நிச்சயம்?. கார் வந்ததும், தான் வேலிக்குள் கிடந்ததும்தான் தனக்குத் தெரியும் என்றான். அது எனது சைக்கிள். அது பத்திரமாக வந்து சேர்ந்தது. ஆனால் கையோடு அவன் கொண்டு வந்திருந்த சோற்றுப் பார்சலைக் காணவில்லை. அன்றிலிருந்து உதயன் ஒருபோதும் சைக்கிள் ஓடியதில்லை. தேவன் ஓட காரில் ஏறி குந்தி இருந்தான் உதயன்.

உதயன் மாலாவும் தனிய இருந்து கதைக்கிற நேரத்தில் தேவனும் கலாவும் தனிய இருந்து கதைத்தார்கள். பிறகு நால்வரும் சேர்ந்து கார்ட்ஸ் அடித்தார்கள். தாயம் விளையாடினார்கள். பாண்டி விளையாடினார்கள். மாலாவின் அம்மா அடிக்கடி தேத்தண்ணி போட்டுக்கொண்டு வந்து கொடுத்தா. சாப்பிடச் சொல்லிக்கேட்டா. ஒவ்வொரு நாளும் சாப்பிடச் சொல்லி மூன்றாம் தரம் கேட்கிறபோது உதயன் எழும்பி பஸ்ராண்டிற்கு சோற்றுப் பார்சல் எடுக்கப்போனான். தேவன் அங்கிருந்து மத்தியானச் சாப்பாட்டை மூன்று மணிக்குப் பிறகு சாப்பிட்டான். கார்ட்ஸ் அடிக்கிறபோதோ, பாண்டி, தாயம் விளையாடுகிறபோதோ காதல் வந்ததாக உதயன் சொல்லவில்லை. இரவு ஏழுமணியிலிருந்து ஒன்பது மணிவரையான பவர்கட் நேரத்தில் தான் காதல் பயிர் வளர்ந்ததாக உதயன் கூறினான் அல்லது சிரித்தான்.

`உந்த நாய் ஊர் வழிய நக்கிக்கொண்டு திரியிறதுதானே?,' எங்கையெண்டாலும் நக்கட்டும். என்னைப் பற்றிக் கேவலமா உவருக்கென்ன கதை, பரதேசி!' என்றான் உதயன். மாலாவின் அம்மா `ஏன் தம்பி, உதயன் இஞ்சை சாப்பிட விரும்பிறேல்லை?' என்று தேவனிடம் கேட்டா. `சாதி பாக்கிறானாக்கும்...' என்று முணுமுணுக்கிற மாதிரிச் சொன்னான் தேவன். அதன் பிறகு மாலா உதயனை முத்தமிட விடவில்லை என்பதல்ல முக்கியம். முகம் கொடுத்துக் கதைப்பதுமில்லை. அதுவும் கூடப்பரவாயில்லை.

வள்ளி தெய்வானை போல் மாலாவும் கலாவும் தேவனுடன் சிறீதர் தியேட்டருக்கு `பட்டாக்கத்தி பைரவன்' படம் பார்க்கப்போகிறார்கள். பிறகு மத்தியானம் வந்து சாப்பிட்டு விட்டு, வெய்யில் தாள, வெலிங்டன் தியேட்டருக்கு `நினைத்தாலே இனிக்கும்' படம் பார்க்கப் போய்விட்டிருக்கிறார்கள். இரண்டு முறை உதயன் மாலாவிட்டை போயிருக்கிறான். இரண்டு முறையும் `படம், படம்' என்று மாலாவின் அம்மா சொல்லியிருக்கிறா. பிறகு, `நீங்களெல்லாம் ஏன் குறைஞ்ச சாதி வீட்டை வாறியள்?' என்றும் கேட்டுவிட்டிருக்கிறா.

`உது மூதேசிக்கு ஏன் தேவையில்லாத கதை, நான் சாதி பாக்கிற ஆளா, சாதி பாக்கிற ஆளெண்டால் நானே மாலாவைக் காதலிப்பனா', என்று உதயன் ஆக்ரோசமாக அதனைக் கேட்டான். `உந்த நாய்தான் கலாவை விட்டிட்டு ஓடும் பார்' என்றான்.

உதயன் கதைக்கிறது எல்லாம் சரிதான். எல்லாம் ஞாயம்தான். ஏ.எல். உதயனுக்கு இது இரண்டாம் தரம் கவனமாகப் படிக்கவேணும். முதலாம் தரம் ஏ. எல் பாஸ் பண்ணின ஆக்களும் குறைவு. இரண்டாம்தரம் விட்டு மூன்றாம் தரம் பாஸ்பண்ணின ஆக்களையும் நான் காணேல்லை. இரண்டாம் தரத்திலை கிளியர்பண்ண வேணும். இல்லாட்டில் சிவம் மாதிரி மெடிக்கல் அனுப்பவேணும் அல்லது விசி மாதிரி வேறை படிப்பு படிக்கவேணும்.

பொங்கல் அன்றிரவுதான் விசி அதனைச் சொன்னான். அப்பாவின் பொங்கலில் அமிர்தம் உண்போம் என்ற நான் வீடு போயிருந்தேன். அக்காவும் வந்திருந்தா. மூத்தவன் பாபுவுக்கு வெடிப்பக்கெற் கொடுத்தேன். அவன் சந்தோசமாக அதனை வாங்கி, கொள்ளி எடுத்துக்கொண்டு உடனே வெடிகொளுத்த ஓடினான். இளையவன் கோபிக்கு, அது மூன்று வயது, வெடிகொளுத்தும் பருவம் வரவில்லை. பூறீஸ் பக்கெற் கொடுத்தேன். பூறீஸ் சீறுகிற படத்தைப் பார்த்தவன் தன் கையிலேயே அது வெடித்து விடும் என்று அவனுக்கு இருந்தது. பக்கற்றைச் சுழட்டி எறிந்துவிட்டு பயந்துகொண்டு ஓடினான். அக்காவுக்கு அந்தக் குணம் இல்லை. சின்னப்பிள்ளையில் நான் தான் அந்தக்குணம் என்று அம்மா சொல்லிச் சிரிச்சா. நான் ஓடிப்போய் கோபியைத் தூக்கிக் கொஞ்சினேன்.

இரவுக்கு விசி வந்தான். வானம் மிகத் தெளிவாக இருக்க வெட்டுப்பட்ட நிலா என்றாலும் நல்ல வெளிச்சம் தந்தது. பனிக்குளிர்தான் என்றாலும் றோட்டிலிருந்து கதைத்தோம்.

`நாளைக்கு குண்டசாலைக்கு போறன்' என்றான். `ஏ.எல் றிசல்ற்றோடை அப்பிளை பண்ணினன். அது கிடைச்சிட்டுது' என்றான். `அப்ப நீ ஏ.எல் எடுக்கேல்லையோ?' என்று கேட்டேன். `எக்ஸாம் நேரம் வந்து எடுப்பன். ஆனால் எனக்குப் பெரிய நம்பிக்கையில்லை' என்றான். `அப்ப நீ டொக்ரராக மாட்டாய்' என்று மனசுக்குள் சொன்னேன். விவசாயம் படிக்கப் போறான். செத்தல் மிளகாயையும், வெங்காய விளைச்சலையும் ஆராயப் போறான். என்னை விட்டுத் தூரே போகிறான்.

மாலாவின் அம்மா `ஏன் தம்பி, உதயன் இஞ்சை சாப்பிட விரும்பிறேல்லை?' என்று தேவனிடம் கேட்டா. `சாதி பாக்கிறானாக்கும்...' என்று முணுமுணுக்கிற மாதிரிச் சொன்னான் தேவன். அதன் பிறகு மாலா உதயனை முத்தமிட விடவில்லை என்பதல்ல முக்கியம். முகம் கொடுத்துக் கதைப்பதுமில்லை. அதுவும் கூடப்பரவாயில்லை.

இளம்பிள்ளை வாதம் வந்து அவன் மெலிவு கொண்டவன். குண்டசாலையின் உதவாத சாப்பாடு சாப்பிட்டு இன்னும் மெலிவு கொள்ளப்போகிறான். பனிக்குளிரின் சாமப்போது மட்டும், நிலாத்துண்டு மேற்கில் வீழும் வரைக்கும் விசி எல்லாம் கதைத்தான். அவன் போகிற போது இளம்பிள்ளை வாதம் வந்து ஆஸ்பத்திரியில் படுத்திருந்தபோது, நான் போகிறேன் என்று சொல்ல, பார்த்த பார்வை இப்போது பார்த்தான். விடியும்வரை சொல்ல முடியாத வேதனை வந்து என்னைத் தின்றது.

ஒருமுறை விடியற்புறம் என்பதனையும் பாராமல் நான் பெலத்துச் சிரித்ததைத் தவிர, நான் இப்பொழுது அகிலனுடன் கதைப்பதும் குறைந்து போயிற்று. கோபம் இல்லை. நான் கடும் படிப்பு படிக்கவும் இல்லை. பப்ளிக் லைபிறறிக்குப் போவதும் இப்போது ஏலாமல் போயிற்று. தேக்குமர மேசைகளெல்லாம் ஏஎல் படிக்கிற பெடிபெட்டைகளால் நிரம்பி வழிகிறது. என்பெருவெண் பெண்ணைப் பார்க்காததும், அவள் ஈரக்காற்றை முகராததும் நெஞ்சைத் துயருறச் செய்கிறது. சோதினை முடியட்டும். எல்லோரும் அற்றுப்போவார்கள். எனக்கு விரும்பிய புத்தகம் எடுத்து அவள் மடியில் நான் கிடப்பேன். அவளை நான் சுவாசிப்பேன்.

அகிலன் கடும் படிப்பு படிக்கிறான். என் வாயை அது பொத்தி வைத்து விடுகிறது. அதனால் நானும் இப்போ கடும்படிப்பு படிக்க வேண்டிப் போயிற்று. சோதினைக்கு இன்னும் ஒரு மாதமும் இல்லை. விடியற்புறத்தில் – அப்படியும் சொல்லக்கூடாது. சாமத்தில் படித்து முடித்து படுத்து சாமத்திலேயே எலாம் வைக்கிறான். இப்பதான் படுத்தமாதிரி இருக்கிறது. உடனேயே எலாம் அடிக்கிறது.

நான் முழித்தேன். என்றாலும் அகிலன் எழும்பி லைற் போடுவான் என்று கிடந்தேன். கணநேரமாயிற்று. அறைக்குள் வெளிச்சம் வரக்காணேல்லை. `ரவி.ரவி..ரவி டேய்.. சுவிச்சைக் காணேல்லையடா..' என்று அகிலன் முணுமுணுக்கிற மாதிரி எழுப்பினான். நான் படுத்திருக்கிற இடத்தின் நிலையைக் குறித்து, அந்த இருட்டுக்குள் எழும்பிப்போய் சுவிச்சைப் போடடேன். லைற் பக்கென்று எரிய அகிலன் எதிர் மூலையில் சுவிச்சைத் தடவிக் கொண்டிருந்தான். `எலாம் அடிச்சு உடனை திடுக்கிட்டு எழும்பினதிலை திக்குத்திசை தெரியேல்லை' என்றான். அவன் என்ன காரணம் சொன்னாலும் நான் சிரிக்கத் தொடங்கினேன்.

சோதினை வரைக்குமான என் கடைசிச் சிரிப்பு அது என்றுதான் நான் நினைக்கிறேன். அதிகம் சிரித்ததில்லை. அதிகம் சாப்பிட்டதில்லை. அதிகம் நித்திரை கொண்டதில்லை. குடல் சுருங்கியது. கண் சுருங்கியது. உடல் சுருங்கியது.

அம்மா, நாகம்மாவையும், சரசுவையும் விறாந்தையில் வைத்து புளியம்பழம் உடைக்கிறபோது ஒருநாள்தான், இன்றையிலிருந்து இனி நல்ல நித்திரை கொள்ளலாம் என்று யோசித்தேன். இனி வயிறு புடைக்கச் சாப்பிடலாம். பின்னேரம் பின்னேரமா உலாத்துப் போடலாம். சாமம் சாசமா முழித்திருந்து எனக்கு விரும்பின ஏதும் புத்தகம் வாசிக்கலாம். காலமை மிகவும் பிந்தி எழும்பலாம். ரவுணிற்குப் போகலாம். யோசனையில்லாமல் படம் பார்க்கலாம். மொக்கன் கடையிலை நாலு றொட்டி ஐந்து றோஸ்ற்றோடை ஒரு நாளைக்கு சாப்பிடலாம். `றிக்கோ'வுக்குப் போய், ஐந்தாறு மட்டன்றோல் சோஸோடை தொட்டுச் சாப்பிட்டு, றிக்கோ கோப்பி குடிக்க வேணும். எல்லாம் செய்யலாம், எதுவும் செய்யலாம்.

மேலும் இரண்டு ஆசைகள் இருந்தன. இல்லை மூன்று ஆசைகள். மிக அதிகாலையில் எலாம் வைத்து, அது அடிக்க திடுக்கிட்டு எழும்பி, `அட சோதினை எல்லாம் முடிஞ்சுதல்லோ, இனிப் படிக்க தேவையில்லையே' என்று எலாமை நிற்பாட்டி திரும்ப மூசி மூசி சூரியன் உச்சிக்குப் போகும்வரை நித்திரை கொள்ள வேணும். அது ஒரு ஆசை.

நந்தினி, ஏ.எல். எக்ஸாம் எடுத்துவிட்டு வந்திருக்கிறாளாம். மிக அழகாக, கொழும்புச் சுவாத்தியத்திற்கு மிக வெள்ளையாக, கொழும்புத் தண்ணிக்கு நீட்டுப் பின்னலாக, கொழுத்து, வெளுத்து என் நந்தினி வந்திருக்கிறாளாம். சூட்டி சொன்னான். சூட்டி முதல் அவளைப் பார்த்தும் விட்டான். `கலியாணம் முடிக்கக் கூடாதெடா. அவளை அறையுள் இருத்தி வைத்து, பாத பூஜைசெய்து கும்பிட வேண்டும்' என்றான். ஓடிப் போய் அவளைப் பார்க்கவேண்டும். ஒழுங்கைப் பக்கம் ஒருக்கால் உலாத்துப்போட்டு அவளைக் கண்ணில் ஒத்தவேண்டும். `ரவி' என்று அவள் கூப்பிடுவாள். தேன் ஒழுகும். அமிர்தம் வடியும். அவள் கூப்பிடுகிறபோதுதான் ரவி அழகான பெயர்.

மூன்றாவது ஆசை. போக வேணும். எந்த நெருக்குவாரமும் இனி இல்லை. சோதினை வரப்போகுது. என்னென்ன கேள்விகள் வரும், எல்லாம் எனக்குத் தெரியுமோ, நான் பாஸ் பண்ணுவனோ? என்கின்ற பயம் இல்லை. போகவேணும். அந்த வெண்மகளைக் காணவேணும். பேப்பர், சஞ்சிகைகள், பக்கத்தை முழுசா மேயவேணும். முதலாம் மாடியில் என்ன இருக்கென்று எட்டிப் பார்த்ததில்லை. பார்க்கவேணும். ஒவ்வொரு அலுமாரி அலுமாரியா தடவவேணும். இரண்டாம் மாடிக்குப் போகவேணும். விரும்பின புத்தகத்தை கண் அயர அயர வாசிக்கவேணும். பண்ணைக் கடல் காற்று குபுகுபுவெனப் பாயும். யன்னல் பக்கம் போய் நின்று காற்று வரும் வழி பார்க்க வேணும். கொழுத்து வெளுத்த என் வெண் திருமகளிடம் போக வேண்டும். அப்படி நினைத்து நான் இருந்தேன். நடந்தது வேறு, மற்றும் கேடு!

ஒரு போதும் அப்படி எழுப்பாத அப்பா என்னை உலுப்பினார். `பப்ளிக் லைபிறறியைக் கொளுத்திப் போட்டாங்களாம்' கத்தினார். எழுந்தது தெரியாது. முகம் கழுவியது தெரியாது. ஒன்றும் தெரியாது. ஒன்றும் ஞாபகமில்லை. சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடினேன். யாழ்ப்பாணம்வரை ஓடினேன். நேரே பப்ளிக் லைபிறறிக்குத்தான் விட்டேன்.

அந்த வெள்ளையில் எல்லாம் கறுத்துக் கிடந்தது. கரி பிடித்துக் கிடந்தது. என் வெண் சிதறிக்கிடந்தாள். சிதைந்து கிடந்தாள். அன்றைக்குத்தான் சோளகத்தின் ஆரம்ப உசுப்பல். மண்ணள்ளி அது கண்ணை நிரப்பவில்லை. புத்தகங்கள் எரிந்த சாம்பலை அள்ளி அது கண்ணை நிரப்பியது. உலகில் ஒன்றும் எனக்குத் தெரியவில்லை. `அய்யோ' என்று மெல்லமாக் குழறினன். `அம்மா' என்று அரற்றினேன். இனி என் செய்வேன் என்று விம்மினேன். தபுதாரனாகிக் கிடந்தேன் நான்.

....... —முற்றும்— .......

# RHYTHM

விசேட விலைக் கழிவு !

விசேட விலைக் கழிவு !

விசேட விலைக் கழிவு !




- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

▶Telephone Cards ▶Video Filming ▶Photography ▶Party Shop

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail : info@rhythmentertainments.com

Website :rhythmentertainment.com



கடல் உணவு வகைகளின் சுரங்கம்

# ஆராழி

## ARALI

D.K.S.R. Asian Suppermarkt
Lostex Plad 8E
Svendborg
5700 Denmark
004562216773

Tiefkuhl Feinkost
Kanal Str 27
67655 Kaisers lautern
Germany
00496313609655
00491776035859
00491797157501

Millennium Traders.
47 Bis, BD de la Muette,
95140 Garges les gonesse,
France.
0033134457347
0033660293073.

Asia Trade Center-Gmbh
Sumpf Str 24
6300 2UG (CH)
0041417404830
0041764183553 Aschok

உங்களுக்குத் தேவையான அனைத்து கடல் உணவு வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்

தாயகக் கடலின் சுவையுணவு சுமந்து புலம் பெயர்ந்து வந்ததோ இந்த ஆராழி!

Norwood Mini Market
31.Station Road
South Norwood
London
SE.25.5AH
Tel. 00442087718585
Mobil 00447958529816 - 00447795386837





# கே.எம்.எஸ் ஜூவலர்ஸ்

மங்கையர்
மனம் கவரும்
அசல் 22கரட் தங்க நகைத்
தெரிவுகளுக்கு...



**K.M.S JEWELLERS 105**
ILFORD LANE, ILFORD,
ESSEX IG1 2RJ

TéL : 0208 514 3072 - Fax:0208 514 18 21

## பங்கு சந்தையில் இருந்து திசை திரும்பும் முதலீட்டாளர்கள்

வெளிநாடுகளில் வாழ்கின்ற பங்கு முதலீட்டாளர்கள் பங்கு சந்தையில் முதலிட ஆர்வமுள்ளவர்கள் தங்கள் முதலீடுகளை பங்குச் சந்தையில் முதலிட, தற்போது தயக்கம் காட்டி வருகின்றனர். மேலும் தங்கள் முதலீடுகளை வேறுதிசைகளில் முதலிட ஆர்வம் காட்டுகின்றனர்.

அதாவது கட்டிடங்கள், மனைகள் கொள்வனவு விற்பனவு எனும் வியாபாரச் சந்தையில் (அதாவது ரியல் எஸ்ரேற்) முதலிட பல முதலீட்டாளர்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். பங்கு சந்தைகள் அடிக்கடி நட்டம் ஏற்படுவதாலும், சர்வதேச பங்கு சந்தைகளில் நிறுவனங்களின் பங்குகளிற்கு உறுதியற்ற விலைகாணப்படுவதே இதற்குக் காரணமாக உள்ளது. பங்கு முதலீட்டாளர்கள் பங்கு சந்தைகளில் முதலிட விரும்புவது இலாபம் பெற கடும்பிரயத் தனங்கள் எடுக்க தேவையில்லை என்பதால். எனவே தற்போது தம் முதலீடுகளை கட்டிடங்கள், மனைகள் கொள்வனவு விற்பனை வியாபாரப் பக்கம் திசை திருப்பி இதில் முதலீடு செய்வதில் போட்டியும் ஆர்வமும் காட்டி வருகின்றனர்.

இது குறித்து இலண்டனில் உள்ள ஸ்டேட் ஸ்ரீட் குளேபல் அட்வைசர்ஸ் (*Stat Street Global advisors*) நிறுவன தலைமை முதலீட்டு அதிகாரி ஆலன் பிரவுண் கூறும்போது முன்பெல்லாம் முதலீட்டாளர்கள் கடன் பத்திரம் மற்றும் பங்குகள் மீது முதலீட்டை மேற்கொண்டால் வருமானம் நிலையானதாக இருக்கும் என எண்ணி போட்டி போட்டு அதிகளவில் முதலீடு செய்தனர். தற்போது பங்குச் சந்தைகள் உறுதியற்ற நிலவரங்கள் ஏற்படுவதால் முதலீட்டாளர்கள் பங்கு சந்தைகளுக்கு பதிலாக அதிகளவில் கட்டிடங்கள், மனைகள் கொள்வனவு, விற்பனவு வியாபார தொழில்கள் மீதான முதலீட்டை மேற்கொள்கின்றனர் என்கிறார். இதனை பங்கு சந்தை செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மேலை தேச சந்தைகளில் கட்டடங்கள், மனைகள் கொள்வனவு விற்பனவு தொழில் விகிதம் என்பது கடந்த 10 ஆண்டுகளில் 8 சதவிகிதத்தில் இருந்து 6 சதவிகிதம் குறைந்தாலும் சொத்தின் மீதான விலை மதிப்பு மேலும் தொடர்ந்து உயர்ந்து வருகின்றது. இத்தொழில் 6 சதவிகித வளர்ச்சியை எட்டமுடியும் என்று கணித்து கூறுவது கடினம். இருப்பினும் இத்துறை நீண்ட கால வளர்ச்சியை ஏற்படுத்தும் என ஆலன் பிரவுண் கூறுகிறார்.

பங்கு சந்தை கடந்த ஆண்டு 17 விகிதத்தில் இருந்து 7 சதவீதமாக விலை வீழ்ச்சி கண்டுள்ளது. ஐரோப்பாவில் அதிகூடிய வர்த்தக வணிக சொத்து முதலீடு 10.9 விகித வளர்ச்சியை எட்டி உள்ளது. கடந்த முதல் மாதம் பிரிட்டன் முதலீட்டு மேலாண்மை கூட்டமைப்பின் அறிக்கையில் கடந்த ஆண்டு பங்குச்சந்தையின் முதலீடு 30 விகிதமாக குறைந்துள்ளதாக தெரிவிக்கிறது.

நடைமுறை நிதியாண்டில் ஜெர்மனி நாட்டின் நிறுவனம் ஒன்று கட்டிட மனை கொள்வனவு விற்பனவு தொழிலில் 10 பில்லியன் டொலர் முதலீட்டை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலண்டனில் கடந்த 2001ல் 2003 காலப்பகுதியில் வீடு மனைகள் வாங்க முதலீடு செய்தவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்கை, அதாவது நான்கு இலட்சமாக உயர்ந்துள்ளது. பணம் வைத்திருப்பவர்கள் பங்குச் சந்தையை விட்டு கட்டிட மனை கொள்வனவு விற்பனவு தொழில்கள் மீதும், இவ்வியாபாரத்தினை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மீதும் முதலீடு செய்வது சாலச் சிறந்தது. வீடுகள் வாங்கும் விடயத்தில் எம்மவர்க்கு நாம் புரியவைக்காமலே புரியும்...

தொகுப்பு -
**அருள் நாயகன்.**

# வர்த்தகம் மூலதனம்

## தமிழர்களின் விடுதலையும் வணிகத் துறையும்

தமிழர்களாகிய நாம் இன்று உலகெங்கும் பரந்து வாழ்கின்றோம். தமிழனிற்கு என்றோர் தனித்தாயகம் இல்லாததால் தரணியெங்கும் பரவி சிதறுண்டு தவித்து விழித்து தலைநிமிர்ந்த தமிழன் தடம் பதியா இடம் உண்டோ இத் தரணியில்! என எண்ணுமளவிற்கு உலகில் பரந்து பட்டு வாழ்கின்றோம்.

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் எம் தமிழினம் தமக்கென்ற கலாச்சாரம், பண்பாடு, சமுக கட்டமைப்புடன் பல்வேறு துறைகளில் தடம் பதித்தாலும் விரல்விட்டு எண்ணக்கூடிய துறைகளில் தான் மிளிர்கின்றனர். உலகின் அனைத்து இன மக்களின் கவனத்தை ஈரக்கக்கூடியவாறு புலம் பெயர் தமிழ் மக்கள் துறைசார் வளர்ச்சி என்பது மிக அருமையாக காணப்படுகின்றனர். நாட்டிற்கு நாடு தமிழ் நிறுவனங்களை எம்மக்கள் நிறுவி நடத்தினாலும் இவர்கள் அடையும் பயன்கள், திருப்திகள், வெற்றிகள் இதனையும் தாண்டிய வளர்ச்சி என்பது எப்படிக் காணப்படுகின்றது என நோக்கின் சீரற்ற பாதையில் தெளிவற்ற பயணமாக காலடி பதித்துள்ளனர். வணிகம் என்ற துறையில் தமிழினம் எப்படியான பாதையில் செல்லவேண்டும், எப்படியான வளர்ச்சியை அடையவேண்டும்! இதனை பொறுத்தே சர்வதேச வர்த்தகத்தில் தமிழினம் கொடிகட்டி பறக்கமுடியும்.

தமிழினம் இன்று தமிழீழத்தில் மேற்கொள்ளும் போராட்டமானது தனிநாடு மண்மீட்புக்கானது மட்டுமல்ல அதற்கு நிகழ்வது பல்துறைசார்ந்த விடுதலை போராட்டமாக விரிவுபட்ட ஒன்று. அதாவது மண்ணின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் அல்ல. தாயகம் விடுதலை அடைந்து விட்டால் முற்றுப்பெறும் போராட்டமல்ல. எனவேதான் தமிழ்தேசிய தலைவர் அவர்கள் மண்மீட்பு போராட்டத்துடன் பல்துறைசார்ந்த அமைப்புகளை தோற்றுவித்து வளர்த்தெடுத்து பரிணாமமிக்க தத்துருபமான விடுதலைப் போராட்டமாக வடிவம் கொடுத்துள்ளார். தமிழீழத்தின் ஒவ்வோர் துறைகளும் வியத்தகு வண்ணம் வளர்ச்சியடைந்து வருவதால் உலகின் வல்லரசு நாடுகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது என்பது பெரும் வெற்றியே.

இன்று உலகில் பரந்துபட்ட நாடுகளில் வாழும் எம்மினம் மொழி, கலாச்சாரம், பண்பாடு, விளையாட்டு, கல்வி என பலதுறைகளில் வழிப்புணர்வு கொண்டு தமக்கென தனி இடத்தை பதித்ததுபோல், வணிகத்துறையில் நீண்ட கால பரந்துபட்ட நோக்கில் தடம் பதிக்காததால் பின்னடைவு பெரிதும் காணப்படுகின்றது.

ஒவ்வோர் நாட்டிலும் வணிக வியாபாரதுறையில் தடம் பதித்தாலும் எம் தமிழ் இனத்திற்கிடையிலேயே தங்கி உள்ளது. இவ் வணிகங்கள் தேவையான முடிவுப் பொருட்களிற்கான உற்பத்தி கண்டுபிடிப்பு என இன்னோர் இனத்தை நம்பியே வணிகதுறை உள்ளது. ஏனைய துறைகளில் தமிழர்கள் கால் பதித்து வளர்ந்து வருவது போன்று வர்த்தக வணிகதுறையில் எம்மினம் எந்தளவு பரந்த நோக்குடன் ஆழமான செயற்பாட்டு திட்டத்துடன் செயற்படுகின்றனர் என நோக்குகையில் ஆழமாக தடம் பதிக்காத தடங்களில் தமிழர்களின் வணிகப் பாதை செல்கிறது.

நாம் எத்துறைகளில் வளர்ச்சி, வெற்றி என்பது வணிகம் என்ற துறையுடன் இணைந்தே அந்தந்த துறைகளின் வளர்ச்சி வெற்றி என்பது தங்கியுள்ளது. எனவே சர்வதேச வர்த்தகத்தில் எம்மினத்தவர்களின் முயற்சி பங்களிப்பு எவ்வாறு அமைந்துள்ளது. வணிகதுறையில் எம்மினத்தவர்கள் எவ்வாறான நாட்டத்தைக் கொண்டுள்ளனர். இன்னும் எந்தெந்த வகையில் வர்த்தக வளர்ச்சி என்பது தோற்றம் பெறல் வேண்டும் என்ற விழிப் புணர்வு, ஆர்வம், தேடல், முயற்சி என்பவற்றை கொணரவே ஈழமுரசு வாரஇதழில் வணிகமுரசு உதயமாகிறது.

ஒவ்வோர் நாடுகளில் வாழும் வணிக அனுபவஸ்தர்கள், பொருளியல் வல்லுனர்கள், துறைசார் கண்டு பிடிப்பாளர்கள், முயற்சியாளர்கள், வெற்றியாளர்கள் என தம் ஆக்கங்களை வணிகமுரசின் ஊடாக படைப்பாக்கம் செய்து தமிழ் இனம் சர்வதேச வணிக துறையில் விழிப்புடன் செயற்பட்டு எத்துறை வெற்றிகொள்ள இவ் வணிகத்துறையின் அவசியத்தை உணர்ந்து படைத்திடுவீர் உங்கள் வணிகம் சார் ஆக்கங்கள். ஒவ்வோர் நாட்டில் வாழும் தமிழ் வர்த்தக ஆர்வலர்கள் தங்கள் படைப்பாக்கத்தை வணி முரசில் வெளிக்கொணர வணிகமுரசு என்றும் முன்னிற்கும் என்பதில் ஐயமில்லை.

**அருள் நாயகன்**
(கருத்தாக்கம்)

## MANCHESTER UNITED இலாபம் வீழ்ச்சி

பிரித்தானிய கால்பந்து கழகமான `மன்செஸ்டர் யுனைட்டெட்' (Manchester United plc) தனது இவ்வருட இலாபத் தொகையில் 35 சதவீதத்தை இழந்துள்ளது. கடந்த ஜீலை மாதத்துடன் நிறைவு செய்யப்பட்ட அதன் நிதி வருடத்திற்கான அறிக்கையிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இக் கழகத்தின் நிகர இலாபம் 29.8 மில்லியன் பவுண்களாக இருந்தபோதும் இவ்வருடம் அது 19.4 மில்லியன் பவுண்களாக குறைவடைந்துள்ளது. கால்பந்தாட்ட வீரர்களை வாங்குதல் ஃ விற்றல் நடவடிக்கையிலும், ஊடகத்துறைக்கான வருமானத்திலுமே இவ் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## VODA FONE புதிய திட்டம்

உலகின் பெரிய செல்லிடப்பேசி சேவை நிறுவனமான `வொடாபோன்' (Voda Fone Group Plc) தனது செலவுகளை குறைக்கவும் விற்பனையை பெருக்கவும் புதிய திட்டங்களை வகுத்து வருகிறது. இப் புதிய திட்டங்கள் சரிவந்தால் 2008 ஆம் ஆண்டு இந் நிறுவனம் 2.5 பில்லியன் பவுண்களை (3.68 பில்லியன் ஈரோ) தனது வருடாந்த விற்பனை தொகையாக கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை `வொடாபோன்' எதிர்வரும் நவம்பர் மாதத்தில் தனது புதிய சேவையான `3G' ஐ ஐரோப்பா மற்றும் ஜப்பானில் அறிமுகப்படுத்தவுள்ளது.

தொகுப்பு :
**தருண்.**

## NOVARTIS பெண்களுக்கு நிவாரணம்

ஐம்பது வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு வரும் வயிற்று உபாதை மற்றும் நாட்பட்ட மலச்சிக்கல் பிரச்சனைகளுக்கு (Irritable Bowel Syndrome) சுவிற்சர்லாந்து மருந்துத்தயாரிப்பு நிறுவனமான `நோவாரிஸ்' (Novartis AG) புதிய வில்லை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் ஏற்கனவே இந்த வில்லையின் விற்பனைக்கு அரச அனுமதி கிடைத்தபோதிலும் ஐரோப்பிய சமூகத்தின் அங்கீகாரத்திற்காக `நோவாரிஸ்' காத்திருக்கிறது. அடுத்த வருடம் ஐரோப்பிய சமூகம் இவ் அங்கீகாரத்தை வழங்கினால் ஐரோப்பாவிலும் இவ் வில்லை விற்பனைக்கு வரும். அமெரிக்காவில் இவ் வில்லைக்கு தற்போது பெருமதிப்பு நிலவி வருகிறது.

## S.I.A க்கு வங்கிகள் தந்த ஆறுதல்

சுவிற்சர்லாந்தின் தேசிய விமான சேவைநிறுவனமான `சுவிஸ் இன்டநாஷனல் எயார் லைன்ஸ்' (Swiss Inter National Airlines) க்கு 325 மில்லியன் சுவிஸ் பிராங்குகளை (209.9 மில்லியன் ஈரோ) ஐந்து சர்வதேச வங்கிகள் கடனாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளன. தற்போது இவ் விமான நிறுவனத்தில் சேவையிலீடுபடுத்தப்படும் விமானங்கள் இதற்குச் சொந்தமானவை அல்ல. அவையாவும் ஜேர்மனியின் பெரும் முதலீட்டாளர் ஒருவரால் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டவையே. தற்போது வங்கிகள் கடனுதவி செய்துள்ளதால் சொந்த விமானங்களைப் பெறுவது பற்றி பேரங்கள் மேற்கொள்ளப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு அப்போதைய தேசிய விமானசேவையான `சுவிஸ் ஏயார்' (swiss air) நிறுவனம் 1.7 பில்லியன் சுவிஸ் பிராங்கு நிகர நட்டத்துடன் வீழ்வடைந்தது குறிப்பிடத்தக்கது.

## BOEING 7E7 - AIR BUS A 350 விடாதபோட்டி

எயார் பஸ் (Air Bus) விமானத் தயாரிப்பு நிறுவனத்திற்கும் போயிங் (Boeing) விமானத் தயாரிப்பு நிறுவனத்திற்குமிடையே புதிய சர்ச்சை ஒன்று எழுந்திருக்கிறது. போயிங் நிறுவனம் ஏற்கனவே தயாரித்துக் கொண்டிருக்கும் `7E7' விமாணங்களைப் போன்று (இவை 2008 ஆண்டு வெளிவரும்) எயர் பஸ் நிறுவனமும் புதிய `A350' ரக விமானங்களை உருவாக்கத் திட்டமிட்டதையடுத்தே இந்த சர்ச்சை எழுந்திருக்கிறது. இவ் A350 ரக விமானங்கள் தயாரிக்கப் பட்டால் அது தனது 7E7 ரக விமானங்களின் விற்பனையை மந்தப்படுத்தி விடுமெனவே போயிங் கோபமடைந்துள்ளது. 7E7 ரக விமானங்கள் போயிங்கின் ஒரு தசாப்தகால விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் உருவாக்கப்படும் ஜெட்விமானங்களாகும். ஆனால் உற்பத்தியாகப் போகும் எயார் பஸ்சின் `A350' ரக விமானங்களோ தற்போது எயார் பஸ்சிடமுள்ள `A350' ரக விமானங்களின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமைப்பாகும்.

# பிரெஞ்சிலக்கியம் பேசுகிறேன்

சென்றவாரத் தொடர்ச்சி....

## பிரான்சுவாஸ் சகன் (Francoise Sagan)

பிரான்சுவாஸ் சகன் சொல்லுங்க, வெற்றிபெற்ற வாழ்க்கையைக் குறித்து உங்கள் அபிப்ராயமென்ன?

என்னைப்பொறுத்தவரையில் வாழ்க்கையில் ஜெயித்திருக்கிறேன் என்று சொல்லமாட்டேன் (நீண்ட மௌனம்). ஆனால் எனக்கு மகிழ்ச்சியளிப்பதைச் செய்வதில் நான் வெற்றிபெற்றிருக்கிறேன். அதாவது எழுதிக்கொண்டு வாழ்வதில். 'இழந்த நேரத்தைத் தேடி. 'தரத்திற்கு' நாவலெழுதுவதில் நான் வெற்றிபெறவில்லை என்பது உண்மைதான். ஆனால் எனது புனைபெயரை அவரிடமிருந்து (Marcel Proust) திருடுவதில் ஜெயித்திருக்கிறேன் (சிரிக்கிறார்).

இருந்தபோதிலும், ப்ரூஸ்டைப் (Proust) போல அல்லாமல், வாழும் காலத்திலேயே ஒருவித இலக்கிய புகழை அடைந்தவரல்லவா நீங்கள்?

உண்மை, அவர்காலத்தில் இல்லாத தொலைக் காட்சியின் தயவால், சமகால எழுத்தாளர்களில் நான் அதிகமாக அறியபட்டிருக்கிறேன். அவருக்கு அது வாய்க்கவில்லை. பிறகு புகழ் என்று குறிப்பிட்டீர்கள், எனக்கது முக்கியமல்ல. மற்றவர்களின் நம்பகத் தன்மைக்குறிய படைப்பாளியாக இருந்திருக்கிறேன் என்பதே எனக்கு முக்கியம். ஆக தொலைகாட்சி இலக்கிய நிகழ்ச்சிகளில் எப்போதும்போல என்மனதிலிருப்பதை வெளிப்படையாகச் சொல்ல, அதிர்ஷ்டவசமாக ஆனால் மிகவும் அரிதாகவே அதனை நிகசியில் அனுமதிக்கிறார்கள். மக்களும் அதனை நம்புகின்றார்கள். அந்தநேரத்தில் அளவிட முடியாத மகிழ்ச்சியும் கிடைக்கிறது.

**அவர்களுக்கு, ஒரு பெண் ஆணிடம் படுத்தாலே, கர்ப்பம் தரித்திருக்கவேண்டுமென்கிற அக்காலத்திய விதி எனது நாவலில் மீறப்பட்டிருப்பதைக் குறித்து அதிர்ச்சி. இதை மூடத்தனமென்று சொல்லவேண்டும். நான் பள்ளியில் படித்தகாலத்தில், ஒரு பெண் தான் கர்ப்பமென்று தெரியவந்தபோது தற்கொலை செய்துகொண்டாள். இன்னொருபெண்ணோ தான் கர்ப்பம்தரிக்கக் காரணமாயிருந்த ஓர் அய்யோக்கினை மணந்து வாழ்க்கைமுழுதும் துன்பப் படவேண்டிய கட்டாயம்.**

தொலைக்காட்சி ஊடகத்தை தவிர்க்க விரும்புகிறீர்களா?

நம்மை பலவீனப்படுத்தும் ஒன்றாக இன்றைக்கு தொலைக்காட்சி ஊடகம் மாறிவிட்டது. ஆரம்பகாலத்தில் தொலக்காட்சியில் பங்கெடுக்கின்றபோது, நிகழ்ச்சி எப்போதுமுடியும் என்பது மாதிரியான எரிச்சலுண்டு. இப்போது, அதன் தந்திரங்களை அறிவேன் அவர்களின் விளையாட்டைப் புரிந்துகொண்டு, நானும் விளையாடுகிறேன். தொலைகாட்சி ஊடகங்கள் மாத்திரம் இப்படித்தான் இருக்கவேண்டுமென எழுத்தாளர்களுக்கான வழிமுறைகளையும், பிம்பத்தையும் தீர்மானிக்கவில்லையென்றால், எனக்குத் தெரிந்து ஏராளமான எழுத்தாளர்கள், மிகச்சிறந்த எழுத்தாளர்களாகப் பரிமளித்திருப்பார்கள்.

இருபதுவயதில், திடீரென்று புகழின் உச்சிக்குச் செல்வது இடைஞ்சல் இல்லையா?



அதிர்ஷ்டவசமாக எதனையும் விளையாட்டாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற நியதியிருந்த குடும்பத்தில் நான் பிறந்து வளர்ந்தேன். அதனால் தற்பெருமைகளுக்கு வாய்ப்பில்லை, என்னைச்சுற்றி துதிபாடிகளும் வீட்டில் இல்லை.

தவிர, புகழினை இளம்வயதிலேயே அடைவது நல்லதென்று நான் நினைக்கிறேன்.. நீங்கள் கவனித்திருப்பீர்களா என்றெனக்குத் தெரியவில்லை. காலம் கடந்து புகழை அடைந்தவர்கள், உதாரணமாக மர்கெரித் துயூரா (Marguerite Duras) போன்றவர்களுக்கு, கடைசியில் தலையைப் பிய்த்துக்கொளளவேண்டிய நிலமை.. அவரை மூன்றாவது நபராகச் சித்தரித்து அவரைப் பற்றி அவரே பேசவேண்டியிருந்தது. அப்படிப்பேசி, மற்றவர்களிடம் கொண்டுசெல்ல அவரது அதிகபட்ச திறன்களும் தேவைப்பட்டன.. எனக்கெப்போதும், இயல்பான எளிமையான மனிதர்களையே பிடிக்கும் என்பதனை நீங்கள் அறிவீர்கள் அல்லவா.

ஆக, உங்கள் நாவலில் வருவதுபோன்ற போலி மனிதர்களையும், அறிவு ஜீவிகளைப்போல நாடகமாடுபவர் களையும் பிடிக்காதென்று சொல்லுங்கள்?

இல்லை. விளைவுகளைப் பொருட்படுத்தாத, விளைவுகளால் பாதிக்கபடாத மனிதர்களை நேசிக்கிறேன் என்கிற பொருளில் சொல்லவந்தேன். நீங்கள் நினப்பது போன்று போலிகளையும், உதவாக்கரைகளையும் குறித்து நான்பேசவில்லை.

அதிர்ஷ்டம் என்பதென்ன எளிதில் வாய்க்கக்கூடியதா?

எல்லாமே சரியாக அமைந்தால்தான் வாழ்க்கையில் சந்தோஷமென்று நீங்கள் நினைக்காதாவரென்றால், ஆமாம். என்னைபொறுத்தவரையில், நோயற்றவாழ்வு நமக்கு அமையுமானால் அதிர்ஷ்டமென்பேன். நான்சொல்வது, ஏதோ முட்டாள்தனமாகத் தோன்றும் ஆனால் அதுதான் உண்மை. பிறகு, வாழ்வுடன், அதாவது அவரவருக்கு அமைந்த வாழ்வுடன் ஒத்துபோவதும் எனக்கு முக்கியம்.

எதையும் செய்யாமல் புலம்புவதை (regrets)விட எதையாவது செய்துவிட்டு வருந்துவது (remords) மேலானதெனச் சொல்லப்படுகிறது. உங்கள் அபிப்ராயமென்ன?

எனக்குப் புலம்பல்களும் இல்லை. அவ்வாறே வருத்தங்களும் இல்லை(சிரிக்கிறார்). எனக்கு வாழ்க்கையில் பேரதிர்ஷ்டம் வாய்த்திருக்கவேண்டும். என்னிடம் எழுதுவதற்கான ஆசையும், அதற்கான திறனும் இருக்கின்றன. நான் கொஞ்சம் சோம்பேறியாக இருந்தாலும் எழுதுகின்றபோது, தங்கு தடையின்றி எழுதுகிறேன். ஒரு முறை இங்கே லிமூசனி (Limousin)ல் நடப்பதானக் ஒரு காதல்புதினத்தை நேபாள பயணத்தில் போது எழுதினேன். தொலைதூர நேபாளத்திலிருந்துகொண்டு நம்முடைய ஆடுகளை எழுதுவதற்கோ, பசுமைபோர்த்திய மலைகளை எழுதுவதற்கோ எனது பயணம் தடையாக இல்லை. என் மனதில் நான் நினைத்துக்கொண்டிருக்கிற கருப்பொருள் வலம்வர ஆரம்பித்துவிட்டால், தொடர்ந்து பன்னிரண்டுமணிநேரம்கூட என்னால் எழுத முடியும். எழுதாமலிருக்கும்போது, வாட்டத்துடனிருக்கிறேன், யாருமற்ற அநாதையாய் உணர்கிறேன். நல்ல மனோநிலயில், மகிழ்ச்சியாய் இருக்கும்போது மாத்திரமே என்னால் எழுதமுடிகிறது.

Bonjour tristesse அந்தக்காலத்தில் பிகவும் அதிர்ச்சி ஏற்படுத்திய படைப்பு இல்லையா?

உண்மையில், அப்புதினதிற்கு எதிராக எழுந்த அவதூறுகளைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அக்காலத்தில், பெரும்பாலானவர்களுக்கு ஓர் இளம் பெண், மணம் செய்துகொள்ளாமலும், கர்ப்பமாக்கிக்கொள்ளாமலும் ஓர் ஆணிடம் படுப்பதென்பது ஆபாசம், தப்பு. அப்புதினத்தில் பிரச்சினைக்குறிய விடயமாகக் நான் கருதுவது, அந்தப்பாத்திரம், தன்னைக்குறித்த பிரக்ஞையின்றி, சுயநலத்துடன் ஒருவரை அழைத்துவந்து கொல்லமுடியும் என்பதுதாகும். பெரும்பாலான வாசகர்கள் எனது எண்ணத்திலிருந்து மாறுபட்டிருந்தார்கள். அவர்களுக்கு, ஒரு பெண் ஆணிடம் படுத்தாலே, கர்ப்பம் தரித்திருக்கவேண்டு மென்கிற அக்காலத்திய விதி எனது நாவலில் மீறப்பட்டிருப்பதைக் குறித்து அதிர்ச்சி. இதை மூடத்தனமென்று சொல்லவேண்டும்.



நான் பள்ளியில் படித்தகாலத்தில், ஒரு பெண் தான் கர்ப்பமென்று தெரியவந்தபோது தற்கொலை செய்துகொண்டாள். இன்னொருபெண்ணோ தான் கர்ப்பம்தரிக்கக் காரணமாயிருந்த ஓர் அய்யோக்கினை மணந்து வாழ்க்கைமுழுதும் துன்பப் படவேண்டியக் கட்டாயம்.

கருக்கலைப்பு உரிமைக்காக போராடியபொழுது, பெண்ணுரிமை ஆதரவாளர்களின் "எங்கள் வயிறு எங்களுக்குச் சொந்தம்" என்கின்ற முழக்கத்திற்கு எதிராக நீங்கள் இயங்கியதன் காரணமென்ன?

ஏனென்றால் என் வயிறு எனக்குச் சொந்தமில்லையே. அவ்வயிறு நான் நேசிக்கின்ற ஆணுக்குச் சொந்தம், அந்நேசத்திற்கு நான் சொந்தம்.

உங்கள் வாழ்க்கையில் அதிகம் பாதித்த ஒரு மனிதரைச் சொல்லுங்களேன்...

நிறையபேர்கள் உண்டு. உதாரணமாக சார்த்ரைச் (Jean-Paul SARTRE) சொல்லலாம். எழுத்தாளர் என்பதற்காகவே அவரை மிகவும் நேசித்தேன். அவரது 'Les Mots'( சொற்கள்) அதி அற்புதமான படைப்பு. அவ்வாறே அவருமொரு அற்புதமான மனிதர். அபூர்வமானவரும்கூட. அவருக்கு பார்வை போயிருந்த சமயத்தில், காலை உணவிற்கோ டின்னருக்கோ அவரைத் தேடிக்கொண்டு வீட்டிற்குச் னென்றுவிடுவேன். சிமோன் தெ பொவார் (Simon de Bauvoir), எந்த நேரமும் அவர் பக்கத்திலேயே இருந்த நேரம். அவரிடமிருந்து சத்தம்போடாமல், நானும் சார்த்ரும் நழுவி விடுவோம். சில நேரங்ககளில், ஏதோ இட்ச்ஹாக்கின் சிக்கோசிலிருந்து நேராக எங்களைத் தேடிவருபவரைப்போல சிமோன் தலையை விரித்துக்கொண்டு வந்திருப்பார். என்னை பயமுறுத்துவார். சார்த்ருக்கு பார்க்க இயலாதென்றாலும், நான் விளக்கிச் சொல்ல சத்தம்போட்டு சிரிப்பார். உண்மையில் வேடிக்கையான தருணங்கள் அவை.

இவ்வுலகில் உங்கள் விருப்பம்போல இருந்தீர்களென்று சொல்லமுடியுமா?

(சிரிக்கிறார்), நிச்சயமா சொல்லலாம். ஏராளமா இருந்திருக்கேன். பிறகு என்னை மிகவும் சந்தோஷப்படுத்திய தருணங்கள் உண்டு. குறிப்பாக ஏழு அல்லது எட்டு சந்தர்ப்பங்களில் இவ்வுலகில் ஏன் பிறந்தேன், என்ன செய்தேன் என்பதை உணர்ந்திருக்கிறேன். பெரும்பாலும் மகிழ்ச்சியாக இருந்தேன் என்பதும் உண்மை. ஆனால் சற்றுமுன் குறிப்பிட்டது மாதிரியான தருணங்களில் எனக்கும், இந்த மண்ணிற்கும் பரஸ்பர புரிந்துணர்வு இருந்திருக்கிறது. இவ்வெண்ணம் அதிக நேரம் நீடித்ததில்லை, ஏறக்குறைய கால்மணிநேரம் நீடித்திருக்கலாம். இவ்வற்புதமான தருணங்கள் எனக்கு நேர்ந்திருக்கின்றன என்பதில் மாற்றமில்லை எப்போது நேர்ந்தது என்பதில் குழப்பமிருக்கிறது. (மௌனம்). இவ்வனுபவம் என்னுடைய 20 வயது, 40 வயது, மற்றும் 53 வயதில் ஏற்பட்டிருக்கிறது அப்போதெல்லாம் ஒரு மரத்தின்கீழ் நிற்பதைப்போன்ற பிரமை....

–முற்றும்–

– நாகரத்தினம் கிருஷ்ணா

AA EXPRESS
இது வடக்கு இலண்டனிலுள்ள முதல்தர வாடகை மோட்டார் நிறுவனம். நிறுவப்பட்டது 1972
Cab & உள்நாட்டு சர்வதேச கூரியர் சேவை நிபுணர்கள்.
020 8902 0123
விமான நிலைய இடமாற்று நிபுணர்கள். பயணத்துக்குச் சகல வாகனங்கள் கிடைக்கும். வருடத்தில் 365 நாட்களும் திறந்திருக்கும். வெம்பிளியில் நீண்ட காலமாக இயங்கிக்கொண்டிருக்கும் தனியார் நிறுவனம்.
உங்களிடம் 3 வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட U.K. லைசென்ஸ்சும் 7 வருடங்களுக்கும் குறைவாக மோட்டார் வண்டியும் இருக்கிறதா?
'ஆம்' என்பது உங்கள் பதிலாக இருந்தால்
நீங்கள் கிழமை ஒன்றிற்கு £5 ... கலாம்.
அனுபவம் தேவை ...
உங்களது சகல பொதிகள், பயணிகள் தேவைகளுக்கு.
புதிதாய்ச் சேர்வதற்கு:
Hotline 020 8903 8586
www aaexpress.co.uk யில் உங்களைப் பதிவுசெய்யுங்கள்.
Fax: 020 8903 1771
தொடர்பு:
ContactUs@aaexpress.co.uk
நீங்கள் www aaexpress.co.uk மூலம் கட்டணம் செலுத்தலாம்.
VISA மிகுதி அடுத்த வாரம்...
85

# பலதும் பத்தும்

## இதற்கும் இணையத்தளமா?



இணையத்தளம் அறிவியலைப் பெருக்கிக்கொள்வதற்கு எவ்வளவோ வழிகளை வழங்குகின்றது. ஆனாலும் பெரும்பாலானாவர்கள் அதனை தவறான வழிகளிலும் பயன்படுத்துகின்றனர். ஆனால் ஜப்பானியர்கள் இணையத் தளத்தை தற்கொலைக்கு பயன்படுத்தியுள்ளனர். ணையத் தளம் மூலம் நடப்பை ஏற்படுத்திக்கொண்ட ஒன்பது பேர், கூட்டாக தற்கொலை செய்வதற்கு திட்டமிட்டுள்ளனர். குறிப்பிட்ட இடத்தில் ஒன்று கூடி தற்கொலை செய்துகொள்வது என்று முடிவாகியது. ஆனால் குறிப்பிட்ட இடத்திற்கு ஏழுபேரே வந்துள்ளனர். (நான்கு ஆண்கள், மூன்று பெண்கள்). கடந்த 12ம் திகதி இவர்கள் ஏழுபேரும் கார் ஒன்றுக்குள் ஏறி அமர்ந்து அதற்குள் 'கார்பன் மோனொக்சைட்' என்ற நச்சுவாயுவை காரினுள் பரவவிட்டு மூச்சுத்திணறி தற்கெலை செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பொலித்?ன் பையொன்றினால் மூடிக்கிடந்த கார் ஒன்றை சோதனையிட்டபோதே இந்த தற்கொலை நிகழ்வு தெரியவந்துள்ளது. தற்கொலை செய்துகொண்டுள்ள அனைவருமே இளம் வயதினர். இதில் 33 வயதுடைய ஒரு குழந்தையின் தாய் ஒருவரும் அடங்கியுள்ளார். இணையத்தளக் கடிதங்களை ஆய்வு செய்த பொலிசார், ஒருவரே தற்கொலைக்கான முடிவை எடுத்து அதனை மற்றவர்களுக்கு ஈ.மெயில் மூலம் தெரிவித்திருந்ததாகவும் அவரது முடிவை ஏற்று ஒன்றாக ஏழுபேரும் தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளவர்கள் 45 பேர் எனவும் அதிகமானவர்கள் ஒன்றாகத் தற்கொலை செய்துகொண்டுள்ளது இதுவே முதற் தடவை என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஜப்பானில் கடந்த ஆண்டில் மட்டும் 32,000ற்கும் மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.


## சிறுவர்களை கவர்ந்த பி-சூப்பர்மான், நினைவு இழந்த நிலையில் மரணம்






'சுப்பர்மான்' படங்களில் தனது சாகச செயல்கள் மூலம் சிறுவர்களை கவர்ந்த கிறஸ்தோபர் ரீவ் நியுயோர்க் வைத்தியசாலையில் நினைவு இழந்த நிலையில் மரணம் அடைந்தார். 'சுப்பர்மேன்' படங்களில் நடித்து உலகப் புகழ் பெற்றவர் கிறிஸ்டோபர் ரீவ். 1952ம் ஆண்டு பிறந்த ரீவ், படிக்கும் போதே தொலைக்காட்சி தொடர்களிலும், பிறகு மேடை நாடகங்களிலும் நடித்தார். 1978ம் ஆண்டு சுப்பர்மானாக சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அது அவர் வாழ்க்கையையே மாற்றியது. ரீவுக்கு நிறைய குதிரைகள் சொந்தமாக உள்ளன. 1995ம் ஆண்டு வர்ஜினியாவில் நடந்த குதிரை ஏற்றப் போட்டியில் கலந்து கொண்ட போது குதிரையில் இருந்து இவர் கீழே விழுந்து விட்டார். அதில் கழுத்து எலும்பு முறிந்தது. இதனால் கை, கால்கள் செயல் இழந்த நிலையில் அவர் சக்கரநாற்காலியில் வாழ்க்கையைக்கழிக்க வேண்டியதாகி விட்டது.

கடந்த 9 ஆண்டுகளாக சக்கர நாற்காலியிலேயே வாழ்ந்தார். இதனால் அவர் உடலில் புண்கள் ஏற்பட்டன. அதற்கு சிகிச்சை அளிப்பதற்காக கடந்த சனிக்கிழமை நியுயோர்க் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் சுய நினைவை இழந்தார். 'கோமா'வில் இருந்த அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. நினைவு திரும்பாமலேயே அவர் மரணம் அடைந்தார். ரீவ் சக்கர நாற்காலியில் நடமாடிய காலத்தில், உடல் ஊன முற்றவர்களின் உரிமைக்காகவும், முதுகு எலும்பில் காயம் அடைந்தவர்களுக்கான சிகிச்சை பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளவும் பாடுபட்டார்.



## தாய்மையின் போராட்டம் !

உலகம் முழுவதும் பிரசவத்தின்போது ஆண்டுக்கு ஐந்து இலட்சத்து 29 ஆயிரம் பெண்கள் இறப்பை தழுவுகின்றனர். போதிய மருத்துவவசதி, கர்ப்ப காலத்தில் சத்தான உணவு உட்கொள்ளாமை போன்ற காரணங்களே இந்த இறப்புகளுக்கு காரணம் என உலக சுகாதார நிறுவனம் சொல்கின்றது.

இந்நிலையில், கர்ப்பிணிப் பெண்களின் இறப்பை கட்டுப்படுத்த உலக நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கையில் இறங்கவேண்டும் என வலியுறுத்தி பிரித்தானியாவில் கர்ப்பிணி பெண்கள் நூதன போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். பிரித்தானியத் தலைநகர் இலண்டனில் உள்ள நாடாளுமன்றம் முன்பாக தங்கள் வயிற்றை வெளியே காட்டியபடி, கையில் மெழுகுவர்த்தி ஏந்தி கர்ப்பிணிப் பெண்களை காப்பாற்றுங்கள் என்ற கோசத்துடன் போராடத்தில் ஈடுபட்டனர். கர்ப்பிணிப் பெண்கள் சிலர் வருடம் தோறும் கொல்லப்படும் கர்ப்பிணிப் பெண்களில் தொகையை ஆளுக்கு ஒரு இலக்கமாக வயிற்றில் எழுதியபடி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



NALLUR TRADERS
நல்லூர் ரேடர்ஸ்
CASH & CARRY
இலங்கை - இந்திய - மளிகைப் பொருட்கள்
193, Rue Fbg. St. Denis, 75010 Paris
Tél : 01 46 07 68 17
M° - RER : Gare du Nord / La Chapelle
Bus : 350, 302, 65, 48



# நத்தார் தினத்தை முன்னிட்டு

# Financial Consulting Gmbh & Sarah Star Thun



## இணைந்து வழங்கும்

## சுவிஸ் ஜனரஞ்சகப் பாடல் போட்டி









## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.எச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்






## Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்

Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.




**சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்**

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....




இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich



குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.


அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch Tel: 079.757 74 75 | 078.605 99 41
031.911 03 38




- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜனரஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி 4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.




இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை: பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி 4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.




தொடர்புகளுக்கு: K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75


















## FORWARD CONSULTANTS

*Consulting For People*

**WE PROVIDE !!!!**

ANY PURPOSE LOAN / BUSINESS LOAN

*** RESIDENTIAL MORTGAGES ***

CALL US ON 020 8900 9052

1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK

info@forwardconsultants. co.uk



Pub.WWW.FORWARDCONSULTANTS.CO.UK

## MEUBLES EUROPEENS

உங்கள் வீட்டுத் தளபாடத் தேவைக்கு ஜெர்மன், பெல்ஜியம் தயாரிப்பு புதிய பழைய வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில் சோகேஸ், லெதர் சோபாக்கள், 3-2-1 சாப்பாட்டு மேசை, கட்டில், அலுமாரி, குசினி செட் மற்றும் அனைத்து வீட்டுத் தளபாடங்களையும், வீட்டுப்பாவனைப் பொருட்களையும் உங்கள் விருப்பம் போல் தெரிவுசெய்துகொள்ள நாடுங்கள்.

**MEUBLES EUROPEENS**

4, Rue Des Villas - 94800 Villejuif

M°: Villejuif Louis Aragon (N°:7)

Tel: 01 46 77 19 40 / 06 64 42 42 62

திறந்திருக்கும் நேரம்- திங்கள் முதல் சனி வரை 14h -20h- ஞாயிறு -10h-18h

## VAHIZAN DISC WORLD

பழைய, புதிய திரைப்படப்பிரதிகள், விடியோ கேசட்டுகளிலும் விடியோ சிடிக்களிலும் வாடகைக்கு அல்லது குறைந்த விலையில் சில்லறையாகவோ மொத்தமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

52 B. Ealing road. Wembley

Tel : 020 8902 8828

Fax : 020 8902 8829

E-Mail : vahizan@aol.com



Pub.

வாகீசன் டிஸ்க் வேல்ட்

## அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**விமல் விநியோக நிலையம்**

**VIMAL DISTRIBUTION**

1 Bis , Rue Chemain Vert

93800 Epiny Sur Seine

Port 0616812200 Ou 0666795689

Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளலாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:

**Photo Bala**

87 Rue de Clignancourt, 75018 Paris

Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

## சிறிய விளம்பரங்கள் இப்பகுதியில் எதிர்பார்க்கப் படுகின்றன.

## Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39

## RESTAURANT ROYAL TANDOURI

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

## பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி! உங்கள் பற்களில் பிரச்சினையா?



புதிய பற்கள் கட்டவேண்டுமா?

ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!

தொடர்புகளுக்கு:

01 48 84 92 67

06 25 89 75 52

என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

## EUROCONSULT SARL TRADUCTIONS

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

24, Rue Perdonnet , 75010 Paris

Tel: 0153267010 - Fax: 0153267502

## RESTAURANT ROYAL TANDOURI

100 பேருக்குட்பட்ட கொண்டாட்டங்களுக்கு குளிரூட்டப்பட்ட மண்டபம் ஒழுங்கு செய்து தரப்படும்

*Métro: Bellville*

தொடர்புகளுக்கு:

01 43 14 67 49

06 64 00 66 62

06 10 59 37 44

## KALAIVANEE VIDEO

சிகை அலங்கரிப்பில் அனுபவம் பெற்ற பணியாளர்கள் தேவை. கலைவாணி VIDEO SHOP இல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு (Saloon) தொழிலாளர்கள் தேவை.

நேரடி அல்லது தொலைபேசி தொடர்புகளுக்கு :

KALAIVANEE VIDEO

307 Mitcham Road

London

SW17 9JQ

T.P- 0208 672 2122(Shop),

Mobile- 0790 3156024,

0782 1111164

**தேவை!**



T.P :- 0208 672 2122(shop) - Mobile :- 0790 3156021 / 0782 1111164

## Southharrow Food & Wines



**SOUTH HARROW FOOD & WINES**

234 - 236 Northolt Rd, south harrow HA2 8DU

Tél- 020 84236321

"South harrow" இல் ஒரு பிரமாண்டமான தமிழர் அங்காடி கேட்பது இல்லையென்பதில்லை அனைத்தும் தரமானதும்மலிவானதும்

எமது ஒரே ஒரு நிறுவனம் South harrow வில் மாத்திரம் என்பதை அறியத்தருகின்றோம்.

# எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றப்படுகின்றதா?

ஈராக் இன்று கொழுந்துவிட்டு எரிகின்றது. நாட்டின் அநேகமான பகுதிகள் அமைதியாக இல்லை. குண்டுச் சத்தமும், பீரங்கி வேட்டுக்களும், துப்பாக்கி வேட்டுக்களுமாக நாடே அல்லோல கல்லோலத்திற்கு உள்ளாகியுள்ளது. இஸ்லாமியர்களின் புனித ரமதான் ஆரம்பமாகி இரண்டு நாட்களே சென்ற நிலையில் அமெரிக்க மற்றும் அதனது கூட்டு படைகளுக்கு எதிரான எதிர் நடவடிக்கைகள் மிக உச்ச நிலையில் மேற்கொள்ளப் படுகின்றன. இதற்கிடையே இராணுவத்தின் மேலிருந்த ஆத்திரம் வேறு திசைக்குத் திரும்பி சிறுபான்மை கிறிஸ்தவர்கள் இலக்கு வைக்கப் படுகின்றனர். சனியன்று தலைநகர் பாக்தாத்தையும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் அமைந்திருந்த பெருமை மிக்க கிறிஸ்தவ தேவாலயங்கள் குண்டுத்தாக் குதல்களுக்கு உள்ளாகியுள்ளன. தலைநகரின் ஐந்து தேவாலயங்கள் எரிந்து சாம்பலாகிப்போயுள்ளன. இதுவரைகாலமும் சதாமின் ஆட்சியில் பாதுகாப்புடன் வாழ்ந்துவந்த கிறிஸ்தவ சமூகம் இப்போது பாதுகாப்பற்றுப் போயுள்ளது. ஈராக்கில் கிறிஸ்தவ சமூகம் அரசியல் ரீதியாகவும், தொழில்துறை ரீதியாகவும் செல்வாக்குப் பெற்று உள்ளனர். ஈராக்கின் முன்னாள் உதவி ஜனாதிபதியாக பதவி வகித்த தரிக் அசிஸ் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்தவர். இதேபோன்று அமைச்சரவையின் வேறு பல நிலைகளிலும் கிறிஸ்தவர்கள் செயல்பட்டு வந்தனர். இன்று அமெரிக்காவின் பாதுகாப்பிற்குள் கிறிஸ்தவர்களது நிலை அங்கு கவலைக்கிடமாகி உள்ளது.

யுத்தம் முடிவடைந்து விட்டது என அமெரிக்க அதிபர் கூறி ஒருவருடத்திற்கு மேலாகிறது. ஆனால் என்றும் உண்மையான யுத்தம் முடிந்தபாடில்லை. யுத்தம் முடிவடைய வேண்டுமாயின் அங்குள்ள மக்கள் தம் விரும்பிய வாழ்க்கை முறையை அடையவேண்டும்., அதற்கான யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மக்களுக்கான விடுதலையை வழங்கினார்களா என்றால், இல்லை. அமெரிக்காவிற்கும் அதனது சில நேசநாடுகளுக்கும் ஈராக்கிலிருந்து சதாம் ஆட்சி அகற்றப்படுதலும் தங்களது பொம்மை ஆட்சியாளர்கள் நிலைப்படுத்தப்படவேண்டும் என்பதுவுமே தேவையாக இருந்தது. அதற்காக பொய்களைக் கொண்ட யுத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அழிவுக்கான ஆயுதங்கள் சதாமிடம் உள்ளது என்பதை பிரதானமாக இவர்கள் சுட்டிக்காட்டினார்கள். யுத்தம் ஆரம்பிப்பதற்கு பல வருடங்கள் முன்பிருந்து யுத்தம் முடிந்து இன்றுவரை காலத்தில் சதாமின் அழிவுக்கான ஆயுதங்கள் ஈராக்கில் கண்டுபிடிக்கப்படவேயில்லை. இப்போது பொய் கூறியவர்கள் தங்களது வாக்குறுதிகளை பாதுகாப்பதற்காக சதாம்ஹுசேன் ஆட்சியில் மனித உரிமைகள் மீறப்பட்டதாயும், படுகொலைகள் நடந்ததாயும் சிறுபான்மையினர் உரிமைகளற்று வாழ்ந்ததாயும் நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் அடக்கப்பட்டதாயும் கூறி அவர்களுக்கான விடிவை தாம் ஏற்படுத்தப்போகின்றோம் என்றனர். ஆனால் இதுவரை என்ன நடந்தது?, இப்போது என்ன நடக்கின்றது? சதாம் ஆட்சியில் சிறுபான்மை சுன்னித் இன மக்களும் பெரும்பான்மை சியாத் இன மக்களும் வடக்கே குர்திஸ் இன மக்களும் ஏதோ ஒருவகை ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்தனர். அரசிற்கு எதிராக அவர்களது மறைமுகமான செயற்பாடுகள் இருந்தனவேயன்றி சகோதர மக்களுடன் எவ்வித வேற்றுமைகளும் காண்பிக்கப் படவில்லை. ஒன்றிரண்டு சம்பவங்கள் நாட்டில் நடைபெற்றபோதிலும் பாரியளவில் சமூகப் பிரச்சினை அங்கு ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். இப்பிரச்சினையை பூதாகாரமாக்கி விமானப்பறப்பு தடைச் சட்டத்தை அமுல்படுத்திய மேற்கு நாடுகள் ஈராக்கின் விமானங்கள் பறப்பதற்கு அந்நாட்டின் வான்பரப்பிலேயே தடைகளை மேற்கொண்டன. இன்று தடைகளை மேற்கொண்ட நாடுகளின் விமானங்கள் பாதுகாக்கப்படவேண்டிய மக்கள் வாழ்விடங்கள்மேல் குண்டுகளை வீசி பேரழிவுகளை ஏற்படுத்துகின்றன. இப்படியாயின் அந்நாட்டின் மக்கள் மீட்க வந்தவர்கள் எனக் கூறிவந் தவர்களை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்.

ஈராக்கில் அமைதியை ஏற்படுத்தி அங்கு சகஜமான வாழ்வுநிலையை ஏற்படுத்த வேண்டும் என அமெரிக்கா விரும்பினால் அது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இதுவல்ல. பெரும்பான்மை சிறுபான்மை மக்களிடையே தனது நல்லெண்ணத்தை அது நிரூபிக்க வேண்டும். ஆனால் அப்படி நடப்பதாகத் தெரியவில்லை. மாறாக அண்டை நாடுகள் மீதும் தாக்குதல்களை ஆரம்பித்து தமது ஈராக்கிய ஆழுமையை நிலைநாட்டிக் கொள்ள அது விரும்புகின்றது போலவே தோன்றுகின்றது. சிரியாவிலிருந்தும், ஈரானில் இருந்தும் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் தீவிரவாதிகளுக்கு அனுப்பப் படுகின்றன என்ற கோஷம் இப்போது எழுப்பப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது அமெரிக்க படைகளுக்கு எதிரான தாக்குதல்களை நடாத்தும் அமைப்புக்களின் தலைவர்கள் சிரிய மற்றும் ஈரானிய படையினருடன் இணைந்து செயற்படுகின்றன என்றும் தகவல்கள் வெளியிடப் பட்டும் வருகின்றன. இது ஒருபுறமிருக்க ஈராக்கிற்குள் தற்போது ஏற்பட்டுள்ள நிலை எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால் தோன்றியுள்ளது என்று கருதும் அமெரிக்கா தனது விசேட படையணிகளை இஸ்ரேலுக்கு பயிற்சிகளுக்காக அனுப்பியுள்ளது. எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை தமது படைகள் வெகு திறமையாக முறியடித்துள்ளதாகக் கூறியுள்ள இஸ்ரேலிய பிரதமர் அமெரிக்காவின் படைகளுக்கும் தாம் அதுபற்றி திறமையான பயிற்சிகளைக் கொடுக்கமுடியும் எனக் கூறியுள்ளார். இப்படி இஸ்ரேலிடம் பயிற்சி பெற்று புதிய அணிகள் ஈராக்கின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படவுள்ளன. ஆனால் இஸ்ரேலின் நிலையும் ஈராக்கின் நிலையும் வேறு விதமானவை என்பதும் அவர்கள் அறியாததல்ல.



இன்று அமெரிக்காவின் ஒவ்வொரு செயற்பாடுகளுமே அந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையையும் கோபத்திற்கு உள்ளாக்கும் ஒன்றாகவே இருந்து வருகின்றது. ஒருபுறம் இனத் தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அனுப்பிவிட்டு மறுபுறம் அப்பிராந்தியத்தின் மீது தாக்குதல்களை மேற்கொள்வது, அண்மையில் இப்படியான சம்பவம் ஒன்று பலூஜாவில் இடம் பெற்றுள்ளது. ஈராக்கின் சிறுபான்மை சுன்னித் இன மக்களின் பலப்பிராந்தியமான இப்பகுதியை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை அமெரிக்க இராணுவம் முன்னர் ஒருபுறம் மேற்கொண்டது. ஆனால் அது சாத்தியப்படாத நிலையில் தங்களால் மீள இணைக்கப்பட்ட ஈராக்கின் படைப்பிரிவின் தளபதியொருவரிடம் அமெரிக்கா ஒப்படைத்தது. அவரும் அமெரிக்கர்கள் பலூஜாவிலிருந்து வெளியேறிக்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் அவர்களுடன் சுமூகமான உறவை ஏற்படுத்த வேண்டுமென்றும் சமூக நல நடவடிக்கைகளை அங்கு மேற்கொள்வதன் மூலம் அது சாத்தியமாகக்கூடும் என்றும் கூறினார். இது நடந்து இரண்டு மாதங்களின் பின் மீண்டும் அமெரிக்க இராணுவம் பலூஜாவின் மேல் கடுமையான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. ஜோர்தானை தளமாகக்கொண்டு இயங்கும் ஜிகாத் அமைப்பின் உறுப்பினர்கள் மேற்கண்ட பகுதிகளில் நிலைகொண்டிருப் பதாகக் கூறிய அமெரிக்கா அதன் தலைவர் அபூ முசாப் அல் சர்காவி தம்மிடம் சரணடையவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் இதனை ஏற்றுக்கொள்ளாத ஜிஜாத் அமைப்பினர் தங்களது தாக்குதல்களை விரிவுபடுத்தியுள்ளனர். அவ் அமைப்பு இறுதியாக விடுத்துள்ள அறிக்கையில் ஈராக்கின் இறக்குமதிப் பொருட்கள் மற்றும் எரிபொருளை ஏற்றிச் செல்லும் ஈராக்கிற்குச் சொந்தமற்ற வாகனங்கள் யாவும் தாக்கி அழிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

**அத்துடன் தற்போது அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களை நடாத்தும் அமைப்புக்களின் தலைவர்கள் சிரிய மற்றும் ஈரானிய படையினருடன் இணைந்து செயற்படுகின்றன என்றும் தகவல்கள் வெளியிடப்பட்டும் வருகின்றன.**

ஆரம்பத்தில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல் களை மேற்கொள்ளும் அமைப்பு களுக்கிடையே உறவுகளோ அல்லது தொடர்புகளோ இருக்கவில்லையென்று கூறும் ஆய்வாளர்கள் இப்போது இவ்வமைப்புக்கள் எல்லாம் ஏதோ ஒருவித தொடர்புகளை தம்மிடையே கொண்டுள்ளன என்று கூறுகின்றனர். அண்மையில் `ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிரான ஒன்றிணைந்த தாக்குதல் அமைப்புகள? எனும் தலையங்கத்துடன் சில ஊடகங்களுக்கு தகவல்களும் அனுப்பப்பட்டுள்ளன. இவைகளை ஆதாரமாகக்கொண்டு பார்க்கு மிடத்து ஒருவகை கூட்டுறவு இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது தெரிகின்றது. இது அங்கு நிலைகொண்டுள்ள அமெரிக்க மற்றும் அதனது கூட்டுப்படை களுக்கு ஆபத்தான ஒன்றே என்றும் இராணுவ ஆய்வாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பாக்தாத் நகரப் பகுதியில் அமெரிக்க இராணுவம் விடுத்துள்ள எச்சரிக்கை அறிவித்தல் ஒன்றில் சியாத் ஆயுதபாணிகள் எல்லோரும் தமது ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்றும் சுன்னித் இன ஆயுதபாணிகள் தமது ஆயுதங்களுக்கு மாற்றாக வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இதுபற்றி கருத்துத் தெரிவித்த பாக்தாத்வாசி ஒருவர் கடைசி அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் இருக்கும்வரை, அவர்களுக்கு துணைபோகும் ஈராக்கியர் இருக்கும்வரை ஆயுதங்கள் ஒருபோதும் ஒப்படைக்கப்பட மாட்டாது என்றார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதாகக் கூறும் அமெரிக்கா அங்கு சகஜநிலையை ஏற்படுத்த விலைகொடுத்து சிலரை வாங்கியாவது பிரச்சினையை முடிக்கலாம் எனக் கருதுகிறது. ஆனால் ஏற்கனவே விலைகொடுத்து வாங்கப்பட்டு பவர்களில் பலர் மீண்டும் எதிராக திரும்பியுள்ளதும் அவர்களுக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளது. இப்படி உண்மையான பிரச்சினையை உள்ள இடத்தில் தேடாமல் மேலும் மேலும் சிக்கல்களை ஈராக்கில் தோற்றுவிப்பது எரியும் தீயில் எண்ணெய்யை ஊற்றுவது போல்தானே.

**பாக்தாத் நகரப் பகுதியில் அமெரிக்க இராணுவம் விடுத்துள்ள எச்சரிக்கை அறிவித்தல் ஒன்றில் சியாத் ஆயுதபாணிகள் எல்லோரும் தமது ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்றும் சுன்னித் இன ஆயுதபாணிகள் தமது ஆயுதங்களுக்கு மாற்றாக வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.**

**- உதயன் -**

# ஆப்கானியர் கொலையில் அமெரிக்கப் படையினருக்குத் தண்டனை

ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவும் அதனது ஆதரவு நாடுகளும் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது ஏராளமான அடிப்படைவாத ஆப்கான் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் அமெரிக்க தீவான குவாந்தனாமோவிற்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு மேலதிக விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இதே வேளை மேலும் பலநூறு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு ஆப்கானிஸ்தானிலேயே அமெரிக்காவின் பல படைமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இப்படியான ஒருதொகை ஆப்கான் இளைஞர்கள் மீது அளவுக்கு அதிகமான பலத்தைப் பிரயோகித்ததாயும் போர்க் கைதிகளுக்கான விசாரணையையும் மீறி மிக அதிகமான சித்திரவதைகளைப் புரிந்தார்கள் என்றும் அரச சார்பற்ற பல மனிதாபிமான உதவி நிறுவனங்கள் குற்றஞ்சுமத்தி வருகின்றன.

இவற்றிற்குப் பதிலளிக்கும் வகையில் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள படைகளை கண்காணிப்பதற்காக இரகசிய உளவுத்துறை உறுப்பினர்களை அமெரிக்கா ஆப்கானிஸ்தானிற்கு அனுப்பியது. இவர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இரண்டு ஆப்கான் இளைஞர்களை விசாரணையின்போது கொலை செய்த 28 படையினருக்கு எதிராக குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இத் தகவலை இராணுவ அதிகாரிகள் வியாழனன்று தெரிவித்தனர். ஆப்கானில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரில் இரண்டு அணிகள் பாகிராமில் அமைந்துள்ள விமானப்படைத் தளத்தில் நிலைகொண்டுள்ளன. இது தலைநகர் காபூலில் இருந்து 60 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இங்குவைத்தே ஆப்கான் இளைஞர்கள் விசாரணையின்போது கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக இராணுவத்தின் அதியுயர்மட்ட இரண்டு அதிகாரிகள் மற்றும் வேறு சில அதிகாரிகளும், படையினருமாக 28 பேர்கள் குற்றவாழிகளாக இனங்காணப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஆட்சியாளர்களான தலிபான்களின் தலைவரான முல்லா ஹபி புல்லாவின் சகோதரரான இவர் 30 வயது நிரம்பியவரென இராணுவ பதிவுகள் தெரிவிக்கின்றன. இராணுவத்தின் அத்துமீறல் தாக்குதல்களால் இவர் உயிர் பிரிந்துள்ளது என்ற தகவலும் அதில் உள்ளது. இதேவேளை இவரது நண்பரான மற்றுமொருவரும் இதே காலப்பகுதியில் இருதயக் கோளாறு காரணமாக இறந்து போயுள்ளார். இவர்களது மரணம் பற்றிய விசாரணைகளின்போதே மேற்படி இராணுவத்தினர் கருதப்பட்டுள்ளனர். இவ் 28 இராணுவத்தினர்களுக்கும் எதிரான விசாரணைகள் அநேகமாக அமெரிக்காவிலுள்ள இவர்களது தலைமை படைமுகாமிலேயே இடம்பெறலாம் என்றும் அநேகமாக இவர்கள் இராணுவச் சேவையில் இருந்து விடுவிக்கப்படலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன.



## அதிபாதுகாப்பு வலையத்திற்குள் தாக்குதல்! அமெரிக்க தரப்பில் உயிரிழப்பு

ஈராக்கிய தலைநகர் பாக்தாத்தில் மிகப் பாதுகாப்பான பகுதியெனக் கருதப்படும் பச்சைப் பிராந்தியம் நேற்று கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியது. கடந்த மேமாதம் ஈராக்கிய யுத்தம் முடிவடைந்ததெனக் கூறப்பட்டதன் பின் அமெரிக்கப் படைகளால் இப்பகுதி கடுமையான பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. நான்கு கிலோமீற்றர் சுற்றளவு கொண்ட பகுதிக்கு கொங்கிறீற் சுவர்கள் மின்சாரம் பாய்ச்சிய கம்பிகள் மண்மூடைகள் போன்றவற்றைக்கொண்டு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிக்குள் ஈராக்கிய அரச அதிகாரிகள் வெளிநாட்டு இராஜதந்திரிகள், இராணுவ உயரதிகாரிகள் மற்றும் நாட்டின் முக்கியமான புள்ளிகள் என பத்தாயிரம்பேர்கள்வரை வாழ்கின்றனர். பாக்தாத்தின் ஏனைய பகுதிகளைவிட பாதுகாப்பிற்குள்ளாகியுள்ள இப்பகுதி பசுமைநிறைந்ததாகக் காணப்படுவதாலும் நவீன கட்டிடங்கள் காணப்படுவதாலும் ரிக்கிறீஸ் ஆற்றின் கரைகளுக்கூடாக இப்பகுதி அமைந்துள்ளதாலும் இதனை பச்சைப் பிராந்தியம் என அழைக்கின்றனர். இங்கேயே முன்னாள் அதிபர் சதாம்ஹுசேனின் மாபெரும் குடியரசு மாளிகையும் பாரிய மருத்துவமனையும் அமைந்துள்ளது. இங்கு நடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்க அதிகாரிகள் சிலர் கொல்லப்பட்டுள்ளதுடன் சில அரச அதிகாரிகளும் வேறு நிறுவனத்தில் கடமையாற்றும் அதிகாரிகளும் காயமடைந்துள்ளனர். எப்படி இப்பாதுகாப்பு வலையத்திற்குள் குண்டுதாரிகள் நுழைந்தனர் என்பது மிகுந்த சந்தேகத்தைக் கிளப்பிவிட்டுள்ளது. இத்தாக்குதலுக்கு பலூஜா நகரப்பகுதியை மையமாகக்கொண்டு இயங்கும் ஜிகாட் அமைப்பினர் உரிமைகோரியுள்ளனர். இதனையடுத்து பலோஜா நகரப்பகுதிமீது கடுமையான தாக்குதல்களை ஈராக்கிய விமானங்கள் மேற்கொண்டுள்ளன. ஈராக்கிய அரசும் அமெரிக்க அதிகாரிகளும் பலூஜாவின் மக்களை ஜிகாட் அமைப்புக்கு எதிராக திரளுமாறு விடுத்த கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்ற நிலையில் அமெரிக்காவின் விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றுள்ளது. இக் குண்டுவீச்சில் குறைந்தது ஐந்து பொதுமக்கள் இறந்து 16 பேர் காயமடைந்துள்ளனர் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஆணைகளை மீறியதற்காக அமெரிக்கப் படையணி முழுமையாகக் கைதுசெய்யப்பட்டது

ஈராக்கின் தென்கிழக்குப் பகுதியில் நிலைகொண்டிருந்த அமெரிக்க இராணுவ அணியொன்று தமக்கு இடப்பட்ட கட்டளையை ஏற்க மறுத்ததுடன் தமது செயற்பாடுகளையும் நிறுத்திக்கொண்டதற்காக மற்றுமொரு விசேட அணியினால் கைது செய்யப்பட்டுள்ளது. கடந்த புதனன்று ஈராக்கின் வடபகுதியில் அமைந்துள்ள தாஜ் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ளுமாறு 17 உறுப்பினர்கள் கொண்ட இராணுவ அணியொன்றுக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. ஆனால் தமது வாகனங்கள் பாதுகாப்பற்றவை என்று கூறி தமக்கு இடப்பட்ட கட்டளையை மீறியுள்ளனர். இவ் இராணுவ அணியினர் கைதுசெய்யப்பட்ட தகவல் மற்றுமொரு இராணுவத்தினரால் அமெரிக்காவிலுள்ள அவர்களது மனைவிமாருக்கு இலத்திரணியல் கடிதமூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இக் கடிதத்தை அவர் தனது சக இராணுவ மனைவிமாருக்கு அனுப்பிவைத்துள்ளதுடன் மனித உரிமை அமைப்பொன்றுக்கும் அனுப்பியுள்ளார். அக் கடித்தில் தமக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற இயலாது இருப்பதற்குக் காரணம் பாதுகாப்பின்னை என்பதுவும் நாம் மிகமோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதுவுமே உண்மை. அதிபர் புஷ் எமது இராணுவம் நவீன ஆயுதமயப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறுகிறார். ஆனால் இங்குள்ள நிலை உண்மையானது. நாட்டிற்கு உண்மையான நிலையை மறைத்து பொய்க் கேள்விகளை அவர் எழுப்புகிறார் என்று கூறுவதே சரியானதாகும் எனக் கூறுகிறார் மனித அமைப்பொன்றின் பேச்சாளர்.



இச் சம்பவம்பற்றி கைதுசெய்யப்பட்டுள்ள 21 வயது நிரம்பியுள்ள படைவீரர் ஒருவர் தனது தாய்க்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் விபரித்துள்ளார். எமது விருப்பிற்கு எதிராக எம்மைத் தடுத்துவைத்துள்ளார்கள். நாம் இப்போது கைதிகள் என்று கூறியுள்ள அவர் புதனன்று தனது படையணி மற்றொரு பகுதிக்கு எரிபொருள் விநியோகிக்கச் சென்றது ஆனால் எரிபொருளில் தண்ணீர் கலந்துள்ளதாகக் கூறி நாம் திருப்பி அனுப்பப்பட்டோம். தளத்திற்கு வந்த நாம் மீண்டும் மற்றுமொரு தளத்திற்கு எரிபொருள் விநியோகிக்க பணிக்கப்பட்டோம். ஆனால் எமக்கான பாதுகாப்புக்கள் தரப்படவில்லை. பொதுவாக விநியோகத்திற்கு நாம் செல்லும்போது உலங்குவானூர்திகள் மற்றும் கனரக வாகனங்கள் பாதுகாப்புத் தருவதுண்டு. ஆனால் புதன்கிழமையன்று எதுவுமே வரவில்லை. கடந்த கால அனுபவங்களைக்கொண்டு நாம் அங்கு செல்வதில் பாதுகாப்பில்லை என்பதையும் உணர்ந்தோம். பாதுகாப்பற்ற நிலையில் நாம் பயணம் செய்வது 99 சதவிகிதம் ஆபத்தானதே. இதனை அறிந்ததாலேயே நாம் விநியோகத்தை மேற்கொள்ள மறுத்தோம் என அவர் கூறியுள்ளார். அமெரிக்காவில் படைவீரரது பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் ஏற்கனவே அரசின் செயற்பாடுகளில் நம்பிக்கை இழந்துபோயுள்ள நிலையில் இப்படியான தகவல்கள் வெளியாவது நல்லதல்ல என அரசியல் அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

லாக்கூர்நேவ்'இல் தரத்திற்கும் மலிவுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

கிருஸ்ணாஸ் பல்பொருள் அங்காடி

இலங்கை,இந்தியா,பாகிஸ்தான்,ஆபிரிக்க இறக்குமதிப் பொருட்கள் மொத்தமாகவும்,சில்லறையாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
தினசரி,வாராந்த,மாதாந்த சஞ்சிகைகள்,திரைப்பட,தொடர்நாடக ஒளிநாடாக்கள் என்பனவற்றையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

தரிப்பிடம் -M°-7, Tram 1, Bus 152-609-607-773.
(சுப்பர் மார்சே பின்புறம், சென்றல் கொமர்சியல் கட்டிட உட்புறம்-G-4 கலரி)

# மனித உரிமை அதிகாரி தாக்குதல் சம்பவம்

## பொலிஸ் அதிகாரி ஒருவரும் இரு பொலிசாரும் அடையாளம் காணப்பட்டனர்.

(14.10.2004)

யாழ்ப்பாணத்தில், சிறீலங்காப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரின் நிலை குறித்து அறியச் சென்ற, தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் ருவன் சந்திரசேகர பொலிஸாரால் தாக்கப்பட்டு, திருப்பி அனுப்பப் பட்டிருந்தார்.

இது தொடர்பாக நடைபெற்று வரும் நீதிமன்ற விசாரணையின் போது நடைபெற்ற அடையாள அணிவகுப்பில், ஒரு பொலிஸ் அதிகாரியும், இரு பொலிஸாரும் குற்றவாளிகளாக அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

கடந்த 27ம் திகதி, சிறீலங்காப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட, சந்தேக நபர் ஒருவரின் நிலை குறித்த தகவல்களைப் பெறுவதற் காக, பொலிஸ்நிலையம் சென்ற ருவன் சந்திரசேகர மற்றும் சர்வ தேச மனித உரிமை அமைப்பொன் றின் பிரதிநிதியான எம்.வி.இசட் செரோஸ் என்பரும் பொலிஸாரால் தடுக்கப்பட்டு, தாக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டனர். இது குறித்து, ருவன் சந்திரசேகரவினால் தொடுக் கப்பட்ட வழக்கு, யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வரு கின்றது.

இது தொடர்பாக குற்றப் புலனாய் வுத்துறையினர் மேற்கொண்ட விசேட விசாரணையின் அடிப்படையில் நேற்றைய தினம், யாழ் நீதிமன் றத்தில் மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்கினராஜா முன்னிலையில் நடை பெற்ற அடையாள அணிவகுப்பில், இரு பொலிசாரை, ருவன் சந்திரசேகர அடையாளம் காட்டினார்.

சம்பவத்தின்போது பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த 46 பொலிஸாரில் 44 பேரே, நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப் பின்போது, முன்நிறுத்தப்பட்டனர். இதன்போது, எம்.புஸ்பலால், எம். தனபால ஆகிய இரு பொலிஸார் அடையாளம் காட்டப்பட்டனர்.

குறிப்பிட்ட இரண்டு பொலிஸா ரையும் பதினையாயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி, பொலிஸ் அதிகாரி தரத் திலுள்ள ஒருவர் பிணையாளியாக இருக்க வேண்டும் என்று நிபந் தனை விதித்தார்.

நீதிமன்ற அனுமதியின்றி யாழ்ப் பாண பொலிஸ் நிலையத்திலி ருந்து வெளியே செல்லக்கூடாது என்றும் தனது உத்தரவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய அடையாள அணி வகுப்பில், இச்சம்பவத்துடன் தொடர் புபட்ட மற்றுமொரு பொலிஸ் அதிகாரி கலந்துகொள்ளாததை யடுத்து, மீண்டும் இன்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் குற்றவாளியாக அடையாளம் காட்டப்பட்டுள்ளார். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்கினராஜா முன்னிலையில் இரண்டாம் நாளாக நடைபெற்ற இன்றைய அடையாள அணிவகுப்பில், எம்.அசேல என்ற பொலிஸ் அதிகாரியை, தம்மேல் தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் என, ருவன் சந்திரசேகர அடையாளம் காட்டினார்.

இதனையடுத்து, குறிப்பிட்ட சார்ஜனையும் பதினையாயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனு மதித்த நீதிபதி, இன்ஸ்பெக்டர் தரத்திற்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் பிணையாளியாக இருக்கவேண்டும் என்றும், நீதிமன்ற அனுமதியின்றி யாழ் மாவட்டத்தை விட்டு வெளியேறக்கூடாது என்றும், மீண்டும் எதிர்வரும் ஒக்டோபர் 18ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் தனது உத்த ரவில் குறிப்பிட்டுள்ளார்.

# ஜே.வி.பி.யினருக்கு எதிராக, வடக்கு-கிழக்கு சிங்கள முன்னணி ஆர்ப்பாட்டம்

விடுதலைப் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் ஊர்காவல் படையினரை விடுவிக்கும் போராட்டத்தில், அரசியல் இலாபம் தேடும் நடவடிக்கையில் ஜே.வி.பி.- சிங்கள முன்னணி குற்றச்சாட்டு

(17.10.04)

விடுதலைப் புலிகளால், தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்ட இரு சிங்கள ஊர்காவல் படையின ரையும் விடுவிக்குமாறு கோரி, சிங்கள அமைப்புக்களால் திருமலை யில் உண்ணாவிரதப்போராட்டங் கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் என்பன நடாத்தப்பட்டிருந்தன.

கடந்த 13ம் திகதியும், மேற்படி வடக்கு கிழக்கு சிங்கள முன்ன ணியால், திருகோணமலையில் சிங்களப்பகுதிகளில் பணிப்புறக் கணிப்புப் போராட்டம் நடத்தப்பட்டி ருந்தது.

இப்பணிப் புறக்கணிப்புப் போராட் டத்தை புறக்கணித்து இயங்கிய திருகோணமலையிலுள்ள டோக்கியோ சீமெந்து ஆலை மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப் பட்டபோதும், சேதம் ஏதும் ஏற்பட வில்லை.

இரு சிங்கள ஊர்காவல் படை யினர் விடயத்தில், அளவுக்கதி கமான பிரச்சாரங்களை மேற் கொண்டு, இனவன்செயல்களைத் தூண்டும் வகையில் போராட் டங்களை நடத்திய வடக்க கிழக்கு சிங்கள முன்னணி, சிங்கள மக்க ளைக் காக்கும் நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவில்லை எனவும் குற்றச்சாட்டை முன்வைத்தது.

வடக்கு கிழக்கு சிங்கள மக்களை அரசாங்கம் பாதுகாக்கத் தவறினால் தமக்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் வடக்கு கிழக்கு சிங்கள முன்னணி கோரிக்கை விடுத்திருந்தது.மேற்படி முன்னணி யின் தலைவர், அனுரா பண்டார இது விடயத்தில், அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. மௌனம் சாதிப்பதாகவும் குற்றஞ்சாட்டினார்.

இதற்கிடையில்,சிங்கள ஊர்காவல் படையினரை விடுவிக்கக்கோரி, ஜே.வி.பி.யும் தன் பங்கிற்கு திரு கோணமலையில் ஆர்ப்பாட்டம் நடத் தியுள்ளது. ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர தலைமையில், கடந்த 14ம் திகதி இப்பேரணி நடாத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மக்கள் அமைப்பு என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் பொதுச்சந்தை மைதானத்திலிருந்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்ட போதும் அலு வலகத்தை அண்மிக்க முடியாதவாறு பொலிஸாரால் வீதித்தடை போடப் பட்டது. ஜே.வி.பி.யினர் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணி யில் நூறுக்கும் மேற்பட்டோர் கலந் துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியின் போது, விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட இரு ஊர்காவல் படையினரும் விடுவிக்கப்படவேண் டும் எனக் கோசம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், போர்நிறுத் தக் கண்காணிப்புக்குழுவினர் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் எனவும் கோசம் எழுப்பினர்.


இதேவேளை, ஊர்காவல்படை யினரை விடுவிக்கக்கோரி ஜே.வி.பி. யினர் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக, வடக்கு கிழக்கு சிங்கள முன்னணி, அதே தினம், மணிக் கூட்டுக் கோபுரம் முன்பாக ஆர்ப் பாட்டம் நடத்தியுள்ளது.

ஊர்காவல் படையினரின் விடு தலை தொடர்பாக இதுவரை காலமும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத ஜே.வி.பி., ஊர்காவல் படைவீரர்கள் விடுதலையாகப்போகும் நேரத்தில் இப்படியான போராட்டங்களை நடத்தி, இதில் அரசியல் லாபம் தேட முற்படுவதாக, வடக்கு கிழக்கு சிங்கள மக்கள் முன்னணியின் தலைவர் அனுரா பண்டார குற்றம் சுமத்தியுள்ளார். திருமலையில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டுப்பகுதிக்குள் ஆயுதங்களுடன் நுளைந்தபோது தம்மால் கைது செய்யப்பட்ட இரண்டு ஊர்காவல் படையினரையும் விடுவிப்பதானால், சிறீலங்காப் பொலிஸாராலும், இரா ணுவத்தினராலும் கைதுசெய்யப் பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ள தமது உறுப்பினர்கள் பத்துப் பேரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்திருந்தனர்.



ஐரோப்பிய ஒன்றிய வெளிவிகார பிரதிச் செயலர் குழுவினருடன்

இன்று திங்கள்கிழமை (18.10.04) பெல்ஜியத் தலைநகர் புருசல்ஸில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளையும், பெல்ஜிய பிரதி வெளிவிவகார அமைச்சரை சுப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழுவினர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.



பெல்ஜிய பிரதி வெளிவிகார அமைச்சர் கிறிஸ்றியன் மொன்னேயருடன்

IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 ஈரோ |

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45


சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports
Tel: 0049 -24625557

# முடிவுகள் எட்டப்படாத சந்திப்புக்கள்

கடந்த புதன்கிழமை யாழ் மாவட்டத்தின் புதிய கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுக்கும் அரச சார்பற்ற இணைய பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ் மாவட்ட இணைய அலுவலகத்தில் இடம் பெற்றது. இணைய பிரதிநிதிகளுக்கும், யாழ் மாவட்ட

**இன்றும் முகமாலை சோதனைச் சாவடியில் இராணுவப் புலனாய்வுத் துறையினர் விசாரணை என்ற பெயரில் மக்களைத் துன்புறுத்துகிறார்கள். அல்லைப்பிட்டியிலும் இவ்வாறே நடக்கின்றது. கற்கோவலம் சந்தைக்கு செல்வோர் படையினரிடம் பதிந்தே செல்ல வேண்டும். மீனவர்கள் மீதான பாஸ் கெடுபிடி தொடர்கிறது. இதைவிட விவசாயிகள் மீதான கெடுபிடி தொடர்கிறது.**

படைத்தளபதிகளிற்கும் இடையில் காலத்திற்கு காலம் இவ்வாறான சந்திப்பு இடம் பெற்று வருகின்ற போதும் மக்களின் வாழ்வியலில் இத்தகைய சந்திப்புக்கள் எத்தகைய மாற்றத்தையும் இதுவரை ஏற்படுத்தவில்லை. இத்தகைய சந்திப்புக்களின் பின்னணியில் இரண்டு முக்கியமான விடயங்களை ஆராய வேண்டிய தேவையுள்ளது. ஒன்று யாழ் குடாநாட்டில் புதிதாக பதவியேற்கின்ற படையினரின் மாவட்டக் கட்டளைத் தளபதிகள் இணைய பிரதிநிதிகளை சந்திப்பதற்கான பிரதான காரணம் என்னவென்று பார்த்தால் யாழ் குடாநாட்டில் இராணுவ மக்கள் சார்ந்த அமைப்புக்களுடன் நல்லுறவைப் பேணி வருகிறது. அவர்களை அடிக்கடி சந்தித்து மக்களின் குறைகளை அறிந்து வருகிறது. இராணுவத்திற்கும் குடாநாட்டு மக்களிற்கும் இடையில் நல்லுறவு நிலவுகிறது என்ற மாயத் தோற்றத்தை தங்களது இணையத்தளங்கள் மற்றும் ஏனைய ஊடகங்கள் வாயிலாக நன்கு திட்டமிட்ட ஒழுங்குபடுத்தலின் படி படைத்தரப்பினர் செய்து வருகின்றனர். யுத்தமில்லாத இந்தக் காலப்பகுதியில் ஒரு உள்ளக புலனாய்வு யுத்தமும் வெளியக புலனாய்வு யுத்தமும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்று வருவதுடன் ஒரு ஊடக பிரச்சார யுத்தமும் இரு தரப்பிலும் நடத்தப்படுகின்றது. இந்த வகையில் விடுதலைப் புலிகள் இங்கு நடக்கின்ற உண்மையான சம்பவங்களையே ஆதார பூர்வமாக வெளிஉலகிற்கு தெரியப்படுத்தி வருகிறார்கள். இதனை முறியடிக்கும் யுத்தியாகவே இத்தகைய சந்திப்புக்களை படைத்தரப்பினர் பயன்படுத்த முயற்சிக்கின்றார்கள். இருந்தாலும் படைத்தரப்பின் பொய்யான பிரச்சார யுத்திகள் பெரியளவில் எடுபடாத நிலையே காணப்படுகிற கடந்த காலத் தவறை திருத்தி மக்களுடன் நல்லுறவைப் பேண படையினர் விருப்பம் என கட்டளைத் தளபதி குறிப்பிட்டிருந்தார். கட்டளைத்தளபதியின் இந்தக் கூற்றில் ஒரு உண்மையை வெளிப்படையாகவே அவர் கூறி உள்ளார் கடந்த களங்களில் பல தவறை படையினர் இழைத்துள்ளனர் இதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிராக பமையினர் பல வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டனர். அதனால் தான் தமிழினம் விடுதலை வேண்டி நிற்கின்றது என்ற உண்மையை சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வது அவசியமாகும். அரசியல்வாதி ஒருவர் தாங்கள் தவறு செய்துவிட்டோம் எனக் கூறுவதற்கும் இராணுவத் தளபதி ஒருவர் தாங்கள் விட்டதவறை நேரடியாக வெளிப்படுத்துவதற்கும் இடையில் நிறைய வேறுபாடு உள்ளது. அரசியல்வாதி காலை ஒரு கதை, மாலை ஒரு கதை கதைப்பார்கள். அதுவும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் போக்கு தற்போது இப்படித்தான் உள்ளது. ஆனால் படையினர் நேரம் ஒரு கதை கதைக்க முடியாது. ஆனாலும் அவர்கள் கூறுவதில் மாற்றம் ஏற்படாது என்று சிறீலங்கா இராணுவத்தை உதாரணம் காட்டி எதிர்வு கூற முடியாவிட்டாலும் வெளிப்படையாக தமது குற்றங்களை ஒப்புக்கொள்கின்ற அளவுக்கு அவர்களிற்கே குற்ற உணர்வு உறுத்துகிறதா அல்லது இதுவும் ஒரு அரசியல் தானா என்ற கேள்வி எழுகிறது. எது எப்படி இருந்தாலும் மக்களுடன் நல்லுறவைப் பேணுவோம் என்று அவர் கூறிய கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இன்றும் முகமாலை சோதனைச்



சாவடியில் இராணுவப் புலனாய்வுத் துறையினர் விசாரணை என்ற பெயரில் மக்களைத் துன்புறுத்துகிறார்கள். அல்லைப்பிட்டியிலும் இவ்வாறே நடக்கின்றது. இதைவிட கற்கோவலம் சந்தைக்கு செல்வோர் படையினரிடம் பதிந்தே செல்ல வேண்டும். இதைவிட மீனவர்கள் மீதான பாஸ் கெடுபிடி தொடர்கிறது. இதைவிட விவசாயிகள் மீதான கெடுபிடி தொடர்கிறது.

உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக பல்லாயிரம் குடும்பங்கள் அவல வாழ்வு வாழ்கின்றனர். இதைவிட இன்னும் மக்களின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட நெருக்கடிகள் உள்ளன. இவற்றை நீக்க முடியாத யாழ்குடாப் படைத்தளபதி எப்படி மக்களுடன் நல்லுறவைப் பேண முடியும். இதை முகமாலையில் ஆவது இவரால் அமுல்படுத்த முடியும். அல்லது உயர் பாதுகாப்பு வலயங்களை இவரால் அகற்ற முடியும்.

மக்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்த சிறிதளவும் முடியாத கட்டளைத் தளபதி மக்களின் பிரச்சனைகளிற்கு படைவலுச் சமனிலை குழம்பிவிடும். இப்பிரச்சனைகள் அரசாங்க உயர் மட்டத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் என்ற சாட்டுப் போக்கை சொல்லி நழுவிக் கொண்டு மக்களிடம் நல்ல பெயர் வாங்க முயற்சிப்பதும் சர்வதேச பிரச்சாரமும் தான் படைத்தரப்பின் பிரதான நோக்கம். இதற்காகவே தான் இவர்கள் இத்தகைய சந்திப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

**யுத்தமில்லாத இந்தக் காலப்பகுதியில், ஒரு உள்ளக புலனாய்வு யுத்தமும், வெளியக புலனாய்வு யுத்தமும் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்று வருவதுடன், ஒரு ஊடக பிரச்சார யுத்தமும் இரு தரப்பிலும் நடத்தப்படுகின்றது. இந்த வகையில் விடுதலைப் புலிகள் இங்கு நடக்கின்ற உண்மையான சம்பவங்களையே ஆதாரபூர்வமாக வெளிஉலகிற்கு தெரியப்படுத்தி வருகிறார்கள்.**

அடுத்து நான் மேலே குறிப்பிட்டது போல இரண்டாவது விடயத்தை எடுத்துக் கொண்டால் இணைய பிரதிநிதிகளுக்கும் இத்தகைய சந்திப்புக்களின் மிகவும் அவசியமான ஒன்றாகும். இத்தகைய சந்திப்புகளின் மூலம் இவர்களும் இரண்டு விடயங்கள் முக்கியமானவை ஒன்று மக்களிற்காக கதைக்கின்றோம். அடுத்தது இத்தகைய சந்திப்புக்களை நடத்துவதன் மூலம் இணையத்திற்கான நிதியைப் பெறுவது. இந்த விடயத்தில் இவர்கள் குறிப்பாக இருந்து தமது நகர்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களிற்கே தெரியும் முன்னேற்றமும் மக்களின் வாழ்வியலின் முன்னேற்றம். இதில் முக்கிய பங்கு வகிப்பதால் படையினருடனான சந்திப்புக்கள் இவர்களிற்கு அவசியமாகின்றது.

இதை விட சந்திப்பின் முடிவில் பத்திரிகையாளரிடம் தங்களை விளம்பரப்படுத்துவதும் இவர்களின் பிரதான பணிகளில் ஒன்றாக உள்ளது. மக்களின் நலனில் உண்மையாக இவர்களிற்கு அக்கறை இருக்குமானால் படையினரின் நெருக்கடிகள் காரணமாக அவல வாழ்வு வாழ மக்களின் உரிமைக்காக துணிந்து போராட முன்வரவேண்டும். இந்த துணிவு ஒரு சிலருக்கு வந்தாலும் பலருக்கு வருவதற்கான வாய்ப்பேயில்லை.புதன்கிழமை நடந்த சந்திப்பில் 2112 பேரை உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்த்தியுள்ளோம். இன்னும் 600 பேரை மீளகுடியமர்த்தவுள்ளோம் என இராணுவத் தளபதி கூறிய போதுமௌனமாக இருந்திருக்கிறார்கள். எங்கே 2112 குடும்பங்களை குடியமர்த்தினீர்கள் என்ற கேள்வியைக் கேட்க துணிவு இல்லாமல் படைத்தளபதி கூறியதற்கெல்லாம் தலையசைக்கும் பொம்மையாக இருந்திருக்கிறார்கள். சந்திப்புக்களும் அறிக்கைகளும் தான் இவர்களின் சாதனை. கட்டுரை எழுதுவதற்கு முதல் இணையபிரதிநிதிகளிடம் கேட்டோம். எவ்வளவு மக்கள் உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக மீளக் குடியேறாமல் இருக்கிறார்கள் என்று இதற்கு அவர் சொன்னார் இந்த விபரம் தமக்குத் தெரியாது கச்சேரியில் தான் கேட்க வேண்டும். விபரங்கள் தகவல்கள் இல்லாத நீங்கள் மக்களின் பெயரால் படைத்தரப்புடன் இத்தகைய சந்திப்புகளில் ஈடுபடுவது பொருத்தமாகுமா அல்லது உங்களது இத்தகைய சந்திப்புக்களை மக்களின் வாழ்வியலில் மாற்றம் ஏற்படுமா? சந்தித்து பாருங்கள் முடிந்தால் மக்களை அணிதிரட்டி போராடுங்கள். இல்லையேல் படையினரின் பிரச்சாரத்திற்கு துணை போகாதீர்கள்.

**வே. தவச்செல்வன்**

உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.

சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் **ஆசிரியர் லிங்கம்** அவர்களின் நெறியாள்கையில்
பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
இடம்: **Breitenreinplatz -27, Bern**

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
இடம்: **Eigerplatz, Bern**

தொடர்புகளுக்கு: **Lingam master - 062 79741 64 / 079 334 47 33**

# ttn தமிழ்த் தொலைக்காட்சி இணையம்

**நிகழ்ச்சி நிரல் 21-10-2004 முதல் 27-10-2004 வரை**

### வியாழன்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 இசைச் சிற்பிகள்
11:00 என்றென்றும் புன்னகை
11:30 நாடி
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து

**பன்னீர் நதிகள்**

16:30 பார்த்தேன் பகர்ந்தேன்
17:00 மண்ணின் துளிகள்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 பாடுவோர் பாடலாமம்
21:30 விளையாட்டு
22:00 தாயக வெளியீடு
23:00 சித்திரம் பேசுதடி
23:30 இரவின் தாலாட்டு

### வெள்ளி

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புத்தம் புதுக்காலை சிறப்பு விருந்தினர் நாகை முகந்தன்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
11:00 தாயகவலம்
11:30 படலைக்குப் படலை
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து

**சரஸ்வதி சபதம்**

16:30 ஒளித்தடம் (குறும்படம்)
17:00 ஜேர்மன் நேரம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 நல்லூர் தேர்
23:30 திரைவிருந்து

**தாயே புவனேஸ்வரி**

(புதிய திரைப்படம்)

### சனி

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07.03 புலரும் பூபாளம்
08:00 சைவநிகழ்ச்சி?
08:30 புலரும் பொழுது புலரும்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சொர்க்கம் வாரம்
12:30 பார்தேன் பகர்ந்தேன்
13:00 ஹலிவூட் நேரம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து

**சூரசம்காரம்**

16:30 வெள்ளித்திரை
17:00 நலவாழ்வு
17:30 வண்ணச்சிறகடித்து
18:00 குண்டக்கா மண்டக்கா
18:30 தாயக வலம்
19:00 கலைமுற்றம்
19:30 ஜனனி தொடர்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:00 நையாண்டி மேளம்
21:30 திரைவிருந்து

**தாய்மனசு**

### ஞாயிறு

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07.03 புலரும் பூபாளம்
08:00 கிறிஸ்தவ நிகழ்ச்சி
08:30 விளையாட்டு
09:00 ஒளிக்கீற்று
10:00 வணக்கம் ஐரோப்பா
11:00 நகைச்சுவை நேரம்
11:30 புதினக்கண்ணாடி
12:00 நாவூற வாயூற
12:30 முளைவிடும்பதியன்
13:00 திரைமுகம்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து

**அன்பே அன்பே**

16:30 திரையிசை வரிசை
17:00 சங்கம நிகழ்வு
17:30 ஓவியா
18:00 படலைக்குப் படலை
18:30 ஒளித்தடம் (குறும்படம்)
19:00 வைத்தியலிங்கம் ே?ா
19:30 ஜனனி தொடர்
20:00 செய்தி நேரம்
20:30 ஜலக்கிரீடை
21:30 திரைவிருந்து

**பாமா ருக்மணி**

### திங்கள்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புத்தம் புதுக்காலை சிறப்பு விருந்தினர் புதின பாண்டியன்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 சித்திரம் பேசுதடி
11:00 என்றென்றும் புன்னகை
11:30 தாயகவலம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து

**இமைகள்**

16:30 நினைவலைகள்
17:00 விடுதலைப் பண்கள்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 நோர்வே நேரம்
21:30 திரைவிருந்து

**முன்னறிவிப்பு**

### செவ்வாய்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புலரும் பொழுது புலரும்
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 வெள்ளித்திரை
11:00 வைத்தியலிங்கம் ஷோ
11:30 ஹலிவூட் நேரம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து

**அவசரக் கல்யாணம்**

16:30 புதினக் கண்ணாடி
17:00 இலக்கியச் சோலை
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 கோலிவூட் பார்வை
21:30 தாயகவலம்
22:00 எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா
23:00 செய்திக் கண்ணோட்டம்

### புதன்

07.00 நிகழ்ச்சி ஆரம்பம்
07:03 புலரும் பூபாளம்
08:00 புத்தம் புதுக்காலை சிறப்பு விருந்தினர் டாக்டர் லாவண்யா
08:30 செய்தி நேரம்
09:30 பொங்கும் பூம்புனல்
10:30 திரைமுகம்
11:00 என்றென்றும் புன்னகை
11:30 நையாண்டி மேளம்
12:00 வானவில்
12:30 இன்றைய நேயர்
13:00 நாயகி - தொடர்
13:30 செய்தி நேரம்
14:00 திரைவிருந்து

**இதயவாசல்**

16:30 முளைவிடும் பதியன்
17:00 பாடுவோரா் பாடலாம்
17:30 அப்பாவுக்காக
18:00 மயக்கும்மாலைப் பொழுது
19:00 அவளும் பெண்தானே
19:30 சொர்க்கம்
20:00 செய்தி நேரம்
20:30 கோபுரம்
21:00 சிரிக்கச் சிரிக்க
21:30 ஜன்னலைத் திறந்து வையுங்கள்
22:00 ஆடுகளம்
23:00 திசைகள் எத்தனை

TTN,. 5-7, Rue Emile Zola, 93120 La Courneuve
Tél : 0033 1 48 39 34 29/Fax : 0033 1 48 39 31 36

**த ர ணி எ ங் கு ம் வா ழு ம் த மி ழ ரி ன் பி ம் ப ம்**


## தீபாவளியை முன்னிட்டு

# BASEL மாநகரில் BASEL SPT யின் மாபெரும் மலிவு விற்பனை

காலம் : 30.10.2004 சனி -31.10.2004 ஞாயிறு
இடம் : BASEL VOLKS HAUS மண்டபம்
REBGASSE -14-4058 BASEL

Bahnhof இல் இருந்து 8-ம் இலக்க Tram எடுத்து 7-ஆவது தரிப்பிடம் CLARAPLATZ இல் இறங்கவும். குறிப்பு - Manor ற்கு பின்புறமாகவும் பழைய Jellmoli க்கு அருகாமையிலும் மண்டபம் அமைந்துள்ளது. வெளி City யில் இருந்து வாகனத்தில் வருபவர்கள் Ausfahrt Messe எடுக்கவும். Jellmoli வாகனத்தரிப்பிடத்தில் 300-க்கும் அதிகமான தரிப்பிடம் அமைந்துள்ளது.



| | |
|---|---|
| பஞ்சாபி | 5-SFRல் இருந்து |
| டெனிம் | 5-SFRல் இருந்து |
| சேட் | 5-SFRல் இருந்து |
| சாறி | 7-SFRல் இருந்து |
| T-Shirt | 1-SFRல் இருந்து |
| Audio-CD- | 1-SFRல் இருந்து |
| மணிக்கூடு | 9-SFRல் இருந்து |

**தங்கநகைகள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கல்லு, முத்து, Bombay Design உட்பட ஒன்றுக்குமே கூலி அறவிடப்படமாட்டாது. எடைக்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.**

பாசல் ரவி கடை - 061 / 272 90 30 - 061/272 09 90 - 079/356 22 78

## பத்து விடுதலைப் புலிகளின் விடுதலையைத் தொடர்ந்து

# இரு சிங்கள ஊர்காவல் படையினர் விடுதலைப் புலிகளால் விடுதலை

(16.10.2004)

விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு கடந்த இரு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சிங்கள ஊர்காவல் படை வீரர்களும் இன்று மாலை மூதூர் சம்பூரிலுள்ள தமிழீழ நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்கள்.

நல்லெண்ண அடிப்படையில் இவ்விருவருக்குமான பிணையினை, விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்த்துறை பொறுப்பாளர் எழிலன் பொறுப்பேற்றார்.

கடந்த மாதம் ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஆயுதங்களுடன் பிரவேசித்த போது, கைதுசெய்யப்பட்ட இவர்கள், தமிழீழ நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.



இன்று மாலை சம்பூர் தமிழீழ நீதிமன்ற நீதியாளர் தமிழ்க்கவி முன்னிலையில் இவர்கள் இருவரும் ஆஜர்படுத்தப்பட்ட போது தலா ஒரு லட்சம் ரூபா ரொக்கம் மற்றும் ஒரு லட்சம் ரூபா ஆட் பிணையிலும் செல்ல நீதிமன்றம் இவர்களை அனுமதித்தது.

இவர்கள் இருவருக்கும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டஅரசியல் துறை பொறுப்பாளர் எழிலன் பிணையை பொறுப்பேற்றார்.

இவர்களுக்குரிய பிணைப் பணத்தை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் செலுத்தும் என்றும் அவர் தெரிவித்ததையடுத்து இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதனையடுத்து எழிலன் இருவரையும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில் ஊர்காவல் படை வீரர்களின் மனைவிமாரிடம் கையளித்தார்.

இதன் பின்பு ஊர்காவல் படை வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்த் துறையினரால் தேநீர் உபசாரம் வழங்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்ட ஊர்காவல் படை வீரர்களை மூதூர் பொலிஸ் நிலையத்தில் வைத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தயா சமரவீர வைபவ ரீதியாகப் பொறுப்பேற்று திருகோணமலை கடற்படைத் தலைமையகத்திற்கு அழைத்துச் சென்றார்.




வடமராட்சி நெல்லியடியில் இன்று ஞாயிற்றுக்கிழமை அலை பாடும் பரணி எனும் இசைத் தட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது. நெல்லியடி முருகன் ஆலயத்தில் இவ் வெளியீட்டு விழா இடம்பெற்றது. தர்மேந்திர கலையகத்தினரால் தயாரிக்கப்பட்ட இவ் இசைத்தட்டு பாடல்களுக்கு, இசைப்பிரியன் இசை வழங்கியுள்ளார். கடற் புலிகளின் காவியத்தை சொல்லும் பாடல்களை உள்ளடக்கி இவ் இசைத்தட்டு வெளிவந்துள்ளது.

## எம்மைக் கைதிகள் போன்று நடத்தாமல், விடுதலைப் புலிகள் எம்மை நல்லமுறையில் நடத்தினர்:

### ஊடகவியலாளர்களிடம் விடுதலையான ஊர்காவல் படையினர்

17.10.2004

எமது கைது முதல் விடுதலை வரை விடுதலைப் புலிகள் சிறைக் கைதிகளாக எம்மை நோக்காமல் இவர்கள், படிப்பதற்கு சிங்கள பத்திரிகைகளும் வானொலி கேட்பதற்கு அதற்கான வசதிகளும் தங்களுக்கு செய்து தரப்பட்டன



நட்புறவுடன் நடந்து கொண்டார்கள் என விடுதலையான சிங்கள ஊர்காவல் படை வீரர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

தமது கைதை, அரசியல் லாபம் தேடும் நோக்கில் சில சக்திகள் பயன்படுத்தியதையும், விடுதலையான ஊர்காவல் படையினர் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு நேற்று மாலை விடுதலையான கோமரங்கடவளையைச் சேர்ந்த ஊர்காவல் படை வீரகளான சந்தன பண்டார மற்றும் சமிந்த பியசிறீ ஆகியோர் இதனை தெரிவித்துள்ளார்கள்.


தாங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் நன்றாக பராமரிக்கப்பட்டதாகத் தெரிவித்த என்றும் தெரிவித்தனர்.

சந்தன் பண்டார என்ற ஊர்காவல் படை வீரர் கருத்து தெரிவிக்கையில்,

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணை அறிவிப்பு வெளியான போது யார் பிணை எடுப்பார்கள் என ஏங்கினோம். ஆனால் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் பிணை எடுக்க முன்வந்தது அவர்களது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளது.

வறிய குடும்பங்களைச் சேர்நத எங்களுக்கு அவர்களது சமாதான செயலகம் ஊடாக ரூபா ஒரு லட்சம் பிணைப் பணத்தை செலுத்தியிருப்பதையும்,

அவர்களது இந்த பண்பையும் எங்களால் மறக்க முடியாது என்றும் அதற்காக நாங்கள் நன்றியுடைவர்கள் என்று தெரிவித்தார்.







மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்

Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

மோகன் ஜுவல்லர்ஸ்

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes
என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

MOHAN JEWELLERS & TEXTILES
Elisabethen anlage 25
4051 Basel
Tél - 061 271 41 09
Fax - 061 271 41 17
WWW.mohantextiles.com

# செய்தித் துளிகள்

▸▸ மட்டக்களப்பு ஏறாவூர் தொடருந்து நிலையத்தில் கடந்த 18ம் திகதி ஞாயிறு இரவு முஸ்லிம் இளைஞரொருவர் ரி-56 ரக துப்பாக்கியுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஏ.எம்.மொகமட் பரீட் என்ற இந்த இளைஞர் ஆயுதங்களுடன் பயணம் செய்வதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்து சென்ற பொலிசார் இவரை கைது செய்துள்ளனர். பொலன்னறுவை கல்லல்ல பகுதியில் இந்த ஆயுதத்தை விற்பனை செய்வதற்காக மட்டக்களப்பு - கொழும்பு இரவு தொடருந்தில் பயணம் செய்யவிருந்த சமயம் கைது செய்யப்பட்டுள்ளார்.

▸▸ கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திலுள்ள வயல்வெளியொன்றில் மேலும் 2 மனித எலும்புக் கூடுகள் விவசாயிகளினால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கடந்த 16ம் திகதி நெல் விதைப்பிற்காக உழவு இயந்திரத்தின் மூலம் வயலில் உழுது கொண்டிருந்த சமயம் இவை கண்டெடுக்கப்பட்டன. 1991ம் ஆண்டு காலப் பகுதியில் இப்பகுதியில் சிறீலங்கா இராணுவம் நிலை கொண்டிருந்ததாகவும், விடுதலைப் புலிகளின் தாக்குதலின் போது கொல்லப்பட்ட இராணுவ வீரர்களுடைய மனித எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. கடந்த வாரமும் இதே இடத்தில் மனித எலும்புக் கூடொன்று கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

▸▸ தமிழ் நாட்டிலிருந்து மேலும் 14 ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளார்கள். இந்திய மீன்பிடி வள்ளமொன்றில் அழைத்து வரப்பட்ட இவர்கள் தலைமன்னார் உருமலைப் பகுதியில் இறக்கி விடப்பட்டுள்ளார்கள். சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்த அகதிகள் தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். இவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்த பொலிசார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது, நீதிபதி இவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார்.

▸▸ கருணா குழுவால் கைதுசெய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் இருவர் வெவ்வேறு நாள்களில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மண்டூர், அம்பலவத்தையைச் சேர்ந்த கறுவல்தம்பி கணேசலிங்கம் என்பவர் கடந்த மார்ச் மாதம் 31ம் திகதியும் - வந்தாறுமூலையைச் சேர்ந்த சண்முகம் ஜேந்திரன் என்பவர் கடந்த ஏப்ரல் மாதம் 11ம் திகதியும் - கருணா குழுவால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் வஞ்சகத் தனமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் - என்று புலிகளின் குரல் தனது செய்தியில் தெரிவித்திருந்தது.

▸▸ கொக்குவில், பிரம்படிப் பகுதியில் 1987ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12ம், 13ம் திகதிகளில் இந்திய இராணுவத்தினரால் கோரமான முறையில் படுகொலைசெய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 17ம் ஆண்டு நினைவு தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரம்படியிலுள்ள ஞாபகார்த்த நினைவுத் தூபியில் இடம்பெற்றது. சர்வதே தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவு தின நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழியும் யாழ்.நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியனும் மற்றும் மாணவ பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் ஏற்றினார்கள். நினைவுத் தூபிக்கான ஈகச்சுடரினை படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் உறவினர்கள் மற்றும் கிராம அலுவலர்களான என்.நவரட்ணராஜா, வ.சந்திரசேகரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

▸▸ பொலன்னறுவைக் காட்டுப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த - கருணாவின் சகோதரர் ரெஜியும் அவரது சகாக்களும் தங்கியிருந்த இடத்தில் தொகையான ஆயுதங்கள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை பொலன்னறுவைக் காட்டுப் பகுதியான கந்தேகம என்ற இடத்தில் இரகசியமாக அமைக்கப்பட்டிருந்த முகாம் ஒன்றை அரலகங்வில பொலிசார் சுற்றிவளைத்தனர். அந்த முகாமுக்குள் ஒருவரும் இருக்கவில்லை. கைவிடப்பட்ட நிலையில் இருந்த எம்.16 ரகத் துப்பாக்கி, கைக்குண்டுகள் மூன்று, நான்கு மகஸின்கள், தொலைநோக்கிக் கருவிகள், மழைக்கவசங்கள், குளிருக்குப் பயன்படுத்தப்படும் ஆடைகள், டோர்ச விளக்குகள், தமிழில் எழுதப்பட்ட ஆவணங்கள், தொலைத்தொடர்பு கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

▸▸ பாரம் தூக்கியில் கட்டப்பட்டிருந்த சங்கிலி அறுந்து விழுந்ததில் அதில் ஏற்றப்பட்ட பொருள்களுள் நசியுண்டு இலங்கையர் ஒருவர் உட்பட நால்வர் டோகாவில் உயிரிழந்தனர். கடந்த 3ம் திகதி நடைபெற்ற இந்தப் பரிதாபச் சம்பவத்தில், நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இராமலிங்கம் செளந்தரராசன் (43) என்பவரும், இவருடன் பணிபுரிந்த இந்தியர்கள் மூவரும் பலியாகினர். இதேவேளை - இச்சம்பவத்தில் பலியான செளந்தரராசனின் மரணத்தைக் கேள்வியுற்ற மாமியாரான முத்துவேலு மனோன் மணி (72) என்பவர் அதிர்ச்சியினால் உடனடியாக மரணமானார். இவர் ஏற்கனவே சுகவீனமடைந்திருந்தவர் என அவரது உற வினர்கள் தெரிவித்தனர்.


தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியமாய்...

பூபாளம் பொத்தகசாலை

தாயக வெளியீடுகள்,
அரசியல், கவிதை, அறிவியல்,
சார்ந்த நூல்கள்,
தமிழக, கொழும்பு
சஞ்சிகைகள், பத்திரிகைகள்.......




விற்பனையில்...

01) நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)
02) தமிழ்ப்பெயர்க் கையேடு
(மக்கட்பெயர் - 46, 000)

இவற்றுடன் மலிவு விலையில் பல சஞ்சிகைகள் (1.00, 0.50)

22, Rue Perdonnet,
75010 Paris,
France.
Tél: 01 40 05 95 15




"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)

"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland

Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

## 'போரும் சமாதான...

(24ம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சிகரத் தமிழ் இளம் சமூகம் தள்ளப்பட்டது. 1970களின் ஆரம்பத்தில் தீவிரவாத தமிழ் இளைஞரின் அரசியல் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின. இப்புறநிலையில், எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு, ஒரு தலைமறைவு கெரில்லா போராட்டக் குழு என்ற நிலையிலிருந்து, எவ்வாறு தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாகப் படிநிலை வளர்ச்சியை எய்தியது என்பதை இந்நூல் விபரமாக எடுத்து விளக்குகின்றது.

1983ம் ஆண்டு யூலைக் கலவரத்தை அடுத்து, தமிழரின் இனப் பிரச்சினையில் இந்தியா தலையிட்ட கொந்தளிப்பான கால கட்டத்தையும், இக்கால விரிப்பில் இந்திய அரசு மேற்கொண்ட அரசியல், இராணுவ, இராஜதந்திர நகர்வுகளையும், இவற்றின் ஒட்டுமொத்த விளைவுகளால் விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர்கொண்ட சிக்கலான பிரச்சினைகளையும், சவால்களையும் ஒரு நீண்ட அத்தியாயத்தில் திரு. அன்ரன் பாலசிங்கம் விபரித்துக் கூறியுள்ளார்.

இந்திய மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த திம்புப் பேச்சுக்கள், பெங்களூர் பேச்சுக்கள் ஆகியவற்றில் விடுதலைப் புலிகள் பங்குபற்றியும், 1987ம் ஆண்டு யூலையில் செய்து கொள்ளப்பட்ட இந்தியா - சிறீலங்கா ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும் இப்பகுதியில் ஆழமாக ஆராயப்படுகின்றது.

இந்தியாவின் மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த பேச்சுக்கள் தொடங்கி, நோர்வேயின் அனுசரனையுடன் நடைபெற்ற சமீபத்திய பேச்சுவார்த்தைகள் வரை விடுதலைப் புலிகள் கலந்து கொண்ட சகல சமரச முயற்சிகளும் இந்நூலில் தரப்படுகின்றது. நோர்வே அரசின் அனுசரனையுடன் பல உலக நாடுகளின் தலைநகரில் நடைபெற்ற ஆறுகட்ட சுற்றுப் பேச்சுக்களின் விபரங்களையும், அவற்றின் குறை, நிறைகளையும் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் திரு. அன்ரன் பாலசிங்கம் இந்நூலில் விளக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ, அரசியல் போராட்ட வரலாற்றை தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் அடித்தளமாக சித்தரித்து எழுதப்பட்டுள்ள இப்புதுமையான வரலாற்று ஆய்வு நூலில் இதுவரை வெளிவராத முக்கிய தகவல்களும், கருத்துருவாக்கங்களும் அடங்கியுள்ளன. தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும், அக்கறையும் கொண்ட அனைவரும் படித்தறிய வேண்டிய புரட்சிகரமான படைப்பு இது. இந்நூலின் விலை 15 ஸ்டேலிங் பவுண்ஸ். தபாற் செலவு 3 ஸ்டேலிங் பவுண்ஸ். இந்நூலைப் பெற விரும்புபவர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

*Fairmax Publishing Ltd.*
*P.O.Box 2454 Mitcham*
*CR 4, 1WB*
*LONDON U.K*

## நிரந்தரக் கட்டட...

(24ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வுக்கழகம் பல வழிகளிலும் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்களிடம் முன்பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு உதவி கோருகின்ற போது கட்டடங்கள் அமைப்பதற்கு தம்மிடம் நிதி இல்லை என்றும் தங்களால் முன்பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவு வழங்குவது போன்ற உதவிகள் மட்டுமே செய்ய முடியும் என்றும் கூறிவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட தொகை நிதியினை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத் திரைப்...

(24ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு, நாட்டின் அனைத்துத் திரையரங்குகளையும் நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், அதற்காக திரையரங்க, உரிமையாளர்களுக்குத் தரத்திற்கேற்ப கடன் வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

எனினும், தே.தி.கூ.ஆல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி முயற்சி நடவடிக்கைகள் நாட்டின் பல பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், வட - கிழக்குப் பிரதேசங்களில் அவை நடைபெறுவதில்லை. இனிவரும் காலங்களில் அதற்கான முயற்சிகள் நடைபெறும். மேலும், இப்புதிய முயற்சியினால் பல இளைஞர்களின் சினிமாக் கனவுகள் நிறைவேற்றப்படுவதுடன், பலருக்குத் தொழில் வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்க முடியும். புதிய கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக, நவம்பர் மாதம் முதலாவது வாரம் முதல் சினிமாக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், அதில் சிறந்தவராகத் தேர்ந் தெடுக்கப்படும் ஒருவர் மேலதிக பயிற்சிக்காக பம்பாய் அரசாங்கத் திரைப்படக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பப்படவுள்ளார் என்றார்.

## கனேடிய...

(24ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு கூடியிருந்த பத்திரிகையாளர்களுடன் உரையாட இருமுறை முயற்சித்த போதிலும் அவரால் கதைக்க முடியவில்லை. அவர் கண்ணீர் சிந்தி தேம்பி தேம்பி அழுதார்.

இதேவேளை, மற்றுமொரு சந்தேக நபரான விஜயராஜ் மாணிக்கவாசகர் என்ற 23 வயது இளைஞரைப் பொலிசார் தேடி வருகின்றனர். இவரைக் கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இதேவேளை, இவர் `புலட்' மற்றும் விஜேய் போன்ற புனைபெயர்களுடன் நடமாடி வந்ததாக தெரிவிக்கும் பொலிசார் இவர் போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கை, இங்கிலாந்து அல்லது அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச் சென்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர். இவ் விருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் இவர்கள் இருவருக்கும் அதியுச்ச தண்டனையாக மரண தண்டனை வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரை சுட்டுக்கொன்று தானும் தற்கொலை

## சிறீலங்கா பொலிசாரின் வெறியாட்டம்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரை சுட்டுக்கொன்று தானும் தற்கொலை செய்துகொண்டுள்ளார் சிறீலங்கா பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர். நீர்கொழும்பு தலுபொத்த என்ற இடத்தில் இந்தச் சம்பவம் கடந்த 16ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. கொல்லப்பட்டவர்கள் குறிப்பிட்ட கான்ஸ்டபிளின் மனைவியின் உறவினர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் மற்றொரு இளைஞர் காயமடைந்துள்ளார்.

நீர்கொழும்பு நகரிலிருந்து 3 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள தலுபொத்த என்ற ஊரில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரே கொல்லப்பட்டனர். நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் திலகரத்தின என்ற பொலிஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கிச் சூட்டுக்கே இவர்கள் இரையாகியுள்ளனர். எச்.ஏ. தர்மபால (55), பேபி வில்லியம் (53), வாசனா தில்சான் (20), தினுசினி வாசனா (12), பபிதா பெர்னான்டோ (42) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

கொல்லப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தனக்குச் சூனியம் செய்துவருகின்றனர் என இவர் தனது சகாக்களுக்கும் மனைவிக்கும் அடிக்கடி கூறிவந்துள்ளார். சம்பவதினத் தன்று இரவு நேரக் கடமையில் இருந்த இவர் பொலிஸ் நிலையத்திலிருந்து யாருக்கும் தெரியாமல் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு தலுபொத்தையில் உள்ள தர்மபாலாவின் வீட்டுக்குச் சென்று நித்திரையில் இருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளார். பின்னர் தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமுற்ற 12 வயதுச் சிறுவன் தினேஸ்குமார ஆபத்தான நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

## மட்டக்களப்பு வாழைச்சேனையில் இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இருவர் படுகாயம்.

மட்டக்களப்பு வாழைச்சேனை கறுவாக்கேணியிலும் 14ம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாகிச் சூட்டுச் சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரவு 8 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் தேவநாயகம் சுதர்சன் (20) என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் எதிர்கொண்ட நபரொருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதேபோன்று மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், வாழைச்சேனை விநாயகபுரத்தில் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு வாழைச்சேனை விநாயகபுரத்தில் 14ம் திகதி இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நெஞ்சில் தப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள செல்லத்துரை ஆனந்தன் (வயது 32) என்ற இந்த நபர் தனியார் மதுபான உற்பத்தி நிறுவனமொன்றில் பணியாற்றுபவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இரவு 8.15 மணியளவில் இவரது வீட்டிற்குச் சென்ற இனந் தெரியாத நபர்கள் இருவர் கடிதமொன்று தர இருப்பதாகக் கூறி வெளியே வருமாறு அவரை அழைத்து துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்கள்.இச் சமபவம் குறித்து வாழைச்சேனை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நித்தி வாகன சேவை

உங்கள் வீட்டுத் தளபாடங்களை பெரிய (20M³) வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி : 01 48050214/06 13342518/06 07348051

மங்கையர் மனம் கவரும் அசல் 22கரட் தங்க நகைத் தெரிவுகளுக்கு

KMS JEWELLERS

6, Rue Perdonnet (கே.எம்.எஸ் ஜுவெலர்ஸ்)
75010 Paris
Métro : La Chapelle
Tèl : 01 44 72 08 02 - Fax : 01 44 72 04 78 - Port : 06 61 86 08 02

Restaurant Tharsana's

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.



தர்ஷனா & பிரஷா உணவகங்கள்

இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்



Restaurant Prassah
Gastronomiques Indiennes

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

உங்கள் உயர்வுக்கும் நம்பிக்கைக்கும் விரைவான சேவைக்கும் SBZ Bern

**காப்புறுதிகள் Insuracce A-Z & Credit**

*வாகனம், மருத்துவம், சட்டம், வீடு, தொழில்த்தாபனங்கள், விபத்து, ஆயுள், குழந்தைகளுக்கான சேமிப்புகள், இலாபம் தரும் பணமுதலீடுகள்...
*வங்கிக்கடன், சட்ட ஆலோசணை, வருமானவரி விளக்கம், B, C, CH அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு(குறிப்பு : B அனுமதிப்பத்திரத்திற்கு நீங்கள் செலுத்திய வரியில் கணிசமான தொகையை திருப்பி எடுத்துத்தருகின்றோம்)
*விளம்பரப் பிரதிகள், வாழ்த்து மடல்கள், அனைத்துக் கிராபிக்குகள், போட்டோ பிரதிகள் (Photo Copie) மிகச் சிறந்த முறையில் குறைந்த செலவில் பிரதி செய்து தரப்படும்.
*நாம் சுவழஸ் தலைசிறந்த காப்புறுதிஸ்தாபனங்களில் உங்களுக்குத் தேவையான அனைத்துக் காப்புறுதிகளையும் தகுந்த ஆலோசனையுடனும், உத்தரவாதத்துடன் செய்து தருகழன்றோம்.

மேலதிகத் தொடர்புகட்கு : சண்ரவி
Sunravi Beratungd Zentrum
Scheuemattweg
CH - 3007 Bern

Telefon : 031 371 84 30
Telefax : 031 371 84 31
Hotline : 079 328 31 12
E-mail : sunravi.sbz@luewin.ch

தங்களின் திருப்தியே எங்களின் மகிழ்ச்சி!

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr
w w w . p o o b a l a m . c o m

வீடு வாங்குதல்—விற்றல்—முதலீடு செய்தல்

- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய — பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்



முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# தமிழகத் திரைப் படங்களின் ஆக்கிரமிப்பைத் தடுக்குமாறு சிறீலங்கா கலாச்சார அமைச்சர் வலியுறுத்தல்

(17.10.04)

இலங்கையில் 1983ம் ஆண்டின் பின் ஒரு தமிழ்த் திரைப்படம் கூடத் தயாரிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத், இந்தியத் தமிழ்த் திரைப்படங்களுக்கு இணையாக தரமான தமிழ்ப் படங்களை இலங்கையில் தயாரித்தால் மட்டுமே இந்தியப் படங்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தலாம் எனவும் தெரிவித்தார்.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது பற்றிய செய்தியாளர் மாநாடு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று கடந்த வியாழக் கிழமை நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் சிங்களத் திரைப்படங்கள் பல தயாரிக்கப்பட்டிருந்தாலும், ஒரு சில தமிழ்த் திரைப் படங்களே தயாரிக்கப்பட்டுள்ளதோடு, குறிப்பாக, 1983ம் ஆண்டின் பின்பு ஒரு இலங்கைத் தமிழ்ப் படம் கூட வெளியாகவில்லை. இதனால் திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் போன்ற இடங்களில் பல, திரையரங்குகள் மூடப்பட்ட நிலையிலுள்ளன. அத்தோடு, வெளிநாட்டுத் திரைப்படங்களின் ஆதிக்கத்தால், இலங்கையில் தயாரிக்கப்படும் சிங்களத் திரைப்படங்களும் கூட பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அத்தோடு, இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் தமிழ்த் திரைப் படங்களின் ஆக்கிரமிப்பால் இலங்கையில் தமிழ்த் திரைப்படங்களின் தயாரிப்பு முழுமையாகவே அற்றுப் போயுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்தி, இலங்கையின் தமிழ்த் திரைப்படத்துறையை வளர்க்கும் முகமாகவே தே.தி.கூ.இன் தமிழ்ப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமாயின், இந்தியத் திரைப்படங்களுக்கு இணையான தரமிக்க படங்களை உருவாக்க வேண்டும். அதற்காகத், திரைப் படத் தயாரிப்புக்கு வேண்டிய நவீன கருவிகள் இந்தியாவில் இருந்து தருவிக்கப்படவுள்ளதுடன், இங்கிருக்கும் பழைய கருவிகளை நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# கனேடிய யுவதி கொலை தொடர்பாக இலங்கை, இந்திய இளைஞர்கள் கைது

(18.10.04)

கனடாவின் பிரம்ரன் நகரில் கடந்த மார்ச் மாதம் 19ம் திகதி இடம்பெற்ற 20 வயது கனடா யுவதியொருவரின் படுகொலை தொடர்பில் கனடிய பொலிசாரால் இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரும் இந்தியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னுமொரு இலங்கை தமிழர் பொலிசாரினால் தேடப்பட்டு வருகிறார். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, கடந்த மார்ச் மாதம் 19ம் திகதி மேற்படி கனடிய யுவதியும் அவரது சகோதரரும் இரவு விடுதியொன்றிற்கு சென்றிருந்தனர். அங்கு நடைபெற்ற நடன நிகழ்ச்சியின் போது, மேற்படி யுவதியின் சகோதரர் மேற்படி குற்றவாளிகளுடன் தவறுதலாக மோதுண்டுள்ளார். இதையடுத்து எழுந்த வாய்த் தர்க்கத்தினையடுத்து மேற்படி இரு இளைஞர்களும் அவரது நண்பரொருவரும் இணைந்து மேற்படி யுவதியின் வீட்டுக்குச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் வாயிலும் வயிற்றிலும் காயமடைந்த அந்த யுவதி அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். இதையடுத்து இலங்கையைச் சேர்ந்த நவனிதன் குணநாதன் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஜெயராம் சிங் ஆகியோரை பொலிசார் கைது செய்தனர். இவர்கள் இருவரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்களில் ஜெயராம் சிங்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# நிரந்தரக் கட்டட வசதிகள் இன்றி கிளிநொச்சியில் 110 முன்பள்ளிகள்!


கிளிநொச்சி மாவட்டத்தில் 110 முன்பள்ளிகள் நிரந்தரக் கட்டட வசதிகள் இன்றி இயங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் 156 முன்பள்ளிகள் இயங்கி வருகின்ற போதிலும் அவற்றில் 46 முன்பள்ளிகளுக்கே நிரந்தர கட்டடங்கள் உள்ளன. ஏனைய நூற்றிப்பத்து முன்பள்ளிகளும் தற்காலிகக் கொட்டகைகளிலும் பொது இடங்களிலும் இயங்குகின்றன. நிரந்தரக் கட்டடமில்லாமல் உள்ள முன்பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துக் கொடுப்பதற்கு தமிழர் புனர்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# ‘போரும் சமாதானமும்’

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய புதிய நூல் வெளிவந்துள்ளது

(18.10.04)




தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் எழுதியுள்ள ‘போரும், சமாதானமும்’ (War And Peace) என்ற ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரசியல், வரலாற்று ஆய்வு நூல் வெளிவந்துள்ளது. 514 பக்கங்களைக் கொண்ட இப்புதிய ஆய்வு நூல், தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணயப் போராட்ட வரலாற்றினை ஆழமாகவும், துல்லியமாகவும் எடுத்து விளக்குகின்றது.

தமிழீழ மக்களின் சுதந்திர இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்பு முன்னெடுத்த புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சி பற்றிய வரலாற்று ஆய்வுடன், விடுதலைப் புலிகள் கலந்து கொண்ட சமரச முயற்சிகள், பேச்சுவார்த்தைகள் பற்றிய விமர்சனக் கண்ணோட்டங்களும் இந்நூலில் வெளிவந்துள்ளது.

போர்க் களத்திலும், சமாதான அரங்கிலும் தமிழரின் உரிமைப் போராட்டத்தினை விடுதலைப் புலிகள் எவ்வாறு முன்னெடுத்துச் சென்றனர் என்பதை ‘போரும், சமாதானமும்’ என்ற இந்நூலில் திரு. அன்ரன் பாலசிங்கம் விரிவாக விளக்கியுள்ளார்.

இந்நூலின் முதற்பகுதி தமிழ் தேசியத்தின் தோற்றம், வளர்ச்சி, எழுச்சி பற்றிய ஒரு வரலாற்றுப் பார்வையை முன்வைக்கின்றது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து சிங்கள் அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்களும், அவற்றுக்கு எதிராக தொடுக்கப்பட்ட அமைதி வழி அரசியல் போராட்டங்களும் எவ்விதம் தமிழ் தேசியப் பற்றுணர்வை தட்டி எழுப்பி, தமிழ் மக்களை ஒன்றுபட்ட தேசிய சக்தியாக உருவாக்கியது என்பதை இப்பகுதியில் விபரமாக எடுத்துக் கூறப்படுகின்றது.

அமைதி வழிப் போராட்டங்கள் சிங்கள் ஆயுதப் படைகளினால் ஒடுக்கப்பட்டதை அடுத்து, மூர்க்கமாக எழுந்த அரச வன்முறைக்கு எதிராக, வன்முறைப் பாதையை நாடவேண்டிய சூழ்நிலைக்கு

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

PHONE 2000

Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.

LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE

SFR

இணைய வலையத்துடன் கூடிய தொலைபேசி அழைப்பும் (ADSL) 29.90 மட்டுமே. * France எல்லைக்கட்டுப்பாட்டுக்குள் உள்ள இடங்களுக்கு மட்டுமே.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| PHONE 2000<br>2, Rue Perdonnet,<br>75018 Paris.<br>☎: 01 40 05 03 43<br>Fax: 01 40 05 03 53<br>M°: La Chapelle | PHONE 2000<br>85, Rue des Pyrénées,<br>75020 Paris.<br>☎: 01 40 09 13 15<br>Fax: 01 40 09 01 31<br>M°: Maraîchers | PHONE 2000<br>19, Rue du Labat,<br>75018 Paris.<br>☎: 01 42 58 55 40<br>Fax: 01 42 58 55 46<br>M°: Marcadet Poissonniers | PHONE 2000<br>Informatique<br>87, Rue des Pyrénées,<br>75020 Paris.<br>M°: Maraîchers<br>Tél: 06 20 21 11 11 | PHONE 2000<br>4, Rue de Cail,<br>75010 Paris.<br>☎: 01 40 05 93 28<br>Fax: 01 40 05 97 03<br>M°: La Chapelle ou Gare du Nord | PHONE 2000<br>5, Bld. davout,<br>75020 Paris.<br>☎: 01 43 71 40 30<br>Fax: 01 40 09 01 31<br>Mobile: 06 17 17 28 17<br>M°: Porte de Vincennes |

Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11